பக்கங்கள் : இருபத்து நான்கு Viber : 076 636 3378

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

Valampurii

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
dishtv
SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்சினியர்ஸ்
இல. 56/15 ஸ்ராணிலி வீதி ஒழுங்கை,
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-3468)

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆடி 29 செவ்வாய்க்கிழமை (14.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 238

பஸ்ஸை அடித்து நொருக்கி தீக்கிரையாக்கவும் முயற்சி

அச்சுவேலியில் வாள்வெட்டு குழு அடாவடி

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வடக்குப் பகுதியில் நேற்று முன் தினம் இரவு தனியார் பஸ் ஒன்று வாள்வெட் டுக் குழுவினரால் அடித் துச் சேதமாக் 24

யாழ்.குடாநாட்டு வன்முறை தொடர்பில் 29 பேர் கைது

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அண் மையில் இடம்பெற்ற வாள் வெட்டுகள் உள்ளிட்ட வன் முறைச் சம்பவங்கள் தொடர் பாக, 29 பேர் கைது செய்யப் பட்டுள்ளதாக. 24

நிலமீட்பு போராட்டத்தில் யாரையும் நம்ப மாட்டோம்

கேப்பாப்பிலவு மக்கள் ஆதங்கம்

(முல்லைத்தீவு)

தமது சொந்த நிலத் தினை மீட்பதற்கு இனி மேல் யாரையும் நம்பப்போவ தில்லை என கேப்பாப்பிலவு மக்கள் ஆதங்கம் வெளியிட் டுள்ளனர்.

கேப்பாப்பிலவு மக்களின் நிலமீட்புப் போராட்டம் 533 நாட்களைக் கடந்துள்ள நிலை யில், இது தொடர்பாக நேற்று திங்கட்கிழமை ஊடகங்களுக் குக் கருத்துத் தெரிவிக்கை யிலேயே அவர் 24

பாகிஸ்தான் கப்பல் இலங்கை விஜயம்

(கொழும்பு)

பாகிஸ்தான் கடற்படைக்கு சொந்தமான "டெசிக் பீ.எம். எஸ்.எஸ்" காஷ்மீர் கப்பல் நல் லெண்ண விஜயம் மேற் கொண்டு நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

நான்கு நாட்கள் பயணத் துக்காக வருகை 24

இலங்கை அரசுக்கு அமெரிக்கா நிதியுதவி

(கொழும்பு)

இலங்கைக்கான வெளி நாட்டு இராணுவ நிதித் திட் டத்தின் கீழ் 39 மில்லியன் டொலர் நிதியுதவி இலங் கைக்கு வழங்கப்படவுள்ள தாக அமெரிக்க வெளியுறவுத் துறை அறிவித்துள்ளது.

அமெரிக்க காங்கிரஸின் அனுமதியின் கீழ் 24

ஜனாதிபதி மக்கள் சேவை யாழில்

எதிர்வரும் 24 திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மக்கள் சேவை திட்டத்தின் நடமாடும் சேவை எதிர்வரும் 24 ஆம் திகதி யாழ் மாவட்டத்தில் ஆரம்பிக் கப்படவுள்ளது.

இந்த நடமாடும் சேவை யின் ஊடாக பொது 23

தமிழர்களின் காணி விடுவிப்பு தொடர்பில்

ஐரோப்பிய ஒன்றியம் கேள்வி ; வரிச்சலுகைக்கு இது முக்கியமானது

வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன

(வவுனியா)

இராணுவ வசமுள்ள தமிழர்களின் காணி கள் விடுவிப்பு தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் கேள்வி கேட்பதாக தெரிவித் துள்ள வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப் பன இது வரிச்சலுகைக்கு முக்கியமானது என தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

அந்நிய செலாவணி வருமானத்தை நாட்டில் பலப்படுத்த வேண்டும்

பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

கடன் சுமையுடன் கூடிய பொருளாதாரத்தை பொறுப் பேற்றதன் காரணமாக மக்கள் மீது அதிகளவான பாரத்தை சுமத்தி வரிகளை அதிகரிக்க வேண்டிய நிலை 24

சபாநாயகரை ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும்

நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில

(கொழும்பு)

சபாநாயகர் கூட்டு எதிர்க்கட்சியை, எதிர்க் கட்சியாக ஏற்றுக்கொள்ள தயாரில்லை என்றால், சபாநாயகரைத்தான்ஏற் றுக்கொள்ள 24

கல்வி நிர்வாக சேவை; அதிபர் சேவையில் தரம் ஒன்றுக்கு பதவி உயர்வு

பெயர் விபரம் வெளியாகியது

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர் வாக சேவையில் முதலாம் தரத்திற்குப் பதவி உயர்வு பெற்றவர்களின் பெயர் விப ரங்களை இலங்கை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதேபோன்று இலங்கை அதிபர் சேவையில் அதிபர் தரம் ஒன்றுக்குப் பதவி உயர்வு பெற்றவர்களின் பெயர் விபரங்களையும் கல்வி அமைச்சு அறிவித் துள்ளது. (ம)

யாழ்.சிறைச்சாலை கட்டுமானப்பணிகளை உடனடியாக நிறுத்தி வழக்கு தொடர்க

யாழ்.பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகர் மத்தியில் அனு மதி இன்றி நிர்மாணிக்கப் பட்ட யாழ் சிறைச்சாலையின் கட்டுமானப்பணிகளை நிறுத்து வதுடன்குறித்த சிறைச்சாலைக்கு எதிராக வழக்கு தொடருமாறு யாழ் பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ் நகரின் மத்தியில் (J/81) எதுவித அனுமதியு மின்றி காணி உரித்து ஆவ ணமின்றி கடந்த கால அர சில் சிறைச்சாலை நிர்மாணிக் கப்பட்டுள்ளது. தற்போது அங்கு 600 கைதிகள் சிறைவைக்கப் பட்டுள்ளார்கள். 24

மோட்டார் சைக்கிள் விபத்து 3 பிள்ளைகளின் தந்தை பலி

சித்தன்கேணியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி மதவடி சந்தியில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தி னம் பரிதாபமாக உயிரிழந் துள்ளார்.

இதில் சுழிபுரம் மூளாய் மத்தியை சேர்ந்த தம்பி ராசா ரவீந்திரன் (வயது 40) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவரா வார்.

நேற்று முன் தினம் தொழிலுக்கு சென்று 24

மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது - சம்பிக்க

(கொழும்பு)

அரசாங்கம் முகம் கொடுத் துள்ள சவால்களை எதிர் கொள்ள வேண்டுமானால் மக்கள் தேசிய அரசாங்கம் மீது கொண்டுள்ள எதிர்பார்ப் புக்களுக்கு அரசாங்கம் தீர் வினை பெற்றுக்கொடுக்க வேண்டும் என அமைச்சர்

சம்பிக்க ரணவக்க தெரி வித்தார்.

இரத்தினபுரியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர்மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவிக்கையில், 24

பதவி வேண்டும் என்றால்

கட்சியில் இருந்து விலக வேண்டும்

மகிந்த அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியின ருக்கு எதிர்க்கட்சி தலைவர் பதவி வேண்டும் என்றால் அதன் பாராளுமன்ற உறுப் பினர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இருந்து விலக 23

நுண்கடன் பிரச்சினை தொடர்பில் அரசாங்கத்துடன் மீண்டும் பேச்சு

ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் மாவை

(யாழ்ப்பாணம்)

யாழ் பிரதேச செயலக எல்லைக்குள் நுண்கடன் வழங்கும் நிதி நிறுவனங் களால் பெண்கள் பாதிக்கப்படு வது தொடர்பாக, மீண்டும் அரசாங்கத்துடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பேச்சு வார்த்தை நடத்தும் என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரி வித்துள்ளார்.

யாழ்ப்பாண பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று திங் கட்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற போதே அவர் 23

வடக்கு, கிழக்கில் மேலும் 400 ஏக்கர் காணிகளை விடுவிக்க நடவடிக்கை

இராணுவ பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் மேலும் 400 ஏக்கர் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக் கப்பட்டு வருவதாக இராணு வப் பேச்சாளர் சுமித் அத்த பத்து தெரிவித்தார். ஏற் கெனவே 522 ஏக்கர் காணி களை விடுவிப்பதற் கான தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இதற்காக கோரப்பட்டி ருந்த நிதியின் ஒரு பகுதி கிடைக்கப்பெற்றதுடன், எஞ் சிய பகுதிக்கான அனுமதி கடந்த வாரம் வழங்கப்பட் டது.

முழுமையான நிதி கிடைக் கப்பெற்றதும் குறித்த காணிப் பரப்பு விடுவிக்கப் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வீதி விபத்தை ஏற்படுத்திய சாரதி பிணையில் விடுவிப்பு

(கரணவாய்)

மாலுசந்தியில் இடம்பெற்ற விபத்துடன் சம்பந்தப்பட்ட கார் சாரதியை ஓர் இலட்சம் ரூபாய் ஆட்பிணையில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி நளினி சுபாகரன் விடுவித்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காருடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் கோப்பாயை சேர்ந்த இ.வினோதன் என்பவர் மரணமானார்.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட கார் சாரதி நேற்று திங்கட்கிழமை நீதிமன்றில் முற்படுத்திய போது அவரை பிணையில் விடுவித்த நீதவான் வழக்கை 27.09.2018 வரை ஒத்திவைத்தார். (ம-60)

அழிவை நோக்கி பயணிக்கும் கூட்டு எதிரணி - அகிலவிராஜ்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் வெற்றியை சரியான முறையில் பயன்படுத்தாததன் காரணமாக கூட்டு எதிரணி இன்று அழிவை நோக்கி பயணித்துக் கொண்டுள்ளது என அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியில் காணப்படும் பிரதான பிரச்சினைகளை நாம் துரித கதியில் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை தற்போது முன்னெடுத்து வருகின்றோம்.

அத்துடன் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் வெற்றியை சரியான முறையில் பயன்படுத்தாததன் காரணமாக கூட்டு எதிரணி இன்று அழிவை நோக்கி பயணித்துக கொண்டுள்ளது எனவும் தெரிவித்தார். (ம)

ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்டவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

வாழைத்தோட்ட பகுதியில் நீண்ட நாட்களாக ஹெரோயின் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த ஒருவரை கைதுசெய்துள்ளதாக வாழைத்தோட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் மீது ஹெரோயின் போதைப் பொருள் வியாபாரம் தொடர்பில் பல்வேறு வழக்குகள் காணப்படுவதாக தெரிவிக்கும் பொலிஸார், கடந்த 2017 ஆம் ஆண்டு இவர் மீது தொடரப்பட்ட போதைப்பொருள் விநியோகம் தொடர்பான வழக்கில் உயர் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே இவரை கைதுசெய்துள்ளனர்.

அத்துடன் இவரிடமிருந்து 3 கிராம் 150 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளையும் கைப்பற்றியுள்ள வாழைத் தோட்டம் பொலிஸார் இவரை மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது நீதவான் அவரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ம)

மகிந்த தனது குடும்பத்தினருக்கு தவிர எவருக்கும் பதவிகள் வழங்கமாட்டார்

அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

அவன்கார்ட் சம்பவம் தொடர்பான நடவடிக்கைகளை காட்டிக்கொடுத்தது தற்போதைய அரசாங்கத்தின் மூன்று முக்கிய பிரமுகர்கள் எனவும், மத்திய வங்கியின் பிணை முறி போன்ற சம்பவங்கள் மூலம் அரசாங்கத்தின் மீதான மக்களின நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

நாட்டை கொள்ளையிட்டவர்களுக்கு எதிராக சட்டத்தை செயற்படுத்தி, நியாயம் நிலைநாட்டப்படும் என்ற எதிர்பார்ப்பிலேயே உண்மையில் தற்போதைய அரசாங்கத்திற்கு மக்கள் ஆணையை வழங்கினர்.

இந்த விடயத்தில் அரசாங்கத்தின் தரப்பில் தோல்வியான தன்மை இருக்கின்றது என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். அவன்கார்ட் சம்பவத்தில் கொள்ளையர்களை பிடிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த அரசாங்கத்தின் மூன்று முக்கிய பிரமுகர்கள் இணைந்து இதனை காட்டிக் கொடுத்தனர். கடற்படையினருக்கு தினமும் கோடிக்கணக்கில் வருமானம் கிடைக்கின்றது என்பது தற்போது ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருமானம் கடந்த காலத்தில் தனிநபர்களின் பைகளுக்கும், வெளிநாட்டு வங்கிக் கணக்குகளுக்கும் சென்றன. அதில் ஆரம்பித்து மத்திய வங்கியின் கொடுக்கல் வாங்கலில் நடந்த சம்பவங்களால் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை ஓரளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

இதனை சரி செய்ய வேண்டியது ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் முக்கிய பொறுப்பு. மக்களின் விருப்பு வாக்கில் தெரிவாகி, நாடாளுமன்றத்திற்கு வந்து, மோசடியாளர்களுக்கு தேவையான வகையில் நடந்துகொள்ளும் நபர்கள் தொடர்பில் தீர்மானிப்பது மக்களின் பொறுப்பு.

கூட்டு எதிர்க்கட்சியில் நல்லவர்கள் இருக்கக் கூடும். எனினும் மகிந்த ராஜபக்ஷவின குடும்பத்தினரை தவிர வெளியார் எவருக்கும் பதவிகளும் கிடைக்காது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு தற்போது தமது சகோதரர்களை விட பிள்ளைகள் முக்கிய மானவர்களாக மாறியுள்ளனர்.

இதனால், தனது பிள்ளைகளுக்கு தேவையான வகையில் வழியை ஏற்படுத்திக்கொள்வாரே தவிர கூட்டு எதிர்க்கட்சிக்கோ, நாட்டுக்கோ நாட்டு மக்களுக்கோ, நாட்டின் எதிர்காலத்திற்கோ அவர் எதனையும் செய்ய மாட்டார் எனவும் பாட்டலி சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார். (ம)

உயர்தர பரீட்சை தொடர்பில் முறைப்பாடுகளை அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கம்

(கொழும்பு)

கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சைகள தற்சமயம் நாடளாவிய ரீதியாக இடம் பெற்று வருகின்றன.

இந்த நிலையில் பரீட்சையின் நேர அட்டவணை தொடர்பில் ஏதேனும் முறைப்பாடுகள இருப்பினும் அது குறித்து தெளிவைப் பெற விசேட தொலைபேசி இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி 011 278 4208 அல்லது 011 278 4537 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கோ அல்லது 1911 என்ற அவசர இலக்கத்திற்கோ அழைத்து அது தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் என பிரதி பரீட்சைகள் ஆணையாளர் பிரணவ தாசன் தெரிவித்தார். (ம)

வெலிக்கடை சிறைச்சாலையில் மோதல் நான்கு பெண் கைதிகள் காயம்

(கொழும்பு)

கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில போராட்டத்தில் ஈடுபட்ட கைதிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

வெலிக்கடை சிறைச்சாலை கூரையின் மீது ஏறி, அடையாள ஆர்ப்பாட்டமொன்றை குறித்த் பெண் கைதிகள் நேற்று திங்கட்கிழமை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் இடம்பெற்ற இந்த மோதலில் காயமடைந்த பெண் கைதிகள் 4 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைக்கைதிகள் கோரும் உரிமைகளை நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள உடனடியாக நிறைவேற்றி தர வேண்டுமென பெண் சிறைக்கைதிகள் வலியுறுத்தி இந்த போராட்டத்தை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

நெடுங்கேணி வெடுக்குநாறி ஐயனார் ஆலயத்தை புனரமைக்க முடியாது

தொல்லியல் திணைக்களம் அறிவிப்பு

(வவுனியா)

வவுனியா வடக்கு நெடுங்கேணியில் உள்ள வெடுக்குநாறி ஐயனார் ஆலயத்திற்கு செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது. எனினும் ஆலயத்தில் மாற்றங்களை செய்யவோ கட்டடங்களை அமைக்கவோ முடியாதென தொல்லியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நெடுங்கேணி ஒலுமடு பகுதியில் உள்ள வெடுக்குநாறி மலை மீது ஆதி ஐயனார் ஆலயம் அமைந்துள்ளது. இதனை மக்கள் காலங்காலமாக வழிபட்டு வருகின்ற நிலையில், அது தொல்லியல் திணைக்களத்திற்குச் சொந்தமானதென அத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 10ஆம் திகதி குறித்த ஆலயத்தை சேர்ந்தவர்களை நெடுங்கேணி பொலிஸார் அழைத்து விசாரணைக்கும் உட்படுத்தியிருந்தனர். அதன்போது, ஆலயத்திற்குச் செல்லவேண்டாமென்றும் மீறிச் சென்றால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டனர். எனினும் அதற்கு மறுநாள் ஆடி அமாவாசை திதி என்பதால் தொல்லியல் திணைக்களம் மற்றும் பொலிஸாரின் அனுமதியுடன் அங்கு சென்று பூஜை வழிபாடுகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் ஆலய நிர்வாகத்தினரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்த பொலிஸார் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளை மேற்கொள்ள தடையில்லையெனக் குறிப்பிட்டனர்.

ஆனால் ஆலயத்தில் மாற்றங்கள் செய்தல், கட்டடங்களை அமைத்தல் உள்ளிட்ட எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாதென அறிவுறுத்தியுள்ளனர். ஆலயத்தை சூழவுள்ள காட்டுப்பகுதி தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளதால், அங்கு செல்லக் கூடாதென்றும் மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழர்களின் எல்லைக்கிராம பகுதியில் காணப்படும் இந்த ஆலயத்தை காலங்காலமாக தரிசித்து வந்த நிலையில், அதனை அபகரிக்க முயலக் கூடாதென மக்கள் தெரிவிக்கின்றனர். (ம)

அரச ஊழியர் ஒருவர் திடீர் விடுமுறைகளை சமூக வலைத்தளங்களூடாக அறிவிக்க முடியாது

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்கள் உத்தியோகபூர்வ தகவல் பரிமாற்றத்திற்காக குறுஞ்செய்தி (SMS), தொலைமடல் (Fax), ஈமெயில் (Email), ரெலிமெயில் (Telemail), தொலைபேசி என்பவற்றை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ தொலைத் தொடர்பாடல் குறித்து தகவலறியும் சட்டத்தின் கீழ் கோரப்பட்ட விடயமொன்று தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அதிகாரியொருவர்,

அத்துடன் குறித்த முறைகள் மாத்திரமே அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிற்காக அங்கீகரிக்கப்பட்டு உள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை சமூக வலைத்தளங்களான பேஸ்புக், டுவிட்டர், வட்ஸ்அப் என்பன உத்தியோகபூர்வ தொலைத் தொடர்பாடல் சாதனங்களாக கொள்ளப்படமாட்டாது எனவும், இவற்றை உத்தியோகபூர்வ தொடர்பாடல் சாதனங்களாக கருதி நடவடிக்கை எடுக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, அரச ஊழியர் ஒருவர் திடீர் விடுமுறைகளை தமது காரியாலயத்திற்கு சமூக வலைத்தளங்கள் ஊடாக அறிவிக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

மரண அறிவித்தல்

சின்னையா சிவானந்தம்

தோற்றம் : 10.06.1968
மறைவு : 13.08.2018

நறுவிலடி புலோலியைப் பிறப்பிடமாகவும், அம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவானந்தம் அவர்கள் 13.08.2018 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா-பார்வதி தம்பதியினரின் அன்பு மகனும், நடராசசுந்தரம்-அம்பிகாதேவி . தம்பதியினரின் பாசமிகு மருமகனும், சாந்தியின் பாசமிகு துணைவரும், கோமகள், சிரஞ்சீவி, தர்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சச்சிதானந்தம், மகேந்திரராஜா (நியூசிலாண்ட்), சத்தியதேவி, அமரர் பத்மாவதி, அமரர் நித்தியானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கும்விகாந்த் அவர்களின் மாமனாரும், வினித்தின் ஆசைப் பேரனும், நந்தினி, நந்தகுமார், ரவிகரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (14.08.2018) முற்பகல் 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அம்பன், குடத்தனை.

(பி-3500)

தகவல் குடும்பத்தினர்.

"மகிந்த அமைச்சரவையில் மிகவும் வெறுப்புடன் இருந்தேன்"

கீழ்த்தரமான அரசியல் கலாசாரம்

ராஜபக்ஷ ஆட்சியில் தலைவிரித்தாடியது

அமைச்சர் சமரசிங்க காட்டம்

(கொழும்பு)

நான் 6 தடவைகள் அமைச்சரவையில் அங்கம் வகித்துள்ளேன். இதில் மகிந்த ராஜபக்ஷ அமைச்சரவையில் இருந்தபோது மிகவும் வெறுப்புடனே இருந்தேன். அமைச்சரவைக்கு ஏதும் யோசனைகள் முன்வைக்கப்பட்டால் முதலில் ராஜபக்ஷ குடும்ப அமைச்சரவை இரகசியமாகக்கூடி ஆராய்ந்து இதனை அனுமதிப்பதா? இல்லையா? என்பதை தீர்மானிப்பார்கள். மறுநாள் அமைச்சரவையில் அதன் பிரதிபலன் எமக்குத் தெரியவரும் ஒரு கீழ்த்தரமான அரசியல் கலாசாரம் இருந்ததை மறக்க முடியாது. மகிந்த ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சி நாட்டில் தலைவிரித்தாடியது என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை கிராம மக்களின் முக்கிய பிரச்சினைகளைத் தீர்த்து கிராமங்களை எழுச்சி பெறச் செய்யும் நோக்குடன் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 100 மில்லியன் ரூபா வீதம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதிலுமுள்ள 168 தொகுதிகளின் அமைப்பாளர்களுக்கு இந்த நிதி ஒதுக்கி கொடுக்கப்பட்டுள்ளதோடு அப்பணத்தின் மூலம் பாரிய அபிவிருத்திப் பணிகளை செவ்வனே முன்னெடுக்க அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

பேருவளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய அமைப்பின் விசேட கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பேருவளை மரக்கலாவத்த ஸாரா மண்டபத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அமைப்பாளர் எம்.எம்.எம். அம்ஜாத் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமைச்சர் மகிந்த சமரசிங்க மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ எமக்கு எந்தவிதத்திலும் சவாலாக இருக்கமாட்டார். ஏனெனில் ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு போட்டியிட முடியாது. அடுத்த ஜனாதிபதி தேர்தலில் யாரை வேட்பாளராக நிறுத்துவது என்பதில் மொட்டு கட்சிக்குள் பாரிய தீ பரவ ஆரம்பித்துள்ளது. மகிந்த ராஜபக்ஷ வேண்டும் என்று ஒரு கூட்டமும் கோத்தபாய ராஜபக்ஷ வேண்டும் என்று மற்றொரு கூட்டமும் சண்டை பிடிக்க ஆரம்பித்துள்ளது. பஷில் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ வேண்டும் என்று ஒரு கூட்டம் கூறுகிறது. ஷிராந்தி ராஜபக்ஷவும் ஜனாதிபதி வேட்பாளருக்கு தகுதியானவர் என்று ஒரு குழு சொல்லுகிறது. இந்த மொட்டு கட்சி குழுவினருக்கு மகிந்த ராஜபக்ஷ என்ற உலகமே உள்ளது. அந்த உலகு இல்லாமல் அவர்களால் ஏன் அரசியல் செய்ய முடியாது. ராஜபக்ஷ யுகம் இந்நாட்டில் மீண்டும் மலருமானால் நாட்டின் எதிர் காலம் இருள் சூழ்ந்ததாகவே அமையும் என்பதை மறந்து விடாதீர்கள்.

நான் 6 தடவைகள் அமைச்சரவையில் பதவி வகித்துள்ளேன். இதில் மகிந்த ராஜபக்ஷ அமைச்சரவையில் இருந்தபோது மிகவும் வெறுப்புடனே இருந்தேன். அமைச்சரவைக்கு ஏதும் யோசனைகள் முன்வைக்கப்பட்டால் முதலில் ராஜபக்ஷ குடும்ப அமைச்சரவை இரகசியமாகக் கூடி ஆராய்ந்து இதனை அனுமதிப்பதா? இல்லையா? என்பதை தீர்மானிப்பார்கள்.

மறுநாள் அமைச்சரவையில் அதன் பிரதிபலன் எமக்கு தெரிய வரும். ஒரு கீழ்த்தரமான அரசியல் கலாசாரம் இருந்ததை மறக்க முடியாது. மகிந்த ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சி நாட்டில் தலைவிரித்தாடியது. அவர்கள் நினைத்ததை செய்வதை சகித்துக் கொள்ள முடியாத பலர் அந்த ஆட்சியில் இருந்து வெளியேறினர். எமது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இதன் காரணமாகவே வெளியேறினார்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இடம்பெற்ற அளுத்கமை சம்பவம் மூலம் முழு நாட்டினருக்கும் நற்பெயருக்கு அபகீர்த்தி ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தை முழு உலகமும் கண்டித்தது. பல்லின சமூகங்கள் வாழும் ஒரு நாட்டில் ஜனாதிபதி இவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை அவர் அப்போது சிந்திக்கவில்லை. பல மொழிகளை, பல சமயங்களை, பல கலாசாரங்களை பின்பற்றும் மக்களின் உரிமைகளை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவில்லை. அன்று இதைப் பற்றி நாம் எடுத்துக் கூறியும் கூட அவற்றை செவி சாய்க்கவில்லை.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இருந்த போது யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தார். பிளவுபட்டிருந்த நாட்டை ஒன்று படுத்தினார். அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தினார். இதை நாம் மறுக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் நான் இரட்டை வேடம் இன்றி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காகவே கடைசி வரை பாடுபட்டேன். மக்கள் தேர்தல் மூலம் அவரை நிராகரித்துவிட்டனர்.

மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்து ஜனாதிபதி பதவியில் இருந்திருந்தால் இன்று ஈரானுக்கு ஏற்பட்டுள்ளதைப் போல் இலங்கைக்கும் பொருளாதாரத் தடை வந்திருக்கும். இதை புரிந்து கொண்ட அவர் இரு வருடங்கள் தொடர்ந்து பதவியிலிருக்க சந்தர்ப்பம் இருந்தும் முன் கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்தினார். இதன் மூலம் அவர் தோல்வியைத் தழுவினார் என மகிந்த சமரசிங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

ஜே.வி.பியின் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது

அஜித் பெரேரா நிராகரிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் வீண்செலவுகளைச் செய்வதால் தான் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியினர் தெரிவிக்கும் குற்றச்சாட்டானது உண்மைக்கு புறம்பானதாகும் என பிரதி அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டரசாங்கத்தின் இரண்டு தலைவர்களும் செலவீனங்களைக் குறைத்தே நிர்வாகத்தை முன்னெடுக்கின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு குடும்பத்தை நிர்வகிக்கும் தலைவரை போன்றே நாட்டின் நிர்வாகத்தை மேற்கொள்கின்றார்.

குறிப்பாக ஜனாதிபதி வெளிநாட்டு உத்தியோகபூர்வ அரச பிரயாணங்களின் போது பிரத்தியேகமான விமானங்களில் பயணிப்பதில்லை. பொதுமக்கள் பயன்படுத்தும் விமானங்களில் மக்களோடு மக்களாக பயணிக்கின்றார்.

இவ்வாறு கடந்த மூன்று வருட காலமாக அரசாங்கம் எவ்விதமான விளம்பரங்களும் இன்றி மக்களுக்கு பாரிய அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டுள்ளது என்பதை மக்கள் விடுதலை முன்னணியினர் கவனத்திற் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

அரசின் நெருக்கடிகளால் நிர்க்கதியாகியுள்ளேன்

தயாசிறி தன்னிலை விளக்கம்

(கொழும்பு)

அரசாங்கத்திற்குள் இருக்கும் நெருக்கடிகள் காரணமாக தான் நிர்க்கதியாகி இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையை தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேருவளைப்பகுதியில்நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

யாழ்.பல்கலையில் காண்பியக்காட்சி

(யாழ்ப்பாணம்)

நாளை 15.08.2018-22.08.2018 வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புதிய கலைப்பீடக் கட்டடத் தொகுதியிலுள்ள கலைக் கூடத்தில் நுண்கலைத் துறை மற்றும் கலைவட்டத்தின் ஏற்பாட்டில் இளம் ஓவியர்களான கீதா கந்தவேள், சுந்தரம் அனோஜன், மனோகரன் பிரசாத், சிவஞானம் கிருசன் போன்ற "நான்கு ஓவியர்களின் காண் பியக் காட்சி" இடம்பெறவுள்ளது.

காண்பிய ஓவியத் துறைகளில் ஆர்வமுடைய அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொள்வதன் மூலம் பயன் பெறமுடியும் என நுண் கலைத் தலைவர் கலாநிதி தா.சனாதனன் அறிவித்துள்ளார். (இ)

ஞானசாரரின் சத்திரசிகிச்சை பிற்போடல்

(கொழும்பு)

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு நேற்று செய்யப்படவிருந்த சத்திரசிகிச்சை பிற்போடப்பட்டுள்ளது.

ஞானசாரரின் இதயத் துடிப்பு வேகத்தில் பிரச்சினை காணப்படுவதால் அவருக்கான சத்திரசிகிச்சை நேற்று மேற்கொள்ளப்படவில்லையென, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் பிரபாத் வேரவத்த தெரிவித்துள்ளார்.

விசேட வைத்தியர் குழுவினரால் ஞானசாரரின் இதயத்துடிப்புத் தொடர்பில் 48 மணிநேரம் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்ட பின்னரே அவரது சத்திரசிகிச்சைக்கான திகதி குறிப்பிடப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் கீழ் சிறைத்தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள ஞானசார தேரர் சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பின் கீழ் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

ரோஜர்ஸ் கிண்ண டென்னிஸ்

ரபேல் நடால் சம்பியன்



ரோஜர்ஸ் கிண்ண டென்னிஸ் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீரர் ரபேல் நடால், சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

கனடாவில் உள்ள ரொரன்டோ நகரில் மாஸ்டர்ஸ் அந்தஸ்து பெற்ற ரோஜர்ஸ் கிண்ண டென்னிஸ் தொடர் நடந்தது.

இதன் ஒற்றையர் பிரிவு இறுதியில் உலகின் 'நம்பர் 1' ஸ்பெயினின் ரபேல் நடால், கிரீஸின் ஸ்டெபானஸ் டிசிட்சிபாஸ் மோதினர்.

அபாரமாக ஆடிய நடால் 6-2, 7-6 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, 4ஆவது முறையாக கிண்ணம் வென்றார். இதற்கு முன், 2005, 2008, 2013ல் சம்பியன் பட்டத்தை கைப்பற்றி இருந்தார்.

இது, ஏ.டி.பி., அரங்கில் நடால் கைப்பற்றிய 80வது ஒற்றையர் பட்டம்.

தவிர மாஸ்டர்ஸ் தொடரில் இவர் வென்ற 33ஆவது பட்டம்.

சின்சினாட்டியில் விலகல்

ஸ்பெயினின் ரபேல் நடால், சின்சினாட்டியில் நடக்கவுள்ள மாஸ்டர்ஸ் தொடரில் இருந்து விலகினார்.

இம் மாத இறுதியில் நடக்கவுள்ள யு.எஸ். ஓபன் கிராண்ட்ஸ் லாம் தொடரில் (ஒக. 27 - செப். 9) பங்கேற்பதற்காக இம் முடிவை எடுத்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

ஓய்வு

சர்வதேச கால்பந்து அரங்கில் இருந்து ஜெரார்ட் பிக்கே ஓய்வு பெற்றார்.

ஸ்பெயின் கால்பந்து 'சீனியர்' வீரர் பிக்கே (வயது-31), தற்காப்பு பகுதி வீரரான இவர், இதுவரை தேசிய அணிக்காக 105 போட்டிகளில் விளையாடி உள்ளார்.

கடந்த 2010ல் 'பிபா' உலக கிண்ணம் வென்ற அணியில் இடம்பிடித்திருந்தார். சமீபத்தில், ரஷ்யாவில் நடந்த உலக கிண்ணத் தொடரில் விளையாடினார்.

இதில், ஸ்பெயின் 'ரவுண்ட் 16' சுற்றுடன் திரும்பியது. இந்நிலையில், சர்வதேச அரங்கிலிருந்து ஓய்வை அறிவித்தார்.

இது குறித்து பிக்கே கூறுகையில்,

"ஸ்பெயின் அணிக்காக உலக கிண்ணம் வென்றதை எண்ணி பெருமை அடைகிறேன். இதுவரை கிடைத்த வெற்றி பெருமை அடைய செய்கிறது. இந்த அனுபவம் வியப்பாக உள்ளது. தற்போது, ஸ்பெயின் அணியிலிருந்து விடை பெறும் நேரம் வந்துவிட்டது," என்றார்.

பிக்கேவின் மனைவி பிரபல பொப் பாடகி ஷகிரா. இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். தேசிய அணியிலிருந்து ஓய்வு பெற்றாலும், பார்சிலோனா கழகத்துக்காக தொடர்ந்து விளையாடுவார்.

ஹலெப் அபாரம்

கனடாவின் மொன்ட்ரியல் நகரில் நடந்த பெண்களுக்கான ரோஜர்ஸ் கிண்ண இறுதியில் உலகின் 'நம்பர்-1' ருமேனியாவின் சிமேனா ஹலெப், அமெரிக்காவின் ஸ்லோன் ஸ்ரீபன்ஸ் மோதினர்.

இதில் அசத்தலாக ஆடிய ஹலெப் 7-6, 3-6, 6-4 என்ற கணக்கில் வெற்றி பெற்று 2ஆவது முறையாக கிண்ணம் வென்றார். இதற்கு முன், 2016ல் சம்பியன் பட்டம் வென்றிருந்தார்.

ஸ்ரோக்ஸுக்கு 'நோ'

இங்கிலாந்து அணி அறிவிப்பு

பிரிஸ்டல் நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் வெளியேறும் பென் ஸ்ரோக்ஸ்

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டிலும் இங்கிலாந்து அணியில் பென் ஸ்ரோக்ஸ் சேர்க்கப்படவில்லை.

இங்கிலாந்து அணியின் 'சகலதுறை வீரர்' பென் ஸ்ரோக்ஸ் (வயது-27), பேர்மிங்காமில் நடந்த இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் 6 விக்கெட்டுக்கள் வீழ்த்தி வெற்றிக்கு உதவினார்.

ஆனால் பிரிஸ்டல் நைட் கிளப்பில் போதையில் தகராறு (2017, செப்.,) செய்தது தொடர்பான விசாரணை காரணமாக லோர்ட்ஸ் டெஸ்டில் பங்கேற்கவில்லை.

இவருக்குப் பதில் களமிறங்கிய வோக்ஸ் துடுப்பாட்டத்தில் 137 ஓட்டங்கள் எடுத்ததுடன், பந்துவீச்சில் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தி அசத்தினார்.

இதனால் இரண்டாவது டெஸ்டில் களமிறங்கிய அதே இங்கிலாந்து அணி, வரும் 18ஆம் திகதி நொட்டிங்காமில் ஆரம்பமாகவுள்ள மூன்றாவது டெஸ்டிலும் தொடரும் என அறிவிக்கப்பட்டது.

போதை விசாரணை இன்னும் முடியாததால் ஸ்ரோக்ஸ் சேர்க்கப்படவில்லை.

தவிர இந்த வழக்கு முடிந்த பிறகு கிரிக்கெட் ஒழுங்குமுறை வழக்கையும் எதிர்கொள்ள வேண்டும்.

இதனால் இந்திய அணிக்கு எதிரான மீதமுள்ள டெஸ்ட் தொடர் (3 போட்டி) முழுவதிலும் ஸ்ரோக்ஸ் பங்கேற்கமாட்டார் எனத் தெரிகிறது.

கனவு நனவானது

வோக்ஸ் மகிழ்ச்சி

புகழ்பெற்ற லோர்ட்ஸ் கிரிக்கெட் மைதானத்தில் சதமடிக்க வேண்டும் என்ற என் சிறுவயது கனவு இப்போது நிறைவேறியுள்ளது என்று இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் கிறிஸ் வோக்ஸ் கூறினார்.

இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.

கிரிக்கெட்டின் மக்கா என்று அழைக்கப்படும் லோர்ட்ஸ் மைதானத்தில் சதமடிக்க வேண்டும் என்பது ஒவ்வொரு கிரிக்கெட் வீரரின் கனவாக உள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த டெஸ்ட் போட்டியின் 3ஆம் நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து வீரர் கிறிஸ் வோக்ஸ் சதமடித்தார்.

சதமடித்தது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

லோர்ட்ஸ் மைதானத்தில் சதமடிக்க வேண்டும் என்று நான் சிறு வயது முதலே கனவு கண்டு வந்தேன். அந்தக் கனவு இப்போதுதான் நிறைவேறியுள்ளது.

லோர்ட்ஸ் மைதானத்தில் சதமடித்த பின்னர் எனக்கு ரசிகர்கள் அனைவரும் எழுந்து நின்று வரவேற்பு கொடுத்தனர். இதை எந்த நாளிலும் மறக்க முடியாது. அது ஒரு நம்ப முடியாத உணர்வாக இருந்தது.

நான் சமீபத்தில்தான் ஒரு குழந்தைக்குத் தந்தையாகி இருந்தேன். அந்த மகிழ்ச்சியை எப்படி கொண்டாடப் போகிறேன் என்று சக வீரர்கள் என்னைக் கேட்டுக் கொண்டே இருந்தனர். குழந்தை பிறந்த மகிழ்ச்சியை, சதமடித்ததுடன் இணைந்து கொண்டாடலாமா? என்று மைதானத்தில் நினைத்தேன்

லோர்ட்ஸ் மைதானத்தில் சதமடித்த நிகழ்வை எப்போதும் மறக்க முடியாது. ஆனால் நான் மிகவும் சந்தோசமாக இருக்கிறேன் என்பதை வெளிப்படையாகவே சொல்கிறேன்.

சதத்தை நெருங்கும்போது நான் சிறிது நேரம் பதற்றமாக இருந்தேன். ஆனால் எதிர்முனையில் விளையாடிய ஜொனி பேர்ஸ்டோ என்னிடம் வந்து நிதானமாக விளையாடு என்று என்னை அமைதிப்படுத்தினார். அது எனக்கு உதவியது. அவரது அறிவுரையைக் கேட்டு பொறுமையாக விளையாடி சதமடித்தேன்.

முதல் இன்னிங்ஸில் விராட் ஹோலியை குறைந்த ஓட்டங்களில் ஆட்டமிழக்கச் செய்தது திருப்தியளிக்கிறது. அவர் ஒரு உலகத் தரம் வாய்ந்த வீரர். டெஸ்ட் தர வரிசையில் முதலிடத்தில் இருக்கிறார். அவர்தான் இந்திய துடுப்பாட்ட வரிசைக்கு தூண் போல இருப்பவர். இவ்வாறு அவர் கூறினார்.

மலையகத்தில் கடும் மழை; மண் சரிவு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(ஹற்றன்)

மலையகத்தில் பல பகுதிகளில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை காரணமாக பல இடங்களில் மண் சரிவு ஏற்பட்டு ஒரு சில இடங்களில் போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளது.

ஹற்றன் சலங்கந்த பிரதான வீதியில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் எட்லி பகுதியில் ஏற்பட்ட மண்சரிவினால் இந்த வீதியூடான போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எட்லி தோட்டத்தில் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் பாரிய மரம் ஒன்று சரிந்து வீழ்ந்ததன் காரணமாக போக்குவரத்திற்கு பாரிய இடையூறு ஏற்பட்டுள்ளது.

ஹற்றன் பொகவந்தலாவ பிரதான வீதியில் ஹற்றன் அளுத்கம பகுதியில் காலை ஏற்பட்ட மண் சரிவினால் அவ்விடத்தில் ஒருவழி போக்குவரத்து மாத்திரமே இடம் பெற்று வருகின்றது.

நீரேந்தும் பிரதேசங்களில் பெய்து வரும் தொடர்ச்சியான மழை காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் மிக வேகமாக உயர்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. பல இடங்களில் கடும் காற்று காரணமாக மரம் முறிந்து வீழ்ந்துள்ளதனால் அடிக்கடி மின்சாரத் துண்டிப்பும் ஏற்படுகின்றது.

தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக கட்டதொழிலாளர்கள்வேலைகளை மேற்கொள்ள முடியாது பாதிக்கப்பட்டுள்ளனர். அடைமழைகாரணமாகதேயிலை தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை பாரிய அளவில் குறைவடைந்துள்ளதுடன், தேயிலை உற்பத்தியும் வீழ்ச்சியடைந்துள்ளது.

தொடர்ச்சியாக மலையகத்தில் பல பகுதிகளில் கடும் காற்றுடன் தொடர் மழை பெய்து வருவதனாலும், மலை தொடர் பகுதிகளில் காணப்படும் பல வீதிகளில் மண்சரிவு அபாயம் காணப்படுவதனாலும் வாகன சாரதிகள் அவதானமாக தமது வாகனங்களை செலுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-7)

வடக்கு மாகாண மக்களை மீண்டும் வன்முறையை நோக்கிச் செல்லவிடோம்

அநுரகுமார எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தி லுள்ள மக்களை மீண்டும் வன்முறை நோக்கிச் செல்வதற்கு அனுமதிக்கமாட்டோமென, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குருவிட்ட பகுதிகளில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"பிரதமர் ரணில் மற்றும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் நாட்டின் நலன்கள் தொடர்பாக பேசுவதற்கு எந்தவொரு தகுதியும் அற்றவர்கள் ஆவர்.

. மேலும் 70 வருடங்கள் நாட்டை ஆட்சி செய்த ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி ஆகிய

வற்றினால் எந்ததொரு பாரிய அபிவிருத்தியும் இடம்பெற வில்லை என்பது தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் பிரதமர் ரணில் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு இன்னும் 32 வருடங்களை தாருங்க ளென கேட்கிறார். ஆனால் இந்த 32 வருடங்களில் அவர் உயிரோடு இருப்பாரா என்பதே சந்தேகமாகும்.

இதேபோன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 10 வருடங்கள் நாட்டை ஆட்சி செய்தார். ஆனால் அவரும் பாரிய மாற்றங்களை பெரிதாக ஏற்படுத்தவில்லை. அவரும் தற்போது 5 வருடங்களை தாருங்கள் என்கிறார்.

இதேவேளை எமது கட்சியிடம் சில அரசியல் புத்திஜீவிகள் நாட்டை எவ்வாறான துறைகளின் வாயிலாக அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பது தொடர்பாக தெளிவுபடுத்தியுள்ளனர்.

மேலும் நாட்டில் கட்டடங்களை உயர்த்துவதில் மாத்திரம் அபிவிருத்தி ஏற்படுவதில்லை. மக்களின் வாழ் வாதாரத்தினை உயர்த்தும் செயற்பாட்டின் ஊடாகவே அபிவிருத்தி மேற்கொள்ள முடியும் என அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

தவறவிடப்பட்டுள்ளது

தெல்லிப்பழை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கும் சாந்தசந்தி வர்த்தரவிளானுக்கும் இடையில் வெளிநாட்டுப் பணம் (500 பவுண்ஸ்) தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும்தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:

077 845 2220, 077 824 3683

(335)

வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கி வரும் samugam net இணையத்தளத்திற்கான வேலை வாய்ப்பு

1.Video Editor

2.Social Media Promoters

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:

076 245 5533

077 332 2527

(335)

E-mail - tamilarsamugam@gmail.com

இராசி பலன்

கிரகநிலை

சந்திராஷ்டமம்

சதயம்- பூரட்டாதி

			கூரி,புத, ராகு
செவ், கேது			
சனி		குரு	சுக்.சந்

14.08.2018

ஆடி 29, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

திருதியை முற்பகல் 10.07 மணிவரை

உத்தரம் முன்னிரவு 10.33 மணிவரை

சுபநேரம் 10.35-12.05 மணிவரை

இராகுகாலம் 3.05-4.35 மணிவரை

ஐந்தாம் ஆடிச்செவ்வாய்

நாகசதுர்த்தி விரதம், அமிர்தசித்தம்

வளவன்

மீனம்

தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம்.

மேடம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், ஆரோக்கியம் சீராகும், போசன சுகமுண்டு.

இடபம்

பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், கனவுகள் நனவாக கந்தனை வழிபட வேண்டிய நாள், காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

மிதுனம்

யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும்.

கும்பம்

கவலைகள் தீர கார்த்திகேயனை வழிபட வேண்டிய நாள், நிதானத்துடன் நடந்து நிம்மதி காணவேண்டிய நாள், குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும்.

மகரம்

உங்கள் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

தனுசு

புதிய திட்டங்கள் கைகூடும், குடும்ப ஒற்றுமை கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சியுண்டு.

விருச்சிகம்

எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும்.

துலாம்

நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

கன்னி

ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

கடகம்

காரிய வெற்றிக்கு கந்தனை வழிபட வேண்டிய நாள், உடன் பிறப்புக்கள் உங்கள் கருத்துக்களை ஏற்றுக் கொள்வர், பயணங்களால் பலன் கிடைக்கும்.

சிம்மம்

பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.



நாயன்மார்க்கட்டு இராஜ இராஜேஸ்வரி (பேச்சி அம்மன்) ஆலய சப்பறத் திருவிழா கடந்த 11 ஆம் திகதியும் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் 12 ஆம் திகதியும் இடம்பெற்றது.

ஆடிப்பூரத்தை முன்னிட்டு நேற்றுக் காலை 7.30 மணியளவில் வண்ணை அருள்மிகு வெங்கடேசப் பெருமான் ஆலயத்திலிருந்து பாற்குடங்கள் பக்தர்களால் எடுத்து வரப்பட்டு வண்ணை ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் அம்பிகைக்கு அபிஷேகம் இடம்பெற்றது. (படங்கள்:-ஜ.சிவசாந்தன்)

உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்திற்கு வடக்கு மாகாண ஆளுநர் திடீர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குருநகர் பகுதியில் அமைந்துள்ள உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்திற்கு திடீர் விஜயம் ஒன்றினை மேற் கொண்ட வடமாகாண ஆளு நர் ரெஜினோல்ட் கூரே அதி காரிகள் மற்றும் மாணவர் களைச் சந்தித்து கலந்துரை யாடினார்.

கடந்த 10 ஆம் திகதி பிற்ப கல் 3 மணியளவில் அங்கு சென்ற ஆளுநர் தொழில்நுட் பவியல் நிறுவனத்தில் காணப் படும் குறைபாடுகளையும் கேட் டறிந்து கொண்டார்.

மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்காக நான்கு மாடி கள் கொண்ட கட்டடம் அமை ப்பதற்கான அத்திபாரங்கள் போடப்பட்ட நிலையில் குறி த்த காணியினை வேறு ஒரு நிறுவனம் உரிமை கோரியுள் ளது. இதன் காரணமாக பல ஆண்டுகளாக அப்படியே இருப் பது தொடர்பில் ஆளுநருக்கு நிர்வாகத்தினரால் தெரிவிக் கப்பட்டது.

இதனையடுத்து அது தொடர் பிலான முழு ஆவணங்களை யும் பெற்றுக் கொண்ட ஆளு நர் ரெஜினோல்ட் கூரே, குறி த்த நிறுவனத்தின் நிறைவே ற்றுப் பணிப்பாளருடன் கொழு ம்பில் சென்று தாம் நேரடி யாக கலந்துரையாடி இப்பிரச் சினைக்கு சுமுகமான தீர் வினை பெற்றுத் தருவதாக உறு தியளித்தார்.

மேலும் மூவினத்தவரும் ஒன்றாக பயிலும் தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் மேல தீக தேவைக்காக தாம் முழு மையான ஆதரவினை ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன விடமிருந்து பெற்றுத்தர நட வடிக்கை எடுப்பதாகவும் தெரி வித்தார்.

இதேவேளை மாணவர் கள் மத்தியில் உரையாற்றிய ஆளுநர்,

யாழ்ப்பாணத்திற்கென்று ஒரு பெருமை இருக்கின்றது. அது என்னவென்று தெரியுமா? எமது நாட்டில் படிப்பில் சிறந் தவர்களாக யாழ்ப்பாணத்த வரே இருந்தனர். இந்த நாட் டின் பல பாகங்களிலும் உயர் ந்த சேவையை ஆற்றியவர் கள் யாழ்ப்பாணத்தில் பிற ந்து வளர்ந்து படித்தவர்களே. அந்தப் பெருமை தற்போது இல்லாமல் போய்விட்டது.

கடந்த 30 வருடம் நாட்டில் இடம்பெற்றுவந்த உள்நாட்டு யுத்தம் காரணமாக அவை காணாமல்போய் உள்ளன. இங்கே அபிவிருத்திகளை ஏற் படுத்தி பழைய நிலையினை ஏற்படுத்த வேண்டும். யாழ்ப் பாணத்தின் மரியாதையை மீண்டும் உயர்த்த வேண்டும். அதனை மாணவர்களாகிய நீங்கள்தான் செய்ய வேண் டும். அது உங்களது கடமை யாகும். அதற்கு நானும் உதவி செய்யத் தயாராக இருக்கின் றேன்.

இங்கே உள்ள மக்கள் மிக வும் துன்பப்பட்ட மக்கள் இவர் களுக்கு காலநிலையினால் பிரச்சினை, அரசியல்வாதிக ளால் பிரச்சினை , சாதி பேதம் குல பேத பிரச்சினை என பல பிரச்சினைகள் இருக்கின் றன.

கொழும்பு பக்கத்திலே குல பேத பிரச்சினை இல்லை, கால நிலை பிரச்சினை இல்லை. அங்கே அபிவிருத்திகளும் வேகமாக நடைபெறுகின்றது. இங்கே எதுவும் இல்லை.

வெளிநாட்டவர் எமது நாட் டினை 500 வருடங்களுக்கு மேலாக ஆட்சி செய்த போதும் இங்கே வடக்கே எந்த அபி விருத்தியும் செய்யவில்லை. கல்வி மட்டும்தான் இந்த மக் களிடம் சொத்தாக இருந்தது. தற்போதும் இம்மக்களின் சுயீட் சமான வாழ்விற்கு ஒரே ஒரு வழியாக கல்விதான் இருக்கி ன்றது. அதில் நீங்கள் வெற்றி பெறவேண்டும்.

இங்கே கல்வி கற்று உயர் நிலை அடைந்து இந்தப் பகுதி மக்களுக்கு நீங்கள் சேவை யாற்ற வேண்டும் என்று நான் உங்களிடம் கோரிக்கை விடுக் கின்றேன் எனத் தெரிவித்தார்.

இந்த விஜயத்தின் போது ஆளுநர் இணைப்புச் செய லர் சுந்தரம் டிவகலாலா, தொழில்நுட்பவியல் நிறுவன த்தின் இயக்குநர் ஏ.கே. கோகு லன் அதிகாரிகள் பலர் கல ந்து கொண்டிருந்தனர். (இ

கடன் திட்டத்தை ஊக்குவிக்கும் இந்திய புடைவை வியாபாரிகள்

யாழ். ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

கடன் திட்டத்தை ஊக்கு விக்கும் இந்திய புடைவை வியாபாரிகளைத் தடுக்க வேண்டும் என யாழ்.பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளால் வலியுறுத்தப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று யாழ். பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது. இதன் போது நுண் கடன் திட்டம் தொடர்பாக ஆராயப்பட்டது.

இதில் இந்திய புடைவை வியாபாரிகள் வீடு வீடாகச் சென்று தமது வியாபாரத்தை செய்கிறார்கள். அதிகளவாக கிராமங்களுக்குள் சென்று விற்பனையில் ஈடுபடுகிறார் கள். இவர்கள் கடன் அடிப்பு டையில் புடைவைகளை விற் பனை செய்கிறார்கள்.

பெண்கள் கூடுதலாக இந்த விடயத்தில் அடிமை யாகியுள்ளதுடன், அதிக எவான ஆடைகளை கடனு க்கு கொள்வனவு செய்கி றார்கள். பின்னர் தவணை முறையில் பணம் செலுத் தும் போது பெரும் சிரமத்தை எதிர்கொள்கிறார்கள். இத னால் குடும்பத்துக்குள்ளும் பாரிய பிரச்சினைகள் ஏற்ப டுகிறது.

கடன் திட்டத்தை ஊக்கு விக்கும் செயற்பாட்டை இந் திய புடைவை வியாபாரி களே முதலில் செய்கிறார்கள். அதற்கு அடிமையாகியவர் கள் பின்னர் நுண்கடன் களை பெற்று பல்வேறு பிரச் சினைக்குள் தள்ளப்படுகி றார்கள்.

எனவே இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுட்டிக் காட்டி யுள்ளனர். (இ-9)

"கடற்கரையை அழகுபடுத்துவோம்"



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபை யின் ஒழுங்கமைப்பில் கடற் கரையை அழகுபடுத்துவோம் எனும் தொனிப்பொருளில் பிரதேச சபைக்குட்பட்ட கடற் கரை பிரதேசங்களை சுத் தப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக தென்மராட்சி யின் கோயிலாக்கண்டி கடற் கரையினை சுத்தப்படுத்தும் நிகழ்வுநேற்றுமுன்தினம்ஞாயிற் றுக்கிழமை இடம்பெற்றது..

தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் உபதவிசாளர் செ.மயூரன் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள்,கோயி லாக்கண்டி மீனவர் சங் கத்தினர், பொது அமைப் புக்களின் அங்கத்தவர்கள், பிரதேச பொதுமக்கள் என பலரும் ஆர்வத்தோடு பங்கெ டுத்து கடற்கரை பிரதேச த்தை சுத்தப்படுத்தினர்.

சுத்திகரிப்பு பணிகள் சாவ கச்சேரி பிரதேச சபையின் எல்லைப்புற கடற்கரைகளான மறவன்புலவு, தனங்கிளப்பு, சங்குப்பிட்டி, கச்சாய் தொட க்கம் கிளாலி வரையான கடற்கரையோரங்கள் தொடர் ச்சியாக கழிவுகள் அகற் றப்பட்டு சுத்திகரித்து அழகு படுத்தப்படும் என சாவகச் சேரி பிரதேச சபையின் உப தலைவர் செ.மயூரன் தெரி வித்தார். (இ-89)

மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசியல் ரீதியான ஈடுபாடு இல்லை

அரசு மீது பவ்ரல் பாய்ச்சல்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு அரசியல் ரீதியான ஈடுபாடு இல்லை என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் எந்தவொரு அரசியல் கட்சியும் தேர்தலை நடத்துவதற்கு பொதுத் தீர்மானத்தை எடுக்கவில்லை என்றும் பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் கடந்த வருடம் செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் முடிவடைந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் தற்போது குறித்த மாகாணங்கள் ஆளுநரின் கட்டுப்பாட்டிற்கு கீழ் இருப்பதுடன் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி மத்திய மாகாணத்தினதும், 10 ஆம் திகதி வட மேல் மாகாணத்தினதும், 24 ஆம் திகதி வட மாகாணத்தினதும் உத்தியோக பூர்வ காலம் முடிவடைய உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் எதிர் வரும் ஜனவரி மாதம் ஆகும் போது அனைத்து மாகாண சபைகளிலும் தேர்தலை நடத்துவதாக அரசாங்கம் அண்மையில் அறிவித்திருப்பினும் இதுவரையில் அது தொடர்பில் எந்தவொரு கலந்துரையாடலும் மேற்கொள்ளப்படவில்லை என பவ்ரல் தெரிவித்துள்ளது.

இம்முறை வாக்காளர் பட்டியலில் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி கையொப்பமிடவுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம் மொஹமட் தெரிவித்துள்ளார்.

இம்முறை வாக்காளர் பட்டியலின் திருத்தங்கள் செப்டெம்பர் மாதம் 6 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன் பின்னர் திருத்தங்கள் தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் மேலும்தெரிவித்துள்ளார்.(இ-7)

இந்திய-பசுபிக் நிதியுதவி நோக்கம் குறித்து இலங்கை அரசுடன் கலந்துரையாடுவோம்

ஹெதர் நௌர்ட் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்திய-பசுபிக் நிதியுதவியானது எமது வங்காள விரிகுடா முன்னெடுப்புக்கும் இலங்கையின் மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த பதில்வினை செயற்பாடுகளுக்கும் எவ்வாறு ஒத்துழைப்பை வழங்க முடியும் என்பது குறித்து இலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடுவதற்கு நாம் தயாராகவுள்ளோமென அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் ஹெதர் நௌர்ட் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்து சமுத்திரத்தை கிழக்கு ஆசியாவுடன் இணைக்கும்முக்கிய கடல்வழிப்பாதைகளின் இருப்பிடமான இந்த முக்கிய பிராந்தியத்தில் சிவில் மற்றும் இராணுவ கடல்சார் பங்காளர்களின் ஆற்றலை வளர்ப்பதற்கு உதவ வங்காள விரிகுடா முயற்சியை அங்குரார்ப்பணம் செய்துள்ளோம்.

வெளிநாட்டு இராணுவ நிதியளித்தலின் கீழ் இலங்கைக்கு ஏறத்தாழ 39 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவது தொடர்பான யோசனை காங்கிரஸின் அனுமதிக்காகக் காத்திருப்பதை அறிவிப்பதில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மகிழ்ச்சியடைகிறது.

இந்திய-பசுபிக் நிதியுதவியானது எமது வங்காள விரிகுடா முன்னெடுப்புக்கும் இலங்கையின் மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த பதில்வினை செயற்பாடுகளுக்கும் எவ்வாறு ஒத்துழைப்பை வழங்க முடியும் என்பது குறித்து இலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடுவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

"அமெரிக்காவினதும் பிராந்தியத்தினதும் பாதுகாப்பை மேம்படுத்துவதன் நிமித்தமும் விதிகள் அடிப்படையிலான ஒழுங்கமைவுக்கான எமது ஆதரவை கோடிட்டுக் காட்டுவதற்கும் நண்பர்கள் மற்றும் நேச நாடுகளுக்கான எமது அர்ப்பணிப்புகளை மீளஉறுதிப்படுத்துவதற்கும் இந்திய-பசுபிக் பிராந்தியத்தில் வலுவான ஈடுபாட்டை எடுத்துக்காட்டுவதற்குமான இருதரப்பு மற்றும் பல்தரப்பு சந்திப்புகளை நடத்துவதற்காக இராஜாங்க செயலாளர் இந்தோனேசியா, சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற நாடுகளுக்கு கடந்த வாரம் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

நிர்வாகத்தின் இந்திய-பசுபிக் மூலோபாயத்தின் பாதுகாப்பு முக்கியத்துவத்தை இராஜாங்க செயலாளர் சிங்கப்பூரில் கோடிட்டுக் காட்டியிருந்ததுடன், தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளை நோக்காகக் கொண்ட மேலதிக நிதியுதவியாக சுமார் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் அறிவித்தார்.

இது தொடர்பில் எம்மிடம் பல கேள்விகள் கேட்கப்பட்டன. எனவே இத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ள சில முக்கியமான விடயங்களை சுட்டிக் காட்ட நான் விரும்புகின்றேன். இதில் பல முக்கிய நலன்கள் உள்ளடங்கியுள்ளன.

இந்த நிதியுதவியானது பங்களாதேஷ், இந்தோனேசியா, மொங்கோலியா, நேபாளம், பசுபிக் தீவுகள், பிலிப்பைன்ஸ், இலங்கை, வியட்நாம் மற்றும் ஏனைய நாடுகளுடனான எமது பாதுகாப்புத் துறை உறவுகளில் கணிசமான முதலீட்டை பிரதிநிதித் துவப்படுத்துகிறது.

இந்திய-பசுபிக் பிராந்தியத்தில் சுதந்திரமான, பகிரங்கமான மற்றும் விதிகள் அடிப்படையிலான ஒழுங்கமைவுகளை உறுதிப் படுத்துவதற்கு முக்கியமான நான்கு விடயப் பரப்புகள் பற்றி இந்த முதலீடு கவனம் செலுத்துகிறது.

கடல்சார் பாதுகாப்பு, மனிதாபிமான உதவிகள், அனர்த்த பதில்வினை செயற்பாடுகள் அதேபோல், அமைதிகாக்கும் ஆற்றல்கள் மற்றும் நாடுகடந்த குற்றங்களை எதிர்கொள்ளுதல் என்பன இதில் உள்ளடங்குகின்றன.

கடல்சார் பாதுகாப்பு கருப்பொருளின் ஓரங்கமாக இந்து சமுத்திரத்தை கிழக்கு ஆசியாவுடன் இணைக்கும் முக்கிய கடல்வழிப் பாதைகளின் இருப்பிடமான இந்த முக்கிய பிராந்தியத்தில் சிவில் மற்றும் இராணுவ கடல்சார் பங்காளர்களின் ஆற்றலை வளர்ப்பதற்கு உதவ வங்காள விரிகுடா முயற்சியை அங்குரார்ப்பணம் செய்துள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

7 மாதத்தில் மட்டும் 154 யானைகள் மரணம்

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் 7 மாதத்தில் மாத்திரம் 154 யானைகள் உயிரிழந்துள்ளதாக வனவிலங்கு திணைக்களத்தின் யானை புள்ளி விபர பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த திணைக்களத்தில் பிரதி பணிப்பாளர் யூ.எல். தௌபிக் இதனை தெரிவித்துள்ளார்.

யானைகளுக்காக வைக்கப்படும் ஹக்கபடாஸை உண்ணுவதால்அதிகளவானயானைகள் உயிரிழந்துள்ளன.

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் அதிகப்படியான யானை மரணங்கள் பதிவாகியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, காட்டு யானைதாக்குதலுக்குஉள்ளாகி 58 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதில், 50 முதல் 60 வயதுக்கிடைப்பட்டவர்களே அதிகளவில் உயிரிழந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

வேலை வாய்ப்பு

01) Operation Theater Nurse

✓ சத்திரசிகிச்சை நிபுணரின் உதவியாளர்
↳ அடிப்படைச் சம்பளம்-35,000/- + Overtime

✓ Orthopedic சத்திரசிகிச்சை நிபுணரின் உதவியாளர்
↳ அடிப்படைச் சம்பளம்-40,000/- + Overtime

✓ மயக்கமருந்து நிபுணரின் உதவியாளர்
↳ அடிப்படைச் சம்பளம்-25,000/- + Overtime

02) தாதியர் (SLMC மருத்துவ சபையின் சான்றிதழ்)
தாதியர் (முன் அனுபவமும் உள்ளவர்களும்
↳ AIVA, NITA சான்றிதழ் பெற்றவர்கள் விரும்பத்தக்கது).

03) வரவேற்பாளர்

04) காசாளர்
↳ முன் அனுபவம் விரும்பத்தக்கது
↳ பயிலுநரும் விண்ணப்பிக்கலாம்

05) கணக்குப் பதிவாளர்

06) சுத்திகரிப்பாளர்
(ஒருநாள் வேதனம் 800/-)

07) அம்புலன்ஸ் சாரதி.

ETF/EPF

காலம்: 15.08.2018,
நேரம்: காலை 10 மணி

இடம்: புதிய யாழ்.வைத்தியசாலை

315, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.
(சுய விபரக் கோவையுடன் வருகை தரவும்)
தொலைபேசித் தொடர்பு- 077 310 7685

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சி அபிவிருத்திக்கழக அனுசரணையுடன் நாத நர்த்த வர்ணம் நிகழ்வு சாவகச்சேரி நகராட்சி மன்ற பொன்விழா மண்டபத்தில் கடந்த 4 ஆம் திகதி நடைபெற்றது.தென்மராட்சி கல்விவலயப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், தென்மராட்சி அபிவிருத்திக்கழக கனடாக்கிளை தலைவர், சி.சுரேந்திரன், தேசிய கல்வி நிறுவக செயற்றிட்ட அதிகாரி (நடனம்)திருமதி நி.திருக்குமரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்-விஜயவாசன்)



வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனின் 2018ஆம் ஆண்டுக்கான மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் 70 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி கருவிகள் அளவெட்டி, கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையத்துக்கு வழங்கப்பட்டன. கடந்த 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சனசமூக நிலையத் தலைவர் பவன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு மேற்படி பொருட்களை நிலையத்தினரிடம் கையளித்தார்.இந் நிகழ்வில் வலி.வடக்கு (தெல்லிப்பழை) பிரதேசசபைத்தலைவர் சோ.சுகிர்தன், வலி.வடக்கு (தெல்லிப்பழை) பிரதேச சபை உறுப்பினர்களான ச.சஜீவன், பா.மரியதாஸ் மற்றும் சனசமூக நிலைய நிர்வாகிகள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

(படங்கள்-கிஷோர்)

தேயிலையில் கிடைக்கும் இலாபத்தை தோட்டத்தொழிலாளர்களுக்கு வழங்கவும்

அமைச்சர் நவீன் திஸாநாயக்க வலியுறுத்து

(கொழும்பு)

தேயிலை உற்பத்தியினூடாக தோட்டக் கம்பனிகள் பெறும் இலாபத்தின் பெரும் பகுதியை தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என அமைச்சர் நவீன் திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியினூடாக பூண்டுலோயா டன்சினன் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மகாத்மா காந்தி புரம் கிராமத்தை பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வில் விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் 150 வருடத்திற்கு மேலாக தேயிலைக்கு உரம் கொடுத்து வாழும் தோட்ட தொழிலாளர்களை முன்னேற்றவும், தேயிலை தொழிலை முன்னேற்றவும் எதிர்காலத்தில் பல திட்டங்களை கொண்டு வரவுள்ளோம்.

இந்த மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக சகல நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ளவுள்ளோம். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு தேயிலை விலை குறைந்து காணப்பட்டது. தற்போது தேயிலையின் விலை உயர்வு கண்டுள்ளது.

எனவே கூடிய விரைவில் இந்த மக்களுக்கு எவ்வித பாகுபாடும் பாராது இவர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான திட்டங்களை எமது அமைச்சினூடாக முன்னெடுப்போம் என்றார். (2-9)

துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்; அபிவிருத்தி வேலைகள் குறித்து கலந்துரையாடல்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச மாநாட்டு மண்டபத்தில் இணைத்தலைவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இதில் புத்துவெட்டுவான், கொக்காவில் ஆகிய பகுதிகளில் பெருந்தொகையான காடுகள் அழிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான நிலப்பரப்பில் கிரவல் மண் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றபோதும், தமது பகுதிகளில் எந்தவித அபிவிருத்திகளும் முன்னெடுக்கப்படுவதில்லை என பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இவ்வாறு இந்தப் பிரதேசத்தில் காணப்படுகின்ற பெருமளவான வளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் இந்தக்கிராமங்களுக்கான பிரதான வீதி கூட புனரமைக்கப்படாது போக்குவரத்து வசதி, மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்றி இந்தப் பிரதேசத்தில் வாழும் தாங்கள் அன்றாடம் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தொடர்ந்தும் பிரதேச செயலகத்தின் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற வேலைத் திட்டங்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டதுடன், சுகாதாரம், கல்வி வீதி அபிவிருத்தி உள்ளிட்ட திணைக்கள ரீதியான முன்னேற்றங்கள் மற்றும் அபிவிருத்தி வேலைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டதுடன், மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதில் இணைத்தலைவர்களான அமைச்சர் றிசாத் பதியுதீன், பிரதி அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா, மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், கமலேஸ்வரன், மாகாண சபை அமைச்சர் க.சிவநேசன், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், திணைக்களத் தலைவர்கள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-315)

இளைஞர்களின் கண்டுபிடிப்புக்களுக்கு நிதி சார்ந்த உதவிகள் வழங்கப்படும்

(கொழும்பு)

இளைஞர்களது புதிய கண்டுபிடிப்புகளுக்கு இந்தாண்டு முதல் நிதிசார்ந்த உதவிகள் வழங்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

இதற்காக 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.தாமரைத்தடாக மண்டபத்தில் நடைபெற்ற இளைஞர் மாநாட்டில் உரை யாற்றும் போதே பிரதமர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.



இளைஞர்களது புதிய கண்டுபிடிப்புகள் குறித்து அவதானம் செலுத்தும் போது, அவை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் சார்ந்ததாக இருக்கின்றன.

இந்த கண்டுபிடிப்புகளை முன்கொண்டு செல்வதற்கு பல நிதி சார்ந்த தடைகள் நிலவுகின்றன.

இதன் காரணமாகவே இளைஞர்களின் புதிய கண்டுபிடிப்பு நிதியாக 100 மில்லியன் ரூபாய் முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த நிதி எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கப்படும் என்றும் பிரதமர் மேலும் குறிப்பிட்டார். (2-9)

பேருந்து தரிப்பிடம் சேதம் புனரமைத்து தருமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஏ-9 வீதி வடக்கு மாகாண சபைக்கு அண்மையில் அமைந்துள்ள பேருந்து தரிப்பிடம் பயன்பாட்டிற்கு உதவாத வகையில் சேதமடைந்து காணப்படுகிறது.

குறித்த தரிப்பிடத்துக்கு அண்மையில் கைதடி ஆயுள் வேத வைத்திய சாலை, பல் கலைக்கழகம் மற்றும் முதியோர் இல்லம் என்பன அமைந்துள்ளன.

எனவே அதிகளவான பயணிகள் குறித்த தரிப்பிடத்தை பயன்படுத்துவதால் சம்பந்தப்பட்டவர்கள் புனரமைத்து தரும்படி பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-9-29)

தமிழ்த் தேசிய இனத்தின் இலட்சியப்பயணத்தை சிதைப்பதற்கு அரசு கடுமையாக முயற்சிப்பு

எச்சரிக்கின்றார் சிறிதரன் எம்.பி.

(கிளிநொச்சி)

தமிழ்த்தேசிய இனத்தின் இலட்சியப்பயணத்தை சிதைக்க சிங்களப்பேரினவாதிகள் கடும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

பூநகரி, முக்கொம் பன், சின்னப்பல்ல வராயன்கட்டு மக்களுடனான சந்திப்பின் போதே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்கள் நீண்ட காலமாக ஓர் இலட்சியத்திற்காகவே போராடி வருகின்றோம். அகிம்சை ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் நாம் எமது உரிமைக்காகவே போராடி வந்துள்ளோம்.

போராடியும்வருகின்றோம். நாம் ஒரு தேசிய இனம். எமக்கு என்று தனித்துவமான மர்புகள், கலைகள் பண்பாடுகள் உண்டு. அவற்றை நாம் எவரிடமும் தாரை வார்த்து கொடுக்க முடியாது. அண்மைக்காலமாக சிங்கள அதிகாரவர்க்கத்தில் உள்ள தலைமைகள் பலரும் அதிகாரத்தை கைப்பற்ற நினைப்பவர்களும் இவ்வாறான கருத்துக்களை கொண்டிருக்கிறார்கள் என அறிகின்றோம்.

அண்மையில் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே அபிவிருத்திக்காக தமிழ் மக்கள் போராட்டம் நடத்த வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டிருந்தார்.

அவரின் கருத்திற்கு பின்னால் நாம் எமது உரிமைகள் பற்றி சிந்திக்காது நாம் இந்த மண்ணிலேயே அடிமைகளாகவும் தாங்கள் தருகின்ற எலும்புத் துண்டுகளை கௌவிக் கொண்டு திரிய வேண்டும் எனவும் ஆசைப்படுகிறார்கள்.

அதற்காக அவர் கடந்த கால ஆட்சியில் அவர்கள் எலும்புத் துண்டுகளை கௌவிக் கொண்டு திரிந்தவர்களை துணைக்கு அழைத்துக் கொண்டு செல்கிறார்.

ஆனால் எமது மக்கள் விழிப்பாகவும் இலட்சியப் பயணத்தை தவறிடாமலும் பயணித்துக் கொண்டே இருக்கிறார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் வடக்கு மாகாண உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2)

செஞ்சோலை படுகொலை நினைவேந்தல் இன்று

(பளிக்கன்குளம்)

கடந்த 14.08.2006 ஆம் ஆண்டில் இராணுவத்தின் விமானப்படை தாக்குதலில் படுகொலைசெய்யப்பட்ட செஞ்சோலை மாணவர்களின் பன்னிரெண்டாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு வன்னிக்குறோஸ் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் இடைக்கட்டு சந்தியில் விசேடமாக அமைக்கப்படும் நினைவு மண்டபத்தில் மாணவர்களின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு நினைவு நிகழ்வு இடம் பெறவுள்ளது. (2-281)

50 மில்.ரூபா செலவில் 17 வேலைத்திட்டங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்குமான செயலகம் ஊடாக 50 மில்லியன் ரூபா செலவில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக, கிளிநொச்சி மாவட்டத்தில் கமநல அபிவிருத்தித்திணைக்களம் ஊடாக இவ்வாண்டில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சின் ஊடாக 17 வேலைத் திட்டங்கள் 50 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, பூநகரி பச்சிலைப்பள்ளி, முழங்காவில் புளியம்பொக்கணை, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் காணப்படுகின்ற 17 சிறிய குளங்கள் இவ் வேலைத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

கடும் வரட்சியினால் சிறுபோகச்செய்கை, கால போகச்செய்கை முழுமையாக பாதிப்பு

கிணறுகளை ஆழப்படுத்தித் தருமாறு கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேசத்தின் வரட்சி நிலைமைகள் தொடர்பிலும் வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான குடிநீர் விநியோகம் மற்றும் விவசாயிகளுக்கான காலபோக விதை நெல் வழங்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் கடுமையான வரட்சி காரணமாக பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேசத்திற்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு பிரதேச மாநாட்டு மண்டபத்தில் இணைத் தலைவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது வரட்சி நிலைமைகள் தொடர்பில் பொது அமைப்புக்கள்குறிப்பிடுகையில்,

குறிப்பாக, தற்போது இவ்வாறு வரட்சியின் பாதிப்பினால் மூன்று ஆண்டுகளாக காலபோக மற்றும் சிறுபோகச் செய்கை முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், விவசாயக் குடும்பங்களும் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளன,

உடனடியாக 250 வரையான கிணறுகளை ஆழப் படுத்தித் தருமாறும் தெரிவிக்கப்பட்டது. (2-315)

மாந்தை கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேசத்திற்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடை பெற்றுள்ளது.

முல்லைத்தீவுமாவட்டத்தின் மாந்தைகிழக்குப் பிரதேசத்திற்கான பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்றுகாலை 9.30 மணிக்கு பிரதேச மாநாட்டுமண்டபத்தில் இணைத் தலைவர்கள் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதில் பிரதேச செயலகத்தின் ஊடாக செயற்படுத்தபபடுகின்ற வேலைத்திட்டங் கள் பற்றிக் கலந்துரையாடப் பட்டதுடன், சுகாதாரம், கல்வி வீதி அபிவிருத்தி உள்ளிட்ட திணைக்கள ரீதியான முன்னேற்றங்கள் மற்றும் அபிவிருத்திவேலைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டதுடன், மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதில் இணைத்தலைவர்களான அமைச்சர் றிசாத் பதியுதீன், பிரதி அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா , மாகாண சபை உறுப்பினர்களான து. ரவிகரன், கமலேஸ்வரன் , மாகாண சபை அமைச்சர் க.சிவநேசன், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், திணைக்களத் தலைவர்கள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-315)

பனங்காமம் குளத்தின் புனரமைப்புப்பணி குறித்து இரு குழுக்களுக்கிடையில் வாதப்பிரதிவாதங்கள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பனங்காமம் குளத்தின் புனரமைப்பத் தொடர்பில் இரு குழுக்களிடையே வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றதால் கூட்டத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப்பிரதேசத்திற்கான பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு பிரதேச மாநாட்டு மண்டபத்தில் இணைத்தலைவர்கள் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதன்போது கடந்த கூட்ட அறிக்கை தொடர்பில் முல்லைத்தீவு வவுனிக்குளம் நீர்ப்பாசனத்திணைக்களத்திற் குட்பட்ட மாந்தை கிழக்கு பனங்காமம் குளத்தை புனரமைத்துத்தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வருடத்திலும் இக் குளத்தின் அபிவிருத்தி வேலைகளுக்கு மாவட்டச் செயலகத்தினால் 8.5 மில்லியன் நிதி கிடைக்கப்பெற்றபோது அந்த நிதியின் மூலம் மேற்படி குளத்தில் உரிய புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறு தாம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் ஆனால் குறித்த வேலைகள் முன்னெடுக்கப் படவில்லையெனவும் கமக்கார அமைப்பின் ஒரு பகுதியினர் சுட்டிக்காட்டினர். இதேவேளை மற்றைய தரப்பு வேலைகள் முழுமை பெற்றதாக தெரிவித்தனர்.

இந்த நிதியின் மூலம் பனங்காமம்குளத்தின் வேலை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வேலைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

அணைக்கட்டில் காணப்பட்ட நீர்க்கசிவைக்கட்டுப்படுத்துவது, குளத்தின் கீழான வாய்க்கால்கள் புனரமைப்புமாக இரண்டு வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் நீர்ப்பாசனத்திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளத்தில் அமைந்துள்ள முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களின் உயிரிழை அமைப்பிற்கு 20 Clip-on Wheel Chair கொள்வனவு செய்வதற்காக இரண்டு இலட்சம் ரூபா வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் அன்பளிப்பாக அண்மையில் வழங்கப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

நான் அரசியலுக்கு வரமாட்டேன்

சங்கக்கார உறுதி

(கொழும்பு)

நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசியலுக்குள் பிரவேசிக்கமாட்டேன் என்பதனை மிகவும் உறுதியாக தெரிவித்துக்கொள்கிறேன் என இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

சங்கக்காரவை எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் களமிறக்குவது குறித்து பல்வேறு தரப்பினர் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வரும் நிலையில், குமார் சங்கக்கார தனது பேஸ்புக் பதிவு ஒன்றின் மூலம் தனது அரசியல் பிரவேசம் குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது, "2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் நான் வேட்பாளராக களமிறங்க உள்ளதாக வெளியான அறிக்கைகளை மிகவும் அக்கறையுடன் வாசித்தேன்.

பொதுமக்கள் மற்றும் ஊடகங்களில் எனது அரசியல் பிரவேசம் தொடர்பில் வெளியிட்ட பல்வேறுபட்ட கருத்துக்கள் தொடர்பில் நான் நன்கு அறிவேன். சிலர் என்னை பொருத்தமான வேட்பாளராக தேர்ந்தெடுப்பதுடன் இன்னும் சிலர் எனது நம்பகத்தன்மை தொடர்பிலும், என்னது துறை தொடர்பிலும் கேள்வி எழுப்புகின்றனர்.

பொதுமக்களின் மாறுபட்ட அனைத்து கருத்துக்களுக்கும் நான் மதிப்பளிக்கிறேன். நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசியலில் களமிறங்க அபிலாஷைகளை கொண்டிருக்கவில்லை. அவ்வாறான ஓர் உத்தேசம் எனக்கு கிடையாது. நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசியலில் பிரவேசிக்க மாட்டேன் என்பதனை மிகவும் உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசியல் மற்றும் பொதுச் சேவை என்பன மிகவும் பாரதூரமான பொறுப்புக்களாகும் என நான் நம்புகின்றேன்.

பொதுச்சேவையில் பொறுப்புக்கூறல், நேர்மை, வெளிப்படைத்தன்மை, மரியாதை என்பவற்றுடன் பணியாற்ற வேண்டும்.

பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட பொது ஊழியர்கள் மீது நான் மிகுந்த மரியாதை வைத்திருக்கிறேன்.

கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டதன் பின்னர் எனது பிரதான நோக்கம் குடும்பத்துடன் நேரத்தை செலவிடுவது மட்டுமேயாகும். அறக்கட்டளைகளுடன் இணைந்து பல்வேறு சேவைகளை ஆற்றுவதற்கு விரும்புகின்றேன்.

கிரிக்கெட் துறையில் தொடர்ந்தும் ஏதோ ஓர் வகையில் சேவையாற்றுவது குறித்தும் ஆலோசித்து வருகின்றேன்" என குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.(இ-7)

எமது சமுதாயத்தில் நுனிப்புல் மேயும் கல்வி நிலைதான் தற்போதுள்ளது

யோகேஸ்வரன் எம்.பி.கவலை

(வாகரை)

தேடிப் படிக்கின்ற தன்மை தற்போது எமது சமுதாயத்தில் குறைந்து விட்டது. நுனிப்புல் மேய்வது என்று சொல்லக் கூடிய கல்வி நிலைமைதான் தற்போது இருக்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வாகரை பால்சேனையில் வாசிப்பு நிலையம் ஆரம்பிக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நுனிப்புல் மேய்வது என்று சொல்லக் கூடிய கல்வி நிலைமைதான் தற்போது இருக்கின்றது. பரீட்சைக்கான ஒரு படிப்பு அந்த படிப்பைப் பயன்படுத்தி பரீட்சைப் பெறுபேற்றைப் பெற்றுச் செல்லுகின்றோம்.

ஆனால் பழங்காலத்தில் இருந்த கல்வி நிலை ஆழக் கற்கின்ற படிப்பு. பல நூல்களை வாசித்து அதன் மூலம் பயன்களைப் பெற்றார்கள். அதனால் தான் அந்தக் காலத்தில் பண்டிதர்கள், புலவர்கள் எனப் பலர் விளங்கினார்கள்.

அந்நிலை தற்போது இல்லை. அனைத்தையும் தேடிப் படிக்கின்ற தன்மை தற்போது எமது சமுதாயத்தில் குறைந்து விட்டது.

வெளிநாடுகளில் தேடல்கள் அதிகமாக இருக்கின்றது. அதனால்தான் பல புதிய புதிய கண்டுபிடிப்புகள் இடம் பெறுகின்றன. அவ்வாறான தேடல், நூல்களை ஆராய்தல் எங்களிடம் மிகக் குறைவு.

எமது பல வாசிகசாலைகளில் புத்தகங்கள் இன்னமும் புதிதாகவே இருக்கின்றன. எங்களது நூலகங்களில் புத்தகங்களைப் புதிதாக வைப்பதில் எமது மக்கள் மிகவும் கரிசனை கொண்டவர்கள்.

பயன்படுத்தப்படாவிட்டால் புத்தகம் புதிதாகவே இருக்கும். இந்நிலை மாற வேண்டும். நூலகத்தில் உள்ள புத்தகங்கள் வாசித்துப் பழுதடைய வேண்டும். அவ்வாறு இருந்தால் தான் நாங்கள் சிறந்த அறிவுத் திறனைப் பெற்றுக் கொள்ளலாம்.

நிறைய நூலகங்களில் தரமான நூல்கள் இருக்கின்றன. ஆனால் அவை பயன்படுத்தப்படுகின்ற வீதம் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. கல்வித் திட்டங்களிலும் நாங்கள் அதைத் தான் எதிர்பார்க்கிறோம்.

சில காலங்களுக்கு முன் ஒப்படைத் திட்டம் என்று கொண்டு வந்தார்கள். அதுவும் தற்போது மறைந்து விட்டது. தேடல் கல்வி தான் சிறந்தது.

மேலைநாடுகளில் இருக்கும் கல்வியெல்லாம் தேடல் கல்வி தற்போது அவ்வாறு அல்ல பரீட்சைக்கான கல்வியே இங்கு இருக்கின்றது. அதில் கேள்வியையும் பதில் களையும் தந்து விடுவார்கள்.

இதனால் தேடல் கல்வி எங்களிடம் இல்லை. ஆனால் மேலை நாடுகளில் கல்வியைத் தேடிக் கற்கின்றார்கள். பல புத்தகங்களை வாசித்த பின்புதான் அங்கெல்லாம் பரீட்சை எழுத முடியும். இந்த நிலையை எமது நாட்டிலும் கொண்டு வர வேண்டும்.

அவ்வாறு கொண்டுவரப்படும் போது தான் நூலகங்கள் பயன்படுத்தப்படும். அவ்வாறு இல்லாவிடில் புதுப் புத்தகங்களாகவே நூலகங்கள் இருந்து கொண்டிருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

எதிர்க்கட்சித் தலைவர் பதவி குறித்து மகிந்த தலைமையில் இன்று ஆராய்வு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம் தொடர்பில், முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட எம்.பியுமான மகிந்த ராஜபக்ஷ தலைமையில், ஒன்றிணைந்த எதிரணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கூடி ஆராயவுள்ளனர்.

இந்தக் கூட்டம், முன்னாள் ஜனாதிபதியின் கொழும்பிலுள்ள உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தின் போது, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதியன்று கொழும்பில் நடத்தவுள்ள, அரசாங்கத்துக்கு எதிரான பேரணி தொடர்பிலும் விரிவாகக் கலந்துரையாடப்படவுள்ளது.

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரை மாற்றுவதற்கான அதிகாரம், அரசமைப்பிலோ மற்றும் சம்பிரதாயத்தின் பிரகாரமோ இல்லையென, கடந்த வெள்ளிக்கிழமையன்று நாடாளுமன்றத்துக்கு அறிவித்த, சபாநாயகர் கருஜெயசூரிய, நாடாளுமன்ற சம்பிரதாயத்துக்கமைய, எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், எதிர்க்கட்சித் தலைவராக தொடர்ந்தும் செயற்படுவார் என அவ்வறிவிப்பில் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

வீதி விபத்தில் இருவர் படுகாயம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு - கல்முனை வீதி தாளங்குடா சந்தியில் நேற்றுக்காலை இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் காயமடைந்ததாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கிச் சென்ற கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தாளங்குடாவிலிருந்து காத்தான்குடி நோக்கி சைக்கிளில் வந்து கொண்டிருந்த கூலித் தொழிலாளி மீது மோதியதுடன் வீதி மருங்கிலிருந்த மரம் மற்றும் கொங்கிறீட் கற்குவியல் மீது மோதி நின்றது.

இச்சம்பவத்தில் காரை செலுத்திச் சென்றவரும் கூலித் தொழிலாளியான தாளங்குடாவைச் சேர்ந்த 56 வயது எஸ். ஆறுமுகம் என்பவரும் காயங்களுக்குள்ளாகிய நிலையில் காத்தான்குடி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் படுகாயங்களுக்குள்ளான கூலித் தொழிலாளி மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.



குறித்த விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஞானசாரர் சிறைக் கைதிகளின் உடையில்

(கொழும்பு)

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஆறு ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பொதுபல சேனாவின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு சிறைக் கைதிகள் அணியும் ஆடைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஞானசார தேரர் சிறி ஜெயவர்த்தனபுர வைத்திய சாலையில் 5 ஆவது இலக்க விடுதியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவருக்கு ஒரு சிறை அதிகாரியும், இரண்டு சிறைக் காவலர்களும் ஆயுதங்களுடன் பாதுகாப்பு அளித்து வருகின்றனர்.

இந்த நிலையில், ஞானசார தேரருக்கு சிறைக் கைதிகள் அணியும் ஆடையை சிறைச்சாலை அதிகாரிகள் வழங்கியுள்ளனர்.

சிறைக்கைதிகள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் போது அணியும் காற்சட்டை மற்றும் மேலங்கியே ஞானசார தேரருக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் அனைவரும் சிறைச்சாலை உடைகளை அணிய வேண்டியது கட்டாயமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

உணவே மருந்து

'உணவே மருந்து' என்பது தான் நம் மரபாகும். நோய் எதிர்ப்பு சக்தியை அளிப்பது மட்டுமின்றி, நோய்களைக் குணப்படுத்துவதும் நல்லுணவின் குணம். எந்த உணவை எப்படி உண்ண வேண்டும் என்று முறை வகுத்து கடைப்பிடித்தனர் நம் முன்னோர். முறையற்ற உணவுப் பழக்கங்கள் நோய்களுக்கு மூலகாரணங்களாக அமைகின்றன.

இன்று, மரபுகளை மீறி எது எதையோ சாப்பிடுகிறோம். வாழ்க்கைமுறை மாறியது போல உணவு முறையும் மாறிவிட்டது. வயிறு, குப்பைக்கிடங்கைப் போல மாறிவிட்டது. இந்தச் சூழலில் நம் இயல்பை மீட்டெடுக்கவும் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் இயற்கை மருத்துவமானது "உணவு சிகிச்சை" என்ற முறையைக் கையாள்கிறது. சாத்வீகம், தமசீகம், ராஜசீகம் என்று உணவில் மூன்றுவகைக் குணாங்கள் உண்டு. இயற்கையான, பசுமையான காய்கறிகள், பழங்கள், தானியங்களையே சாத்வீக உணவு என்கிறோம். உடல் வலிமையையும் நீண்ட ஆயுளையும் தரக்கூடிய இந்த உணவில் உயிர்ச்சத்துகள் ஏராளமாக உள்ளன. சாத்வீக உணவுகளை உண்டால் உடல் உறுதிபெறும்.

தமசீக உணவு என்பது சமைத்த, பதப்படுத்தப்பட்ட, எண்ணெயில் பொரித்த சத்துகளைப் பிரித்தெடுத்த உணவுகளாகும். சமைத்து மூன்று மணிநேரம் ஆன அனைத்தும் தமசீக உணவுகளே. ராஜசீக உணவு என்பது மாமிச உணவுகளைக் குறிக்கும். இவற்றை உண்பதால் உடலில் சில ஹோர்மோன் மாற்றங்கள் ஏற்படும்.

நோயின்றி வாழ சாத்வீக உணவுகளை உண்ண வேண்டியது அவசியம். வாழும் சூழலில் அந்தந்த காலங்களில் விளையக்கூடிய பழங்கள், தேன், மோர், இளநீர், கைக்குத்தல் அரிசி, முழுத் தானியங்கள் தாம் சரிவிகித உணவுகள். இனிப்பு, உப்பு, நெய், வெண்ணெய், மிளகாய், எண்ணெயில் பொரித்த உணவுகள், காரமான உணவுகள், பேக்கரி உணவுகள் போன்றவற்றைக் குறைவாகச் சாப்பிட வேண்டும். தீட்டிய அரிசி, மைதா போன்றவற்றைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும். அதிக சூடு, அதிகக் குளிர்ச்சி நிறைந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும். கீரை வகைகள், நார்ச் சத்து நிறைந்த உணவுகளைத் தினமும் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். மதிய உணவில் காய்கறிகள் அதிகம் இருக்க வேண்டும்.

செரிமான சக்தி வாயிலிருந்தே ஆரம்பித்துவிடுகிறது. உணவை மெல்லும் போதே செரிமானம் தொடங்கி விடுகிறது என்பதால், கஞ்சி, சூப் திரவ உணவை நன்றாகச்சுவைத்து அருந்தவேண்டும். நீர் உட்பட எந்த பானத்தையும் நின்றுகொண்டு குடிக்கக் கூடாது. அமர்ந்துதான் குடிக்க வேண்டும். அதேபோல, திட உணவை நன்றாக மென்று சாப்பிடவேண்டும். இதனால் எச்சிலுடன் சேரும் உணவு நன்கு செரிமானமாகும். போதிய அளவுக்கு இன்சுலினும் சுரப்பதால், நீரிழிவு நோய் வராமல் தடுக்க முடியும். உணவு செரிமானத்துக்குப் பிறகு சத்துகள் இரத்தத்தில் கலப்பதால் உடல் உறுப்புகளும் சுரப்பிகளும் சீராக இயங்கும். உடல் ஆரோக்கியமாக இருக்கும். மூன்று வேளை உணவில் ஒருவேளை, பழங்களும் காய்கறிகளும் எடுத்துக் கொள்ள வேண்டும். பசி எடுத்த பிறகு சாப்பிடுவதே ஆரோக்கியம். ஒருவேளை உணவு உண்டதும், அடுத்தது நான்கு மணி நேரம் கழித்தே சாப்பிட வேண்டும். இடைப்பட்ட நேரத்தில் நீராகாரம் எடுத்துக்கொள்ளலாம். இரவில் எளிதாகச் செரிமானமாகும் உணவை உண்பது நல்லது. அவசர அவசரமாகச் சாப்பிடக்கூடாது. உணவு உண்பதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னதாக நீர் அருந்துவது நல்லது. உணவு

உண்ணும்போது நடுவே நீர் அருந்தக்கூடாது. சாப்பிட்டு அரை மணி நேரம் கழித்த பிறகே நீர் அருந்த வேண்டும். பேசக்கூடாது. மனதில் தீயவை எதையும் நினைக்காமல் சாப்பிட வேண்டும்.

எப்போதும் அரை வயிறு மட்டுமே உணவு உண்ண வேண்டும். கால் வயிறு நீரும் கால் வயிறு காலியாகவும் இருக்க வேண்டும். அப்படிச் சாப்பிட்டால்தான் வயிற்றில் உள்ள சுரப்பிகள் சுரந்து உணவு செரிமானமாக உதவும். இன்றைக்கு வரும் எல்லா நோய்களுக்கும் காரணம், சரியான உணவு முறைகளைப் பின்பற்றாததே. எனவே, உணவில் அக்கறை செலுத்துவோம். இயற்கை வழிமுறைகளின்படி உணவை உண்போம். நோய்களை வெல்வோம்.

ஒன்றிணைந்த எதிரணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்காதது தொடர்பில் சிக்கல்

(கொழும்பு)

ஒன்றிணைந்த எதிரணிக்கு நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் பதவியை வழங்காமை தொடர்பில் நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த ஆரம்பத்தில் 100 நாள் ஆட்சி இடம்பெற்றது.

அந்தக் காலப்பகுதியில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை நிமால் சிறிபால டி சில்வாவிற்கு வழங்கமுடியுமானால் அதனை கூட்டு எதிர்க்கட்சிக்கு வழங்க முடியாமல் போனது சிக்கலான விடயம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பதுளை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றின் போதே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டார். (இ-7)

பாரவூர்தி-வான் விபத்து; ஆறு பேர் படுகாயம்



(பலாங்கொடை)

பலாங்கொடை- கல்தொட்ட பிரதான வீதியில் குமாரகம சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

பாரவூர்தியொன்றும் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதி நேற்று முன்தினம் மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் பலாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் வீடொன்றின் பாதுகாப்புச் சுவருக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

மு.காவுக்கு பெரிய வில்லங்கமாக சிநேக சக்திகளே மாறியுள்ளன

சு.க., ஐ.தே.க. மீது ஹக்கீம் காட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகள் இன்று எங்களை கிழக்கில் மிகப் பெரிய எதிரிகளாகப் பார்க்கின்றனர் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸின் அட்டாளைச்சேனை மத்திய குழுவுடனான சந்திப்பு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆலங்குளம் பிரதேசத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்



கிரஸினை சிநேக சக்திகள் என்று நினைத்தவர்கள் இன்று பெரிய வில்லங்கமாக மாறியிருக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து முதற் தடவையாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டோம். இதன்மூலம் அழிந்து போயிருக்கின்ற ஒரு கட்சிக்கு உயிரூட்டுகின்ற ஒரு வேலையை பார்த்துவிட்டோமா என்று சிந்திக்கத் தூண்டுகிறது.

அது மாத்திரமின்றி அழிந்து போயிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இன்று தலைதூக்கி ஆடிக்கொண்டிருக்கிறது. மேலும், கடந்த கால ஆட்சியாளர்கள் குறித்து நாம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. அவர்கள் இந்தப் பகுதிகளில் மூக்கு நுழைப்பதற்கு வரவில்லை.

ஆனால், அரசாங்கத்தில் இருக்கின்ற பங்காளிக் கட்சிகள்தான் இன்று எங்களுக்கு பெரிய வில்லங்கமாக மாறியிருக்கின்றன. இதனால் அடுத்தகட்ட அரசியலுக்காக கட்சியின் கட்டமைப்பை சீர்படுத்திக்கொள்ள வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

வெளிப்படை விலைச்சூத்திரத்தை முன்னெடுக்க இலங். பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு அழைப்பு

(கொழும்பு)

விமானங்களுக்கான எரிபொருள் விலையிடல் தொடர்பில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் வெளிப்படையற்ற தன்மை குறித்து கண்டனம் தெரிவித்துள்ள சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கம் வெளிப்படைத் தன்மையுள்ள விலை சூத்திரத்தை முன்னெடுக்க அழைப்பு விடுத்துள்ளதுடன் மீள் எரிபொருளை ஏற்றுவது தொடர்பிலான செலவின அதிகரிப்பானது விமான தொழிற்றுறையை திணறச் செய்யும் ஒன்றாகவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

உலக விமான சேவைகள் ஒன்றியத்தைச் சேர்ந்த குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் உள்ளடங்கலான உத்தியோகத்தர்களை சந்தித்து ஏனைய ஆசிய விமான நிலையங்களிலான விமான எரிபொருள் விலையை விடவும் இங்கு விமான எரிபொருள் விலை குறிப்பிடத்தக்க அளவில் உயர்வாக உள்ளதை சுட்டிக்காட்டியுள்ளது.

உதாரணத்திற்கு இலங்கையில் விமான எரிபொருள் விலையானது சிங்கப்பூரிலுள்ளதை விடவும் 21 சதவீதம் அதிகமாகவும் ஹொங்கொங்கிலுள்ளதை விடவும் 13 சதவீதம் அதிகமாகவும் பெங்களூரிலுள்ளதை விடவும் 8 சதவீதம் அதிகமாகவும் உள்ளது.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் மாதாந்த விலைகள் அரபு வளைகுடா "மொபக்" அமைப்பின் விலைகளுக்கு ஒத்திசைவாக இருக்கின்ற அதேசமயம் எரிபொருள் விலைகளிலான இடைவெளி முரணானதாகவுள்ளதை அவதானிக்க முடிவதாக சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கம் தெரிவித்துள்ளது.

சில சந்தர்ப்பங்களில் சர்வதேச எரிபொருள் குறிகாட்டியாகவுள்ள மொபக்கின் விலை சரிவடையும் காலத்திலும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தனது விலைகளை தொடர்ந்து பேணி வந்துள்ளதாகவும் ஏக விநியோகஸ்தர் என்ற வகையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விலைகளிலான வெளிப்படைத் தன்மையைப் பேணாமல் தான் தெரிவு செய்த விலைகளை நிர்ணயிக்கக் கூடிய நிலை காணப்படுவதாகவும் அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

அதிகரித்த விலையானது இலங்கையின் விமான நிலையத்தையும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவையையும் பாதிப்பதாகவுள்ளது என அந்தச் சங்கம் எச்சரித்துள்ளது. (இ-7)

பாரதம்

சிறுமிகளை பாலியல் வன்முறைக்குட்படுத்துவோருக்கு மரணதண்டனை விதிக்கும் சட்டத்துக்கு ஜனாதிபதி ஒப்புதல்

(டில்லி)

12 வயதுக்கு உட்பட்ட சிறுமிகளை வன்புணர்வோருக்கு மரண தண்டனை விதிக்க வகை செய்யும் சட்டத்துக்கு ஜனாதிபதி ஒப்புதல் அளித்தார்.

காஷ்மீரின் கதுவாவில் சிறுமி ஒருவர் துஷ்பிரயோகம் செய்து கொலை செய்யப்பட்ட சம்பவமும், உத்தரபிரதேசத்தின் உன்னாவ் நகரில் 17 வயது சிறுமி ஒருவர் எம்.எல்.ஏ. உள்ளிட்டோரால் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவமும் கடந்த சில மாதங்களுக்கு முன் நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தின.

இதைத்தொடர்ந்து சிறுமிகளை வன்புணர்வுக்குட்படுத்துவோருக்கு மரண தண்டனை விதிக்கும் வகையில் கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி மத்திய அரசு அவசர சட்டம் பிறப்பித்தது. பின்னர் இந்த அவசர சட்டத்துக்கு பதிலாக புதிய சட்ட திருத்த மசோதாவை அண்மையில் நடந்து முடிந்த



நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் மத்திய அரசு தாக்கல் செய்தது.

குற்றவியல் சட்டம் (திருத்தம்) மசோதா 2018 என்ற இந்த மசோதா நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேறியது. இதைத்தொடர்ந்து ஜனாதிபதியின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்ட இந்த மசோதாவுக்கு, ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் நேற்று முன்தினம் ஒப்புதல் வழங்கினார். இதன் மூலம் இந்த சட்டம் அமுலுக்கு வந்துள்ளது.

குற்றவியல் (சட்ட திருத்தம்) சட்டம் என அழைக்கப்படும் இந்த சட்டம், கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி முதலே அமுலுக்கு வந்ததாக கருதப்படும் என மத்திய அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

இதன் மூலம் இந்திய தண்டனை சட்டம், இந்திய சாட்சிகள் சட்டம் 1872, குற்றவியல் நடைமுறை சட்டம் 1973 மற்றும் போக்சோ சட்டம் 2012 ஆகியவற்றில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த புதிய சட்டம், வன்புணர்வில் ஈடுபடுவோருக்கு கடும் தண்டனை வழங்க வழிவகுக்கிறது. குறிப்பாக 12 வயதுக்கு உட்பட்ட சிறுமிகளை வன்புணர்வோருக்கு மரண தண்டனை வழங்கப்படும். இதில் குறைந்தபட்ச தண்டனையாக 20 ஆண்டுகள் அல்லது வாழ்நாள் சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

இந்த சிறுமிகளை கூட்டு பலாத்காரத்தில் ஈடுபடுவோருக்கு வாழ்நாள் சிறை அல்லது மரண தண்டனையும் விதிக்க வகை செய்கிறது.

16 வயதுக்கு உட்பட்ட சிறுமிகளை வன்புணர்வோருக்கான குறைந்தபட்ச சிறைத் தண்டனை 10 ஆண்டுகளில் இருந்து 20 ஆண்டாக அதிகரிக்கப்படுகிறது. இது வாழ்நாள் சிறையாக அதிகரிக்கவும் வழி வகுக்கிறது. இந்த சிறுமிகளை கூட்டு பலாத்காரம் செய்வோருக்கு வாழ்நாள் சிறை விதிக்கப்படும். இந்த வன்புணர்வு வழக்குகளை விரைவாக விசாரித்து முடிக்கவும் இந்த சட்டம் வழிவகுப்பது குறிப்பிடத்தக்கது. (7)

சவுதிக் கூட்டுப்படை
ஹவுதி கிளர்ச்சி

(சனா)

ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து, சவுதி அரேபிய கூட்டுப்படைகள் நடத்திய வான்தாக்குதல்களில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் 50 பேர் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர்.

ஏமன் நாட்டில் கடந்த 2015ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதி மன்சூர் ஹாதி படைகளுக்கும், ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே போர் நடந்து வருகிறது.

இதில் ஹவுதி கிளர்ச்சி

யாளர்களை ஈரான் ஆதரிக்கிறது. அதே நேரத்தில் ஜனாதிபதி ஆதரவு

சிரிய ஆயுதக் கி
குழந்தைகள் உட

(டமாஸ்கஸ்)

சிரியா நாட்டின் இட்லிப் மாகாணத்தில் உள்ள ஆயுதக் கிடங்கில் நேற்று முன்தினம் ஏற்பட்ட வெடி விபத்தில் குழந்தைகள் உட்பட 40 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவின் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ள இட்லிப் மாகாணத்தில் அரசுப்படைகளுக்கும் போராளிக்குழுக்களுக்கும் இடையே நடந்துவரும் உள்நாட்டுப் போரால் அங்கு வாழும் சுமார் 25 இலட்சம் மக்களில் சரிபாதி பேர் தங்களது வசிப்பிடங்களை விட்டு வெளியேறி விட்டனர்.

இந்த மாகாணத்தின் பல பகுதிகள் போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்நிலையில், இட்லிப் மாகாணத்தில் துருக்கி நாட்டின் எல்லை

கருணாநிதியின் சமாதியில் நடிகர் விஜய் அஞ்சலி

(டில்லி)

தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு திரையுலகத்தினர் சார்பில் நடிகர் விஜய், நேற்று திங்கட்கிழமை காலை கருணாநிதியின் நினைவிடத்திற்கு சென்று அஞ்சலி செலுத்தினார்.

தி.மு.க தலைவர் கருணாநிதி கடந்த 7 ஆம் திகதி உடல் நலக்குறைவால் காலமானார். அரசியல் தலைவர்கள், சினிமா பிரபலங்கள் மற்றும் பொதுமக்களின் கண்ணீர் அஞ்சலிக்கு பின்னர், அவரது உடல் சென்னை மெரினா கடற்கரையில் அண்ணா சமாதிக்கு அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அன்று முதல் இன்று வரை பொதுமக்கள் பலரும் கருணாநிதி சமாதிக்கு நேரில் வந்து மரியாதை செலுத்தி வருகின்றனர். அதேபோல் அரசியல் தலைவர்கள் மற்றும் சினிமா பிரபலங்களும் கருணாநிதி சமாதிக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், அமெரிக்காவில் சர்கார் படப்பிடிப்பை முடித்துக் கொண்டு நேற்று அதிகாலை சென்னை திரும்பிய நடிகர் விஜய், நேராக மெரினா கடற்கரையில் உள்ள கருணாநிதியின் சமாதிக்கு சென்று மரியாதை செலுத்தினார். (7)

தி.மு.க.வை வழி நடத்த ஸ்டாலின் தான் வர வேண்டும்
துரைமுருகன் வலியுறுத்து

(வேலூர்)

கருணாநிதியை இழந்து வாடும் தி.மு.க. தொண்டர்களையும், கட்சியையும் செயல் தலைவர் ஸ்டாலினே வழிநடத்த வரவேண்டும் என்று முன்னாள் அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.

கருணாநிதிக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வேலூரில் தி.மு.க. சார்பில் அமைதி பேரணி நடந்தது.

பேரணியில் தி.மு.க. முதன்மை செயலாளரும், முன்னாள் அமைச்சருமான துரைமுருகன், முன்னாள் எம்.பி முகமதுசகி, எம்.எல். ஏக்கள் காந்தி, நந்தகுமார், கார்த்திகேயன், நல்லதம்பி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வேலூர் மத்திய மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் இருந்து தொடங்கிய பேரணி காட்பாடி சாலை, மக்கான் சிக்னல், பழைய பேருந்து நிலையம் வழியாக அண்ணா சாலையில் உள்ள தி.மு.க. மாநகர அலுவலகத்தில் நிறைவடைந்தது.

அங்கு வைக்கப்பட்டுள்ள கருணாநிதி உருவப்படத்துக்கு மலர் தூவி துரைமுருகன் அஞ்சலி செலுத்தினார். அப்போது அவர் தெரிவித்தாவது,

தி.மு.க. தலைவர் கருணாநிதி இல்லாத நாட்கள் என் வாழ்க்கையில் இருண்டு போனதாக கருதுகிறேன். அவரின் மறைவு வருத்தம் அளிக்கிறது. அவருக்கு முன்பு நான் இறப்பேன் என நினைத்தேன். ஆனால் என்னை அவர் முந்திக் கொண்டு சென்று விட்டார்.

என்னால் அதை தாங்கிக் கொள்ள முடியவில்லை.

எத்தனையோ பேருக்கு பாரத ரத்னா விருதுகளை கருணாநிதி வாங்கிக் கொடுத்துள்ளார். ஆனால் அவருக்கு நாங்கள் அந்த விருதை கேட்பதைவிட தோழமை கட்சிகள் கேட்பதே சிறந்தது. இதற்கு மத்திய அரசு மனசு வைக்க வேண்டும்.

கருணாநிதியின் உடல் மறைந்திருக்கலாம். ஆனால், அவர் ஊட்டிய உணர்வு சொல்லிக் கொடுத்த சுயமரியாதை கருத்துக்கள், தமிழுக்கு ஆற்ற வேண்டிய தொண்டுகள், எல்லாவற்றுக்கும் மேலாக கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றை தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் பின்பற்றுவதே அவருக்கு நாம் செய்யும் மரியாதை.

கருணாநிதியை இழந்து வாடும் தி.மு.க. தொண்டர்களையும், கட்சியையும் செயல் தலைவர் ஸ்டாலினே வழி நடத்த வரவேண்டும். அதற்கு தொண்டர்கள் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றார்.

அமைதி பேரணியில் தி.மு.க. மற்றும் காங்கிரஸ், த.மா.கா., ம.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொண்டர்கள் பங்கேற்றனர். (7)

வெளிநாடு

டகள் வான்வழித்தாக்குதல் ியாளர்கள் 50 பேர் பலி!



படைகளுக்கு ஆதரவாக சவுதி கூட்டுப் படைகள் களம் இறங்கி தாக்குதல் நடத்தி வருகின்றன.

இது ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு சவுதி அரேபியா மீது தீராப்பகையை உண்டாக்கி உள்ளது.

இதனால் அண்மைக் காலமாக சவுதி அரேபிய நகரங்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினத்துடன் முடிந்த 24 மணி நேரத்தில் ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து, சவுதி அரேபிய கூட்டுப்படைகள் நடத்திய வான் தாக்குதல்களில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் 50 பேர் கொன்று குவிக்கப்பட்டு உள்ளனர்.

இந்த தாக்குதல்கள் துஹ்ராயத், ஜபித், எல் உசேனியா மாவட்ட பகுதிகளில் நடந்து உள்ளன. மேலும் சவுதி கூட்டுப் படைகளின் உதவியுடன் ஹவுதி கிளர்ச்சியாளர்களிடம் இருந்து அல் தஹார் மாவட்டத்தில் சில பகுதிகளை ஏமன் படைகள் மீட்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. (7)

கிடங்கில் வெடி விபத்து ட்பட 40 பேர் உயிரிழப்பு

யோரம் அமைந்துள்ள சர்மாடா நகரில் உள்ள அரசு ஆயுதக் கிடங்கில் நேற்று முன்தினம் பயங்கரமான வெடி விபத்து ஏற்பட்டது.

அதிர்ச்சியில் அருகாமையில் உள்ள இரு வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. இடிபாடுகளில் சிக்கிய மக்களை புல்டோசர் வாகனங்களின் உதவியுடன் இராணுவத்தினர் மீட்டனர்.

எனினும், 40 பேர் உயிரிழந்ததாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

படுகாயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவரும் சுமார் 50 பேரில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அங்குள்ள போர் நிலவரங்களை பார்வையிடும் மனிதவுரிமை கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

இது விபத்தா? அல்லது வன்முறை தாக்குதலா? என்பது தொடர்பான முதல்கட்ட தகவல் ஏதும் வெளியாகவில்லை. (7)

விமானம் நொருங்கியதில் 8 பேர் பரிதாபமாகப் பலி

12 வயது சிறுவன் உயிருடன் மீட்பு

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் விமானம் விழுந்து நொருங்கியதில் 8 பேர் உயிரிழந்த நிலையில் 12 வயது சிறுவன் மட்டும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினான்.

பபுவா மாகாணம் தனாவில் இருந்து நேற்று முன்தினம் மாலை ஒக்சில் பகுதிக்கு சிறிய ரக விமானம் ஒன்று புறப்பட்டுச் சென்றது. விமானத்தில் 12 வயது சிறுவன் உட்பட 9 பேர் இருந்தனர்.

இந்த விமானம் ஒக்சில் விமான நிலையத்தில் தரையிறங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பாக கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்து மாயமானது.

இதனால் அதிர்ச்சியடைந்த விமான நிலைய அதிகாரிகள், காணாமல் போன அந்த விமானத்தை தேடும் பணியில் ஈடுபட்டனர். இந்நிலையில் விமானம் பெகுனுங்கன் பிண்டாங் மாவட்டத்தின் மலைப்பகுதியில் விழுந்து நொருங்கி கிடப்பதாக தெரியவந்தது.

இதனையடுத்து மீட்புக் குழுவினர் மற்றும் உயர் அதிகாரிகள் அங்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 8 பேர் உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது. 12 வயது சிறுவன் மட்டும் உயிருடன் மீட்கப்பட்டான். இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். (7)

வைத்தியசாலையில் தீ; 10 நோயாளர்கள் பலி!

(தாய்பே)

தாய்வான் தலைநகர் தாய்பேயிலுள்ள வைத்திய சாலையொன்றில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் 10 நோயாளிகள் உயிரிழந்துள்ளனர். அத்தோடு, சுமார் 16 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தாய்வானின் புதிய தாய்பே நகரிலுள்ள வெய்மீ வைத்தியசாலையின் ஏழாவது மாடியில் திடீரென்று தீப்பற்றியுள்ளது.

விபத்தின் போது அவ்வைத்தியசாலையிலிருந்த மேலும் 33 நோயாளர்களும் 3 அலுவலர்களும் உடனடியாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தீ விபத்துக்கான காரணம் பற்றி சரியாக இன்னும் கண்டறியப்படவில்லை.

எனினும், மின்சார ஒழுக்கில் ஏற்பட்ட கோளாறு காரணமாக ஏற்பட்டிருக்கலாமென பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தாய்வானில் கடந்த 2012 ஆம் ஆண்டு இடம்பெற்ற வைத்தியசாலை தீ விபத்தொன்றில் 12 நோயாளிகள் உயிரிழந்ததுடன் 60 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

முன்னாள் மக்களவை சபாநாயகர் காலமானார்

(டில்லி)

முன்னாள் மக்களவையின் சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜி நேற்று திங்கட்கிழமை காலை காலமானார்.

திடீரென ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், நேற்றுக் காலை 8.15 மணியளவில் உயிரிழந்தார்.

கடந்த 2004ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை சபாநாயகராக பதவி வகித்த இவர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவராவார்.

கடந்த காலத்தில் 10 தடவைகள் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த இவருக்கு, பிரதமர் நரேந்திர மோடி மற்றும் காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி உள்ளிட்ட பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர். (7)

Narendra Modi
@narendramodi
Following

Former MP and Speaker Shri Somnath Chatterjee was a stalwart of Indian politics. He made our Parliamentary democracy richer and was a strong voice for the well-being of the poor and vulnerable. Anguished by his demise. My thoughts are with his family and supporters.

Rahul Gandhi
@RahulGandhi
Following

I mourn the passing away of Shri Somnath Chatterjee, 10 term MP and former Speaker of the Lok Sabha. He was an institution. Greatly respected and admired by all parliamentarians, across party lines. My condolences to his family at this time of grief.

#SomnathChatterjee

பாக். சிறையிலிருந்து இந்திய மீனவர்கள் 26 பேர் விடுதலை

(கராச்சி)

கராச்சி சிறையில் அடைக்கப்பட்ட இந்திய மீனவர்களில் 26 பேரை நல்லெண்ணத்தின் அடிப்படையில் பாகிஸ்தான் அரசு நேற்று முன்தினம் விடுதலை செய்துள்ளது.

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி இந்திய மீனவர்களை பாகிஸ்தான் கடற்படையினர் கைது செய்து அந்நாட்டு சிறையில் அடைத்துள்ளனர்.

அவ்வாறு கராச்சி சிறையில் அடைக்கப்பட்ட மீனவர்களில் 26 பேரை நல்லெண்ணத்தின் அடிப்படையில் பாகிஸ்தான் அரசு நேற்று விடுதலை செய்துள்ளது. (7)

ஆட்சியைக் கைப்பற்றியது மக்களை உயர்நிலைக்கு கொண்டு செல்வதற்கே

பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த நாட்டில் நாம் ஆட்சியை கைப்பற்றி மூன்று ஆண்டுகளே ஆகின்றன. இந்த நிலையில் நாடு பல கடன் சுமைகளை கொண்டு இருந்தாலும் கொஞ்சம் கொஞ்சமாக கடன்களை அடைத்தாவது நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நாம் ஆட்சியைக் கைப் பற்றியது நாட்டில் வாழும் சாதாரண மக்களை உயர் நிலைக்குக் கொண்டு செல்வதற்கும் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்கும் அபிவிருத்தி முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும் ஆகும் எனவும் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியின் ஊடாக பூண்டுலோயா டன்சினன் தோட்டத்தில் அமைக் கப்பட்டுள்ள மகாத்மா காந்தி புரம் கிராமத்தை பயனாளி களுக்கு கையளிக்கும் நிகழ் வில் நேற்று முன்தினம் பிரதம விருந்தினராகக் கல ந்து கொண்டு உரையாற் றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது, மகாத்மா காந்தி இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்ட காலத்தில் மலையக மக்கள் மீது விசேட கவனம் செலுத்தி னார். அதன் நினைவாக இன்று மகாத்மா காந்தியின் பெயர் டன்சினன் தோட் டத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்திய வீடமைப்பு கிராமத் திற்கு சூட்டப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி இந் தியாவுக்கு மட்டுமல்ல. இல ங்கையருக்கும் பொதுவா னவர். இன்று தோட்ட மக் களுக்கு சொந்தமான நில த்தில் தனி வீடு உள்ளது. அவ்வீட்டிற்கு தனியான சுத் தமான குடிநீர் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனடிப் படையில் இலங்கையில் ஏனைய மக்களை போல் வாழக் கூடிய உண்மையான இலங்கையர்களாக உரிமை பெற்ற மக் களாக தோற்றம் பெற் றுள்ளார்கள். இந்த நாட்டில் அனைவருக்கும் கிராம என்ற மயம் அமைத்துக் கொடுக்கப்ப டும்.

அந்த வகையில் அனை த்து சமூகங்களும் கிராமங் களில் வாழக்கூடிய அபிவி ருத்தித் திட்டங்கள் முன்னெ டுக்கப்படும். அதே வேளை யில் பெருந்தோட்டப் பகுதி களை கிராம மயமாக்கு வதற்கு அமைச்சர் திகாம் பரத்திற்கு பூரண ஒத்துழை ப்பு வழங்கப்படும். சிலர் கிராமங்களை இல்லா தொழிக்க கம்பெரலிய எனும் திட்டங்கள் நடைமுறைப் படுத்துவதாக தெரிவிக்கின்ற னர்.

ஆனால் நாம் கிராமங் கள் ஊடாக மக்களை அபி விருத்தி அடைய முன்னே ற்றகரமான கம்பெரலிய திட்டத்தை நடைமுறைப்படு த்துவோம். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் நெருங்கிய உறவுப் பாலம் இருப்பதால் இந்தியாவின் கலாசாரமும் இலங்கை கலாசாரமும் ஒன்றாகப் பேணப்படு கின்றன.

அந்த வகையில் இந் தியாவுக்குச் சென்று சிவன் வழிபாடுகளை மேற் கொள்ள பிரதமர் மோடி நடவடிக்கை எடுத்துள்ளார். அதேபோன்று, இந்திய மக் கள் இராமாயணத்தின் வழி பாடுகளை மேற்கொள்ள இப்பகுதிக்கு வரும் நிலை யும் உருவாகியுள்ளது. அந்த வகையில் பாரத பிர தமர் நரேந்திர மோடிக்கு நன்றிகள் தெரிவிப்பதாகக் கூறினார்.

இந்திய அரசாங்கம் இல ங்கைக்கு 60 ஆயிரம் வீடு களை வழங்கியது. ஒரு தொகை வீடுகள் மலைய கத்திற்கு வழங்கப்பட்டு ள்ளது. ஏனைய வீடுகள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடங்க ளுக்கு முன்பாக இலங்கை யில் இனக்குரோதங்கள் காணப்பட்டிருந்தன. ஆனால் இப்போது இல்லை. இன்று கொழும் பிலுள்ளவர்கள் யாழ்ப்பாணம் நயினாதீவுக் குச் சென்று வழிபட்டு வருகி ன்றனர். அதேபோன்று யாழிலுள்ளவர்கள் கொழு ம்பைச் சுற்றிப் பார்த்து நிம் மதியாகச் செல்கின்றனர்.

இவ்வாறாக இன, மத பேதமின்றி தமிழர், சிங் களவர், முஸ்லிம்கள் என்ற பேதமற்று மக்கள் நிம்மதி யாக இன்று வாழக்கூடிய நிலை உருவாகியுள்ளது. இந்திய அரசாங்கம் இலங்கை மக்களுக்கு வரப்பிரசாதமாக அபிவிரு த்திப்பணிகளை முன்னெ டுத்து வருகின்ற அதேவே ளையில் நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தோட்ட மக்களுக்கும் ஏனைய மக்களுக்கும் வீடமைப்புகளை முன்னெ டுப்போம் என ஆலோசனை தெரிவித்தார்.

ஆனால் நான் கிராமங் களை உருவாக்குவேன் என ஆலோசனை தெரிவித் துள்ளேன். அதேநேரத்தில் மலையகத்தில் புதிய கிரா மங்களை உருவாக்குவ தற்கு பூரண ஒத்துழைப்பை அமைச்சர் திகாம்பரத்திற்கு வழங்குவேன்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன நான் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் மலையக பாடசாலைகளுக்கு உதவ

வேண்டும் என பணித்தார். அந்த வகையில் மலை யகத்தின் அரசாங்கப் பாட சாலைகளுக்கு ஆசிரியர் கள் மற்றும் வளங்களை எனது காலத்தில் வழங்கி னேன்.

பின்னர் வாக்குரிமை, பிரஜா உரிமை இவர்களு க்கு வழங்க வேண்டும் என அவர் தெரிவித்த காலப் பகுதியில் தனிநாட்டு இராச் சியம் அமைக்க பிரபாகரன் தயாராகிய நிலையில் நாட் டின் அனைவருக்கும் ஒட்டு மொத்தமாக பிரஜா உரிமை வழங்கி இலங்கை என்ற உரிமையை ஜே.ஆர்.ஜெய வர்த்தன வழங்கினார்.

முன்னாள் ஜனாதிபதி அமரர். பிரேமதாஸவின் ஊடாக மலையக பிரதே சங்களில் ஆடை தொழிற்சா லைகள் பல அமைத்து இம்மக்களை அபிவிருத்திப் பாதையில் வழி நடத்தினார். இப்போது நான் பிரதமராகி இம்மக்களுக்கு புதிய கிரா மங்களை அமைத்து அபிவி ருத்திப் பாதையில் முன்னெ டுத்துச் செல்லும் அதே வேளை, மேலும் உயர்தரக் கல்லூரிகள் பல உருவாக் குவதற்கும் திட்டங்கள் வகுப் பட்டுள்ளதுடன், குடிநீர்த் திட்டமும் தோட்டப் பகுதி களில் சுகாதாரத்திற்கான மாற்றுத் திட்டங்களும் இன்று திறக்கப்பட்டுள்ளன.

இந்தக் கிராமத்தில் பொருளாதாரத்தில் அபிவிரு த்தி அடைய கடைகள் மற்றும் வாகன திருத்து மிடங்கள் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்று நாட்டில் தேசிய ஒற்றுமை காணப்படுவது டன் நல்ல ஜனநாயகமும் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

எதிர்க்கட்சித் தலைவர் விவகாரத்தில் சபாநாயகரின் தீர்ப்பில் தவறில்லை

சுதந்திரக்கட்சி மாற்று அணி டிலான் கூறுகிறார்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் விவகாரத்தில் சபாநாயகர் கருஜெயசூரிய அளித்த தீர்ப்பில் தவறேதும் இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் பதவி சம் பந் தனிடமிருப் பதே பொருத்தமானது. ஆனால் 70 பேர் உள்ள கூட்டு எதிர ணிக்கு சபையில் அதிக நேரத்தை ஒதுக்கிக்கொடுக்க வேண்டும் என்று சுதந் திரக்கட்சி மாற்று அணியின் முக்கியஸ்தர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் சூழலில் தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதே பொருத்தமான நிலையாகும். அதேபோன்று எதிர்க்கட்சித் தலைவர் சம் பந்தனும் தான் முழு நாட்டின் எதிர்க்கட்சித் தலை வர் என்பதை மனதில் கொண்டு செயற்பட வேண் டும் என்றும் டிலான் பெரேரா அறிவுரை கூறினார். (இ-7)

இன்று ஒரு தகவல்

என் மீது என்ன வருத்தம்?

நம்மிடம் நன்றாகப் பேசிக் கொண்டும் பழகிக்கொண்டும் இருக்கிற சிலர் திடீ ரென்று தங்கள் போக்கில் சில விரும்பாத வித்தியாசங்களைக் காட்டுகிறார்கள்.

அவர்களது இத்தகைய செயல்கள் நம்மை வருத்துகின்றன. சொல்லப் போனால் சிலர் விடயத்தில் நம்மை இந்த உணர்வுகள் குடைந்தெடுக்கின்றன.

இவர்களுள் சிலர் மெல்ல மெல்ல நம் மிடமிருந்து விலக ஆரம்பிக்கிறார்கள். வேறு சிலரோ சட்டென்று காணாமலே போய்விடுகிறார்கள்.

கூடவே இருக்கும் குடும்ப உறுப்பினர் கள் கூடச் சில சமயங்களில் நாம் ஏதேனும் சொல்லிவிட்டோம், எதையோ மறுத்துவிட்டோம் என்றால் ஆமை தன் ஓட்டுக்குள் தலையை இழுத்துக் கொள் வதைப்போல் தங்களை உள்ளுக்குள் இழுத்துக் கொள்கிறார்கள். நம்மவர்க ளில் பெரும்பாலானவர்கள் வெளிப்படை யான மனிதர்களல்லர்!

எனவே நாம் தான் நம்மவர்களிடமி ருந்து தோண்டித் துருவித் தெரிந்து கொள்ள வேண்டும்.

சிலர் திரும்பத் திரும்பக் கேட்டாலும் "வருத்தமா? அப்படியெல்லாம் ஒன்று மில்லையே! என்பார்கள். உண்மைக ளைச் சொன்னால் நாம் வருத்தப்படு வோம் என்றோ, என்னத்திற்கு இதைப் போய்ச் சொல்லிக்கிட்டு என்றோ இதெ ல்லாம் வருத்தப்படுவதற்குரிய விடயமா? என்று நாம் கேலி செய்வோம் என்றோ எண்ணிக் கொண்டு கடைசி வரை தங் கள் வருத்தங்களைச் சொல்ல மறுத்து விடுவார்கள்.

ஆனால் ஒன்று, எப்படியோ நம் மனத் தில் வருத்தம் இருப்பதைச் சரியாகக் கண்டுபிடித்துவிட்டார் என்பதற்காகவும், நாம் கௌரவம் பாராமல் இறங்கிப் போய்க் கேட்டோம் என்பதற்காகவும் இவர் களது போக்கில் விரும்பத்தக்க மாற்றங் கள் விளையும்.

எத்தனை கணவர்களுக்கு அல்லது மனைவிகளுக்குத் தங்களது வாழ்க் கைத் துணையிடம் இந்தக் கேள்வியைக் கேட்கும் மனப்பக்குவம் திராணி இருக்கிறது? எத்தனை மனிதர்களுக் குத் தங்கள் முதலாளிகளிடம் அல்லது மேலதிகாரிகளிடம் இந்தக் கேள்வியைக் கேட்கத் தைரியம் இருக்கிறது?

இப்படி நாம் கேட்க முன்வரும் போது தான் மற்றவர்களிடமிருந்து வரும் பதில் களை வைத்து நம்மை மாற்றிக் கொள் ளவும், அவ் வருத்தத்தைப் போக்கவும் நமக்கு ஈடுபாடு ஏற்படும்.

நம்மைச் சுற்றியிருப்பவர்களின் வருத் தங்களைப் போக்கிவிட்டுப் பழகினால் அந்த வாழ்க்கை என்னமாய் இனிக்கும் தெரியுமா?

லேனா தமிழ்வாணன்

பயணிகளுடன் பயணித்த பேருந்தின் ஒரு சில்லு திடீரென தனியாகப் பயணம்

(கொழும்பு)

பயணிகளை ஏற்றிக் கொண்டு பயணித்த பேருந்தின் முன் சில்லொன்று தனியாகக் கழன்று ஓடிய சம்பவமொன்று மீகொட உடகேவத்த பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளதென மீகொட பொலிஸார் தெரிவித்தனர்.

பேருந்திலிருந்து கழன்று ஓடிய அந்தச் சில்லு பேருந்தின் வலதுபுறமாக மிக வேகமாக உருண்டோடி வீதிக்கருகிலிருந்த தனியார் நிறுவனமொன்றின் படலையில் மோதியுள்ளது. இதனால், அந்தப் படலையும் கழன்று விழுந்துள்ளது. எனினும், இதனால் யாருக்கும் எவ்விதமான சேதங்களும் ஏற்படவில்லை.

ஹோமாகம டிப்போவுக்குச் சொந்தமான மேற்படி பேருந்து இங்கிரிய நகரிலிருந்து காலை 6 மணியளவில் புறப்பட்டு, புறக்கோட்டை நோக்கிப் பயணிப்பது வழமை.

அவ்வாறு பயணித்துக் கொண்டிருந்த போது, மீகொட வட்டரெக்க பிரதேசத்தில் வைத்து பேருந்தில் ஏதோவொரு மாற்றம் ஏற்பட்டுள்ளமை பேருந்தின் சாரதிக்கு தென்பட்டுள்ளது.

அது தொடர்பில் நடத்துநருக்கு அறிவிக்கப்பட்டது. எனினும், பேருந்தில் ஏற்பட்டிருந்த மாற்றத்தை உடனடியாக கண்டுகொள்ள முடியாமல் போனமையால், வேகத்தை குறைத்தே பயணித்துள்ளார். இதனால், ஏற்பட விருந்த பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது. (இ-7)

நாள்தோறும் 2500 ரூபா இலஞ்சம்

சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் குறித்து நீதி அமைச்சர் தலதா அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சிலர் நாள் ஒன்றுக்கு 2500 ரூபாய் கையூட்டலை வருமானமாக ஈட்டுகின்றார்கள் என நீதி அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகையொன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் நடத்தப்பட்ட விசாரணைகளின் மூலம் சிறைச்சாலை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் இவ்வாறு இலஞ்சம் பெறுவது தெரியவந்துள்ளது.

சிறைச்சாலைகளில் பணிகள் சீரான முறையில் முன்னெடுக்கப்படுகின்றதா என்பதனை கண்காணிப்பதற்கு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஓர் பெண் சிறைச்சாலை அதிகாரி கைதிகளிடமிருந்து பெருந்தொகைகளை கையூட்டலாக பெற்றுக் கொண்டுள்ளார்.

இந்த பெண் அதிகாரி உள்ளிட்ட 12 அதிகாரிகளுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவித்துள்ளார். (இ-7)

குவைத் மணல் புயலில் சிக்கி இலங்கைப் பணிப்பெண் பலி!

(குவைத்)

குவைத்தில் வீசிய மணல் புயலில் சிக்கி இலங்கைப் பணிப்பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குருநாகலை, மடஹபொல பிரதேசத்தைச் சேர்ந்த சந்தியா குமாரி என்ற 42 வயதுப் பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் குவைத்தில் பணிப்பெண்ணாக சென்றுள்ளார் என அவரது கணவர் வாக்கு மூலம் வழங்கியுள்ளார்.

இந்தப் பெண் குவைத்தில் சேவை செய்த வீட்டிலுள்ள குடும்ப உறுப்பினர்களுடன் சுற்றுலாப் பயணித்தில் ஈடுபட்டுள்ளார். பாலைவனம் ஒன்றுக்கு நடுவில் வீசிய மணல் புயலில் சிக்கி அவர்கள் பயணித்த வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

கடந்த மாதம் 28 ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் சிக்கிய தனது மனைவி உயிரிழந்துள்ளதாக முகவர் நிலையம் ஊடாக தனக்கு அறிவிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

உயிரிழந்த பெண் இதற்கு முன்னர் 3 சந்தர்ப்பங்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிக்காக சென்றவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த பெண்ணின் சடலம் கடந்த 9 ஆம் திகதி விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-7)

மாணவி துஷ்பிரயோகம் ஆசிரியர் கைதானார்

(கொழும்பு)

கணித பாடத்தில் ஏ சித்தி பெற்றுத் தரும் வகையில் கற்பிப்பதாக கூறி இரண்டரை வருடங்களாக மாணவியை துஷ்பிரயோகம் செய்த ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாணவியின் சகோதரனுக்கு ஏற்பட்ட சந்தேகத்திற்கமைய குறித்த ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்டாரகம நகரத்தில் மேலதிக வகுப்பிற்காக இந்த மாணவி மாத்திரம் அழைக்கப்பட்டு தொடர்ந்து துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட ஆசிரியரின் மனைவி பாடசாலை அதிபர் எனவும் தெரிய வந்துள்ளது.

மாணவிக்கு தவறான வீடியோக்களை காட்டி அச்சுறுத்தி அவரை துஷ்பிரயோகம் செய்துள்ளதாக பாதிக்கப்பட்ட மாணவியின் தந்தை பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரான ஆசிரியர் கடந்த 10ஆம் திகதி குறித்த மாணவிக்கு தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொண்டுள்ளார். இது தொடர்பில் சந்தேகமடைந்த மாணவியின் சகோதரன் அவரிடம் வினவியுள்ளார்.

இதன்போது அவர் அனைத்து தகவல்களையும் வழங்கியுள்ளார். பின்னர் மாணவிகளுத்துறை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரான 52 வயதுடைய ஆசிரியர் ஐந்து பிள்ளைகளின் தந்தை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக பாடசாலை மாணவிகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இது குறித்து பெற்றோர் அதீத கவனம் செலுத்த வேண்டும் என பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)

கொலைக்குற்றத்துடன் தொடர்புடைய மூவர் கைது

(கொழும்பு)

மதுகம, மெனிக்கொட பகுதியில் கொலைக் குற்றத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மதுகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது மதுகம, விதான மாவத்தையில்வைத்து குறித்த சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுகம பகுதியைச் சேர்ந்த 31, 33 மற்றும் 34 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களை நேற்று மதுகம நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது 23 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த 6 ஆம் திகதி மதுகம, மெனிக்கொட பகுதியில் மோட்டார் வாகனத்தில் பயணித்த மூவர் வானில் வந்த இனந்தெரியாத குழுவினர் மேற்கொண்ட தாக்குதலில் ஒருவர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

வெலிக்கடைச் சிறைக் கூரையில் ஏறி 10 பெண் கைதிகள் நேற்றுப் போராட்டம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் நேற்றுக் காலை கைதிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

10 பெண் கைதிகள் தமக்கான வழக்கு விசாரணையானது இழுத்தடிக்கப்பட்டு தாமதமடைந்து வருவதன் காரணமாக தாங்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் ஆகையினால் தமக்கான வழக்கினை துரிதமாக விசாரித்து நடவடிக்கை எடுக்குமாறும் கோரியே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். (இ-7)

பெண்கள் பொலிஸ்மா அதிபராக இலங்கையில் உரிமை மறுப்பு

40 பேர் முறைப்பாடு

(கொழும்பு)

பொலிஸ் சேவையிலுள்ள பெண் பரிசோதகர்கள் பதவியுயர்வுகளிலிருந்து தடுக்கப்பட்டுள்ளனர்.

சிரேஷ்ட பரிசோதகர்களுக்கான வெற்றிடங்கள் இல்லாமையே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது 150 வருட காலத்தைக் கொண்ட பொலிஸ் சேவையில் ஒரு பால்புறக் கணிப்பு என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பெண் பரிசோதகர்களில் 40பேர் இலங்கை மனித உரிமைகள் ஆணையகத்தில்முறைப் பாட்டைச் செய்துள்ளனர்.

இரண்டு தடவைகளாக தமக்கு இந்த பதவியுயர்வு வாய்ப்பு மறுக்கப்பட்டதாக அவர்கள் தமது முறைப் பாட்டில் தெரிவித்துள்ளனர்.

1997ஆம் ஆண்டு 120 பெண்கள் பொலிஸ் சேவையில் உதவி பரிசோதகர்களாக இணைந்தனர். இவர்களில் சிலர் 2003, 2006 ஆம் ஆண்டு சிரேஷ்ட பரிசோதகர்களாக பதவியுயர்த்தப்பட்டனர்.

எனினும் ஏனையோரை பதவியுயர்த்தாமைக்கு சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் நிலைக்கான பெண்கள் தரப்பில் வெற்றிடங்கள் இல்லாமையே என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்காரணமாக இலங்கையின் பொலிஸ் சேவையில் இணைந்துள்ள பெண்களில் எவரும் உதவி பொலிஸ் அதிகாரியாகவோ அல்லது சிரேஷ்ட பொலிஸ்மா அதிபராகவோ அல்லது பொலிஸ்மா அதிபராக வரமுடியாத சூழ்நிலை இருப்பதாக பதவியுயர்வு மறுக்கப்பட்ட பெண் பரிசோதகர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ளனர். (இ-7)

கூட்டு எதிரணி எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றுக் கொள்ள முடியாது

அமைச்சர் துமிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாகச் செயற்பட்டாலும், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பெற்றுக் கொள்ள முடியாது என அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அஸ்கிரிய மற்றும் மல்வத்து மாநாயக்கர்களிடம் நேற்று முன்தினம் ஆசிர்வாதம் பெற்றுக்கொண்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

ஜனாதிபதி வேட்பாளராக வர முட்டிமோதும்

மகிந்தவின் குடும்பத்தில் ஏற்பட்டுள்ள சண்டையை பொருட்படுத்த வேண்டாம்

அமைச்சர் சஜித் தெரிவிப்பு

(ஏறாவூர்)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினர் மத்தியில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வேட் பாளருக்காக சண்டை உருவாகியுள் ளதைப் பற்றி நாட்டு மக்கள் கவனம் செலுத்தத் தேவையில்லை.

எது எவ்வாறிருப்பினும் 2020 ஆம் ஆண்டில், இதே கூட்டுக்கட்சிகள் கொண்ட நல்லாட்சி அரசாங்கமே அமையுமென, திடமாகக் கூறுவதாக வீடமைப்புத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவின் சவுக் கடி பிரதேசத்தில் அமைக் கப்பட்டுள்ள விருட்சம் மாதி ரிக் கிராமம், நேற்று திங்கட கிழமை மக்களிடம் கைய ளிக்கப்பட்டது. இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"இந்த நாட்டைச் சூறை யாடிய, முன்னாள் ஆட்சியா ளர்கள் மீண்டும் ஆட்சிக்கு வர முயற்சிக்கிறார்கள். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த வர்கள் ஜனாதிபதி வேட் பாளராக வரவேண்டும் என முட்டிமோதிக் கொள்கிறார் கள்.

இந்த நாட்டிலுள்ள மக் களுக்கு அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதற்காக ஒரு போதும் இவர்கள் ஜனாதி பதியாக வருவதற்கு விரும் பவில்லை.

மாறாக வெளிநாட்டு நாண யங்களை எண்ணிய கைக ளில் மீண்டும் டொலர், பவுண் யூரோ போன்ற வெளி நாட்டு நாணயங்களை எண் ணுவதற்காக, அதி வேக நெடுஞ்சாலையில் சென்று ஆட்சியைப் பிடிக்க நினைக் கிறார்கள்.

கடந்த காலத்தில், மத ஸ்தலங்களை இடித்து அதில் மகிழ்ச்சி கண்டு இந்த நாட்டை சூறையாடியவர் கள். தற்போது பன்சாலை கள், கோவில்கள், பள்ளி வாசல்கள், தேவாலயங்க ளுக்கு யாத்திரை செல்கிறார் கள். எது எவ்வாறிருப்பினும் 2020 ஆம் ஆண்டில் இதே கூட்டுக்கட்சிகள் கொண்ட நல்லாட்சி அரசாங்கமே அமையும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

வரி அதிகரிப்பால் ஆத்திரம் தொலைக்காட்சிப்பெட்டி நாசம்

(கொழும்பு)

தென்னிலங்கையில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த நபர் ஒருவர், ஆத்திரம் காரணமாக தொலைக்காட்சிப் பெட்டியை உடைத்துள்ளார்.

சமகாலத்தில் அதிகரிக் கப்பட்ட வரி நடைமுறையை ஏற்றுக்கொள்ள முடியாத நபர் ஒருவரே இவ்வாறு தொலைக்காட்சிப் பெட் டியை அடித்து உடைத்துள் ளார்.

இந்தச் சம்பவத்தில் 14 அங்குல தொலைக்காட்சிப் பெட்டியை இரண்டாக அடித்து உடைத்துள்ளார்.

தொலைக்காட்சிப் பெட் டியை உடைத்த நபர் சாதா ரண தொழில் பார்க்கும் ஒருவராவார். அவர் திரு மணமான இரண்டு பிள் ளைகளின் தந்தை எனவும் அவர் தினமும் தொலைக் காட்சியில் செய்தி பார்க்கும் பழக்கம் கொண்டவர் என வும் எவ்வளவு வேலைகள் இருந்தாலும் செய்தி பார் ப்பதற்கு அவர் தவறுவ தில்லை.

இவ்வாறான நிலையில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் வீட்டிற்கு வந்து செய்தி பார்ப்பதற்கு அவர் ஆரம்பித்துள்ளார்.

அன்றைய தினம் வெளி யாகிய செய்திகளில் அதிக மானவைகள் வரி அதி கரிப்பு தொடர்பிலானவைக ளாகும்.

செய்தியின் அரைவாசி வரி தொடர்பில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பி னர்களின் கருத்துக்கள் மாத் திரமே வெளியிடப்பட்டுள் ளன.

இதனால் ஆத்திரம டைந்த நபர் பெரிய கட்டை ஒன்றைக் கொண்டு வந்து தொலைக்காட்சிப் பெட்டியை இரண்டாக உடைத்துள் ளார்.

அதிக கடன் சுமை கார ணமாக சமகால அரசாங் கம் புதிய வரிகளை அறிமு கம் செய்து வருகின்றமை யினால், நாட்டு மக்கள் அதி ருப்தி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

என் 4 (ராகு)

(சாகசச்சக்கரவர்த்திகள்)

இவர்கள் எல்லா விட யங்களும் தனக்குத் தெரிய வேண்டும் என்று விரும்பு வார்கள். எப்போதும் எதையாவது சேகரித்துக் கொண்டேயிருப்பார்கள். பிறரின் போற்றுதலுக்கோ, புகழுக்கோ சிறிதும் ஆசைப் படமாட்டார்கள். திருப் தியாக வாழ்வார்கள். உணவு விடயத்தில் கட்டுப் பாடு உடையவர்கள். பல நண்பர்களிடமிருந்து பல் வேறு உதவிகளைப் பெறு வார்கள். சாப்பாட்டிலும் சிற்றுண்டியிலும் பெரிதும் ஆசைப்படுவார்கள். எந்த வித நோயும் இல்லாவிட் டாலும், தன்னுடைய உடல் நலத்தைப் பேணுவதிலும் மருத்துவ ஆலோசனை களைப் பின்பற்றுவதிலும் கவனம் செலுத்துவார்கள். அதற்காகச் செலவும் செய் வார்கள். இவர்கள் உட லளவில் பாதிக்கப்படு வதை காட்டிலும் மன தளவில் அதிகம் பாதிக்கப் படுவார்கள். மற்றவர்களின் பேச்சும் செயலும் இவர் களை மனதளவில் பெரி தும் பாதித்து விடுகின்றன. இவர்கள் எளிதில் உணர் ச்சி வசப்படுகின்றனர். பெரி தும் நோய்க்கு ஆளாகின் றனர்.

விசாலமான இதயம் படைத்த இவர்கள் நண் பர்களிடம் மிகவும் பெருந் தன்மையுடன் நடந்து கொள் வார்கள். மற்றவர்களைப் போல பணம் சம்பாதிப்பது எளிதல்ல.

கடினமாக உழைத்துத் தான் பணம் சம்பாதிக்க முடியும். இருந்தாலும் சம்பாதித்த பணத்தைக் குதூகலமாக சந்தோசத் துடன் செலவளிப்பார்கள். அழகான பொருட்களை வாங்கிக் குவிப்பார்கள். உற்சாகமாகப் பணம் சம்பா திப்பார்கள். செலவழிப் பார்கள். ஒவ்வொரு வய திலும் விதவிதமான ஆசை களுடன் வாழ்வார்கள். வயது செல்லச் செல்ல வேதாந்த விடயங்களில் ஆசை கொள்வார்கள். தீவிர முன்னேற்றத்தில் ஆர் வம் கொள்வார்கள். நிச்ச யம் எளிதில் வெற்றி பெற லாம் என்ற காரியத்தில் மட்டும் களமிறங்குவார் கள். சிறு வயதில் விளை யாட்டில் ஆர்வம் உடைய வர்கள். இவர்கள் இளமை யில் சுகபோக வாழ்க்கை யிலும் வயோதிபத்திலும் ஆன்மீகத்திலும் தத்துவக் கருத்துக்களிலும் வேரூ ன்றிப் போவார்கள். சமூக சேவையில் ஈடுபடுவார் கள்.

நரம்புச்சக்தி கூடிய இவர் கள் கம்பீரமாகக் காட்சிய ளிப்பார்கள். சிந்தனை சக்தி மிக்கவர்கள். பிறருக்கு உதவும் மனம் கொண்ட இவர்கள் பலர் போற்றும் வாழ்க்கை வாழ்வார்கள். எந்த பழக்கத்திற்கும் அடி மையாகாமல் இருப்பார்கள். இதனால் சில பழக்கத்தை தொட்டாலும், மனக்கட் டுப்பாட்டால் விட்டு விடு வார்கள். பிறருடைய துன் பத்தைக் கண்டு தானும் சேர்ந்து அழுது விடுவார் கள். இவர்கள் மூளை மின்னல் வேகத்தில் செயற் படும். இவர்கள் பல தி றமைக்குச் சொந்தக்காரர் கள். மற்றவர்கள் இவர் களைப் பெரிதும் மதிப்பார் கள். எங்கு சென்றாலும் வரவேற்பு நிச்சயமிருக்கும்.

பணத்தைச் செலவழித்து விட்டு பின்னர் வருத்த மடைவார்கள். மனதில் துணிவு மிக்கவர்கள்.

மிகவும் நுணுக்கமான திட்டமிட்ட கருத்துக்கள் மட்டுமே இவர்களின் பேச் சில் வெளிப்படும். வரவிற் கும் மீறிச் செலவழிப் பார்கள். மதத் தலைவர்கள் பொறுப்பை ஏற்று நடத்து வார்கள். உறவினர்களிட மும் நண்பர்களிடமும் ஆழ்ந்த நட்பைப் பெறு வார்கள். தேசப்பற்று மிக்கவர்கள். பெற்றோர் களை மதிப்பார்கள். நறு மணப் பொருட்களிலும் கலை அலங்காரப் பொருட் களிலும் ஆடை ஆபரண சேர்க்கையிலும் மிகுந்த விருப்பமுடையவர்கள். தன்னுடைய மூளை பலத் தால் பணம் சம்பாதிப்பார் கள். சிறந்த பத்திரிகை நிரு பராக வலம் வருவார்கள். வியாபார நுணுக்கம் அறிந்த வர்கள். போக்கு வரத்துத் துத் துறையிலும் சிறந்த வர்கள். வியாபாரத்திலும் சுயதொழிலிலும் நல்ல பெயருடன் விளங்குவார் கள். கடவுளை தனிப்பட்ட முறையில் வணங்கு வார்கள். உதவி என்று தன்னை நாடி வந்தவருக்கு உதவி செய்வார்கள்.

உறுதியான மனம் படை த்தவர்கள். மற்றவர்கள் சிறிது அன்பு காட்டி னாலும் மிகுந்த பாசத் தைத் திருப்பிக் காட்டு வார்கள். தன் னிடம் குற்றம் இருப்பதை விரு ம்பமாட்டார்கள். குடும்பப் பிரச்சினையால் மனம் துவண்டு விடுவார்கள். தற் கொலை எண்ணம் அதிகம் மேலோங்கி நிற்கும். ஆனால் தன்னைத் தானே துன்புறுத்திக் கொள்ள மாட் டார்கள்.

பிறருடைய குறுக்கீடு களைத் தன் விடயத்தில் அனுமதிக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் தன்னுடைய பொறுமையை யிழந்தவாறு காணப்படு வார்கள். தன்னுடைய திட் டங்களை அவ்வப்போது மாற்றிக் கொள்வார்கள். நீதி, நேர்மைக்குக் கட்டுப் பட்டவர்கள்.

நன்கு யோசனை செய்த பின்னரே எந்தவொரு காரி யத்திலும் இறங்குவார்கள். இவர்களின் குடும்பப் பிரச் சினைகளை வெளியில் காட் டிக்கொள்ள மாட்டார்கள். தவறான முடிவுக்குச் செல்ல மாட்டார்கள். சமூகத்தில் நடக்கும் வன்முறைக்கு எதிராகக் குரல்கொடுப்பார் கள். எதிர்த்துப் போராட்டம் நடத்தி வெற்றியும் பெறு வார்கள். தவறு செய்தவர் களை மிகவும் தட்டிக் கொடுப் பார்கள். அவர்களைத் திருத்த முற்படுவார்கள். படித்தவர் கள், பெரிய மனிதர்கள் கரு த்துக்களுக்கு மதிப்பும் மரியாதையும் தருவார்கள்.

(தொடரும்....)

இலங்கையில் தமிழர்

ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

17



இதனால் இலங்கை மக்களுடைய வரலாறு தொடக்கம் பெற்றது. இத்தகைய வளர்ச்சியை ஆரியர் வந்து குடியேறியதன் விளைவாகத் தொடங்கிய வரலாறாக இதுவரை வரலாற்று அறிஞர்கள் கூறிவந்தமை பொருத்தமற்றது. ஆரியர் என்போர் இலங்கைக்கு வந்து குடியேறினர் என்ற கருத்துக்கு இடமேயில்லை. வெளியிலிருந்து பெருந்தொகையான மக்கள் வந்து குடியேறியதற்கோ, முன் வாழ்ந்த மக்கள் அழிக்கப்பட்டமைக்கோ தொல்லியல் சான்றுகள் இல்லை."

மேற்கூறப்பட்ட, பேராசிரியர் இந்திரபாலாவின் கூற்றுமூலமும், ஆதாரங்களின் அடிப்படையில் இவ் அத்தியாயத்தில் கூறப்பட்ட தன் மூலமும் அறிவியல் பூர்வமாகச் சிந்திக்கக்கூடிய எவரும் இலங்கை மக்கள் பற்றிய பூர்வீகத்தைத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும். பேராசிரியர் இந்திரபாலா மட்டுமன்றி, இலங்கையின் தலைசிறந்த பேராசிரியரான லெஸ்லி குணவர்த்தனா, புகழ் பெற்ற தொல்லியல் நிபுணரான பேராசிரியர் தர்ணியகல, பேராசிரியர்கள் ஸிரான் தரணியகலை, ஸுதர்சன் ஸெனிவரத்தன போன்றோரும் இதே அடிப்படையிலான கருத்தையே தங்கள் ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

முடிவாக மேற்கூறப்பட்ட சுருக்கமான, தெளிவான தொல்லியல் மற்றும் பிற ஆதாரங்கள் மூலமும் கண்டுகொள்வது என்னவெனில், இலங்கையின் பூர்வீக மக்கள், தென்னிந்திய பிரதேசங்களில் வரலாற்றுக்கு முந்திய ஆதி காலத்தில் வாழ்ந்த தென்னிந்திய மக்களான திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த திராவிட இன மக்கள் என்பதை ஆய்வாளர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அத்தோடு தென்னிந்தியாவும் இலங்கையும் புவியியல் ரீதியாக இற்றைக்கு சுமார் 7000 வருடங்களுக்கு முன் ஒரே நிலப் பகுதியாக இருந்திருக்கின்றன என்பதையும் ஆய்வாளர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் இயற்கை அனர்த்தத்தினால் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைப் பிரதேசம் பிரிந்து ஒரு தீவாக மாற்றம் அடைந்தபோது, அப்பிரதேசம், அதே மக்களையே தன்னகத்தே நிச்சயம் கொண்டு பிரிந்திருக்கும், காலப்போக்கில் வேறு இனங்களும் இலங்கையில் வந்து, முன்பு இருந்த ஆதிகால மக்கள் இனத்தோடு இரண்டறக் கலந்திருக்கும் என்பதிலும் ஐயப்பாடுகள் இருக்க முடியாது.

மேலும் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும், தொடர்ச்சியாகக் கடந்த 50 வருட காலத்திற்கு மேலாக, நடைபெற்ற தொல்லியல் ஆய்வுகளில் கிடைக்கப்பெற்ற ஆய்வுச் சான்றுகளும் அதனையே உறுதிப்படுத்துகின்றன.

> "இலங்கையில் உள்ள கல்விமான்களும் அரசியல்வாதிகளும் இன்றைய இளந் தலைமுறையினரும் மேற்கூறப்பட்ட வரலாற்றுப் பின்னணியை தேசத்தின் எதிர்காலம் கருதி மிகவும் அறிவுபூர்வமாகச் சிந்திக்கவேண்டிய காலம் இது. தவறும் பட்சத்தில், இலங்கைத் தேசத்தின், பாரிய அழிவுகளுக்குப் பொறுப்பாளர்களாக அமைவதோடு, எதிர்காலச் சந்ததியினரின் வெறுப்புக்கும் ஆளாவார்கள்"

தமிழரின் தோற்றமும் ஆரம்ப வரலாறும் கி.மு 300-கி.பி 300

எனவே இலங்கையில் உள்ள கல்விமான்களும் அரசியல்வாதிகளும் இன்றைய இளந் தலைமுறையினரும் மேற்கூறப்பட்ட வரலாற்றுப் பின்னணியை தேசத்தின் எதிர்காலம் கருதி மிகவும் அறிவு பூர்வமாகச் சிந்திக்கவேண்டிய காலம் இது. தவறும் பட்சத்தில், இலங்கைத் தேசத்தின், பாரிய அழிவுகளுக்குப் பொறுப்பாளர்களாக அமைவதோடு, எதிர்காலச் சந்ததியினரின் வெறுப்புக்கும் ஆளாவார்கள்.

19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் ஜேர்மனி போன்ற பல நாடுகளில் நடந்து முடிந்த, பாரிய அழிவுகளை ஏற்படுத்திய வரலாற்று நிகழ்வுகளை வரலாறு கற்பித்த பாடமாகக் கொள்ளத் தவறக்கூடாது.

வரலாற்று உதயம்

எழுத்து ஆதாரங்களுடன் இலங்கையின் வரலாற்றுக் காலம் கி.மு 300 ஆண்டு அளவில் ஆரம்பமாகின்றது. இன்றுவரை இலங்கையின் வரலாற்றை ஆய்வுசெய்து எழுதிய வரலாற்று அறிஞர்களில் ஒரு சிலரைத் தவிர, ஏனையோர் வரலாற்று ஆரம்பகாலமாக, அநுராதபுரத்தை மையமாகக் கொண்ட இராச்சியத்தையே கருத்திற் கொள்வது மரபாகி வந்திருக்கிறது.

அநுராதபுர இராச்சியத்தின் தோற்றம், சிங்கள அரசர்களின் ஆட்சி, பௌத்த மதம் இந்தியாவிலிருந்து மௌரியப் பேரரசன் அசோகன் காலத்தில் இலங்கைக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்ட வரலாறு, பௌத்த மதத்தை மன்னர்கள் தழுவுதல், பௌத்த மதம் மடாலயங்களை மையமாகக் கொண்டு வளர்வது, பௌத்தமதத்திற்கு மன்னர்கள் வழங்கும் தானங்கள் கொடைகள், பௌத்தமதக் குருமார் மன்னரைப் புகழ்ந்து போற்றுவது, அரச கட்டிலுக்காக அதிகார வர்க்கத்தினரிடையே அடிக்கடி நடைபெறும் போர்கள் என்பவற்றை ஆரம்பகால வரலாற்று நிகழ்வுகளாகப் பேணி வருகின்ற ஒரு வரலாற்று மரபையே புலமைசார் ஆய்வுகளினூடாக அறியமுடிகின்றது.

மொத்தத்தில், இலங்கையின் ஆரம்ப வரலாற்றுக் காலம் ஒரு பௌத்த, சிங்கள வரலாறாகத்தான் எழுதப்பட்டிருக்கின்றது என்பதனை அறியமுடிகின்றது. ஆனால், இலங்கையின் பூர்வீக மக்கள், தென்னிந்தியாவில் வாழ்ந்த பூர்வீக மக்களாகிய திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது ஏற்கனவே தொல்லியற் சான்றுகளூடாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு, வடகிழக்கு, வடமேற்கு, வட மத்திய பிரதேசங்களின் பூர்வீக மக்கள் திராவிடர்கள் என்றும், குறிப்பாகத் தமிழ்மக்கள் என்றும் நிரூபணமாகியுள்ளது.

அவ்வாறாயின், இன்றைய நவீன உலகில், விஞ்ஞான ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும் விடயங்களை நுணுகி ஆய்வு செய்கின்ற ஓர் வரலாற்று மாணவனின் சிந்தனையில் மேற்கூறப்பட்ட விடயம் பற்றிச் சில கேள்விகள் எழுதுவது தவிர்க்க முடியாததாகின்றது. அதாவது இலங்கையின் மேற் கூறப்பட்ட பிரதேசங்களில் வாழ்ந்த பூர்வீகத் தமிழ் மக்கள் இலங்கையின் ஆரம்பகால வரலாற்றில் ஏன் முக்கியத்துவம் பெறவில்லை? அடுத்ததாக, பௌத்தமதம் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டு, இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறாயின் பௌத்தமதம் இலங்கைக்கு வருமுன் இலங்கையில் வாழ்ந்த பூர்வீக மக்களின் மதம் என்னவாக இருந்திருக்கும்? ஒரு சிங்கள இராச்சியமாக வரலாற்று நூல்களிற் சித்திரிக்கப்பட்டுள்ள அநுராதபுரம் எதுவிதமான ஒரு ஆரம்ப சிற்றரசுகளோ அல்லது அரச அமைப்புகளோ இல்லாமல் திடீரென அநுராதபுரம் இராச்சியம் என்னும் இராச்சியமாக எப்படித் தோற்றம் பெற்று வரலாற்றில் இடம் பெற்றிருக்க முடியும்? இவ்வாறான அடிப்படையான கேள்விகளுக்கு வரலாற்று அறிஞர் பதில் கொடுக்க வேண்டியது அவசியமாகின்றது.

மேற்கூறப்பட்ட வினாக்களுக்கு, இதுவரை கிடைக்கப்பெற்ற புராதன பாளி நூல்கள், தொல்லியல், கல்வெட்டு ஆதாரங்கள், பிறநாட்டு யாத்திரிகர்களின் குறிப்புக்கள், வெளிநாட்டு ஆதாரங்கள், தமிழ் இலக்கிய நூல்கள், தமிழ் வரலாற்று நூல்கள் என்பவற்றிலிருந்து குறிப்பிடத்தக்க அளவு விடைகளைக் காணக்கூடியதாக உள்ளது. ஆனால் பூரணமான, உறுதியான விடைகளைக் கண்டறிவதற்குரிய எழுத்தாரங்களும், தொல்லியல், கல்வெட்டு ஆதாரங்களும் மேற்கூறப்பட்ட பிரதேசங்களிலும், இலங்கையிலும் போதுமானதாக இல்லை என்பதனையும் அறிய முடிகின்றது.

முதலில், பூர்வீக குடிகளான தமிழர் இலங்கையின் ஆதிகால வரலாற்றில், குறிப்பாக அநுராதபுர இராச்சிய வரலாற்றில் ஏன் முக்கியத்துவம் பெறவில்லை என்ற கேள்விக்கு விடைகாண்பதன் மூலம் இவ்விடயம் சம்பந்தமாக வுள்ள அடிப்படைப் பிரச்சினைகளை இல்குவாக விளங்கிக் கொள்ள முடியும். சிங்கள மக்கள் ஆதி காலத்தில் இருந்து வரலாற்றைப் பேணிப் பாதுகாத்து வைத்திருந்தது போல், தமிழ்மக்கள் தமது வரலாற்றைப் பேணிப் பாதுகாத்து வைக்கும் மரபைக் கொண்டிருக்கவில்லை என் பதே அடிப்படைப் பிரச்சினையாகும்.

(தொடரும்)

தீ ஏற்படக் காரணம் வெடிப்புச் சம்பவமே

(கொழும்பு)

பதுளை, கொகோவத்த பகுதியிலுள்ள வாகன உதிரிப்பகங்கள் விற்பனை செய்யும் விற்பனை நிலையமொன்றில் தீ விபத்து ஏற்படக் காரணம் வெடிப்புச் சம்பவம் ஒன்றே எனப் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதன்போது விற்பனை நிலையத்தின் உரிமையாளரான பதுளைப் பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய சுமீர ஹேமந்த குரே என்பவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த கட்டடத்தில் வெடிப்புச் சம்பவம் ஒன்று ஏற்படுவது நிறுவனத்தின் இரு இடங்களில் பொருத்தப்பட்டிருந்த சீ.சீ.ரி.வி கமராக்களில் பதிவாகியுள்ளது.

இது குறித்து நேற்று பதுளை மாவட்ட நீதவானால் ஆரம்ப கட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், சடலத்தை பதுளை வைத்திய சாலைக்கு அனுப்பி பிரேத பரிசோதனைகளை மேற்கொண்டு அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிடப் பட்டிருந்தது.

அதனடிப்படையில் பிரேத பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சடலம் மேலதிக பரிசோதனைகளுக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சம்பவம்தொடர்பில்பதுளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

முன்கூட்டிய பயணச் சீட்டுக்கான பணத்தை மீளச் செலுத்த தீர்மானம்

(கொழும்பு)

முன்கூட்டிய புகையிரத பயணச்சீட்டுகளை பெற்று வேலை நிறுத்தம் காரணமாக பயணம் செய்ய முடியாமல்போனவர்களுடையபயணச் சீட்டுக்கான பணத்தை மீள செலுத்த தீர்மானித்துள்ளதாக இலங்கை புகையிரத சேவை தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை முதல் நேற்று முன்தினம் வரை இடம்பெற்ற வேலை நிறுத்தம் காரணமாக முன்கூட்டிய புகையிரத பயணச்சீட்டுகளை பெற்ற அதிகளவான பயணிகளுக்கு தங்களது பயணங்களை மேற்கொள்ள முடியாமல் போயிருந்தது.

இவர்களுக்குள் அதிகளவான வெளிநாட்டவர்களும் இருப்பதாக தெரியவந்துள்ளது.

அதனடிப்படையில் அவர்களுக்கு தங்களது பயணச் சீட்டுக்களை வழங்கி பணத்தை திரும்பப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதேவேளை, வேலை நிறுத்தம் இடம்பெற்ற காலத்தில் புகையிரத பயணச் சீட்டுக்களை பயன்படுத்தி இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளில் பயணிக்க வசதிகள் வழங்கப்பட்டதனால் ஏற்பட்ட நட்டத்தை அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கு இலங்கை போக்குவரத்து சபை தீர்மானித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சுமார் 9 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் அதிகாரி பீ.எச். ஆர்.டி சந்திரசிறி தெரிவித்துள்ளார். (இ-7)

பயங்கரவாதத்துடன் தொடர்புடைய இலங்கையர்கள் சவுதியில் கைது

(கொழும்பு)

சவுதி அரேபியாவில், பயங்கரவாதத்துடன் தொடர்புடைய இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சவுதி கெசட்டை (Saudi Gazette) மேற்கோள்காட்டி இந்தச் செய்தி வெளியிடப் பட்டுள்ளது.

40 நாடுகளைச் சேர்ந்த சுமார் 999 பேர் பயங்கரவாதத்துடன் தொடர்பு கொண்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சவுதி சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சவுதி அரேபியாவினால் வெளியிடப்பட்டுள்ள புதிய பட்டியல் ஒன்றில் பல புதிய நாடுகளும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

அந்த புதிய பட்டியலில் இலங்கை, சீனா, எரித்திரியா (Eritrea), ரஷ்யா, ஓமான், கிரிகிஸ்தான் (Kyrgyzstan) மற்றும் கென்யா ஆகிய நாடுகளும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. (இ-7)

திருமண ஆசைகாட்டி திருட்டு பெண் பொலிஸில் முறைப்பாடு

(கொழும்பு)

கொழும்பை அண்டிய புறநகர்ப் பகுதியில் மணப் பெண்ணுக்கு நேர்ந்த அதிர்ச் சிகரமான சம்பவம் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

பிலியந்தலையில் பெண் ஒருவருக்கு திருமண வாக்குறுதியை வழங்கிய நபர், அவரது மோட்டார் சைக்கிள் மற்றும் மடிக்கணனியை திருடியுள்ளதாக மிரிஹான பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் பத்திரிகை ஒன்றில் பெண் வீட்டாரினால் திருமண விளம்பரம் ஒன்று செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு செய்யப்பட்ட விளம்பரத்திற்கமைய, இரத்தினபுரியில் இரத்தினக்கல் வர்த்தகரின் மகன் எனவும், சிவில் பொறியியலாளராக செயற்படுவதாகவும் கூறி இந்த பெண்ணின் வீட்டுக்கு நபர் ஒருவர் சென்றுள்ளார்.

அந்தப் பெண்ணை திருமணம் செய்வதாக வாக்குறுதியளித்துள்ளார்.

அத்துடன், அந்த பெண்ணுடன் பழக ஆரம்பித்துள்ளார். இதன் போது தனக்கு அவசியம் ஏற்பட்டுள்ளதாக கூறி பெண்ணின் மடிக்கணனியைக் கொண்டு சென்றுள்ளார்.

அதனைத் தொடர்ந்து சில நாட்கள்சென்றதும்அந்தப்பெண்ணின் மோட்டார் சைக்கிளையும் அந்த நபர் கொண்டு சென்றுள்ளார். பின்னர் தேடிப் பார்த்த போது குறித்த நபர் தொடர்பில் எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை என குறித்த பெண் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். மிரிஹான பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

இலங்கைக் கடற்படைக்கு அளிக்கப்பட்டு வந்த அமெரிக்க சிறப்புப்போர் படை பயிற்சி நிறைவு

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையின் சிறப்புப் படையணிகளுக்கு அமெரிக்க கடற்படையின் சிறப்பு போர் படையின் அதிகாரிகள் வழங்கி வந்த பயிற்சிகள்நிறைவுபெற்றுள்ளன.

ஒருங்கிணைந்த பரிவர்த்தனை பயிற்சித் திட்டத்தின் கீழ், Flash Style 2018/01 என்ற பெயரில், திருகோணமலை பிராந்தியத்தில் இலங்கை கடற்படையினருக்கு அமெரிக்க கடற்படையின் சிறப்பு போர் படைகள் பயிற்சி அளித்து வந்தன.

4 ஆவது அதிவேக தாக்குதல் படகு அணியைச் சேர்ந்த 26 கடற்படையினர் மற்றும் சிறப்புப் படகு படையணியைச் சேர்ந்த 36 கடற்படையினருமாக மொத்தம் 62 இலங்கை கடற்படையினருக்கு நான்கு வாரங்கள் இந்தப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. கடந்த ஜூலை 17ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பயிற்சிகளின் நிறைவு நாள் நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்றது.

அமெரிக்கா மற்றும் இலங்கைக்கு இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள பயிற்சி மற்றும் ஆதரவு தேவைகள் தொடர்பாக பரஸ்பர புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு அமைய இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் அமெரிக்கக் கடற்படையின் சிறப்புப் போர் படைகளைச் சேர்ந்த பயிற்சி அதிகாரிகளும், இலங்கை கடற்படை அதிகாரிகளும் பங்கேற்றனர். (இ-7)

அனைவரும் ஐக்கியத்துடன் உரிமைகளைப் பெற்று வாழ வேண்டும் என்பதே பிரதமரின் கொள்கை

அமைச்சர் கயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த நாட்டிலுள்ள அனைத்து மக்களும் வேறுபாடு அற்ற வகையில் சகல உரிமைகளையும் அனுபவிக்கும் பட்சத்தில் தாய் நாட்டின் மீதான ஆதரவும், அபிமானமும்மேலோங்கும்என காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியின் ஊடாக பூண்டுலோயா டன்சினன் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மகாத்மா காந்தி புரம் கிராமத்தை பயனாளிகளுக்கு கையளிக்கும்நிகழ்வில்நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இன ஐக்கியத்துடன் உரிமைகளை பெற்றவர்களாக வாழக்கூடிய இலங்கையர்களை உருவாக்க வேண்டும் என்பதே பிரதமரின் கொள்கையாகும். அந்த வகையிலேயே சகல உரிமைகளையும் பெற்றவர்களாக ஏனைய மக்களுடன் மலையக மக்களையும் பிரதமர் இணைத்து செயற்பட இலக்காக கொண்டுள்ளார்.

50வருடங்களுக்குமேலாக இந்த நாட்டில் மலையக பிரதேசங்களில் வாழும் தொழிலாளர்கள் அவர்களின் மூதாதையர்களும் நீங்களும் இந்த மண்ணோடு போராடி மண்ணுக்கும் நாட்டுக்கும் தேயிலையின்ஊடானபெருமையை சேர்த்துள்ளீர்கள்.

மலையக பெருந்தோட்ட மக்கள் தமது வியர்வையை சிந்திய உழைப்பினால் நாட்டுக்கு கடன் இல்லாமல் வாழும் மக்களாக திகழ்கின்றீர்கள். ஆனால் ஆரம்ப காலத்தில் தோட்டப்புற மக்கள் இந்த நாட்டில் இந்த மண்ணில் பிறந்தவர்களும் அல்ல என் பதை நாங்கள் தெரிந்திருக் கின்றோம்.

ஆனால் இன்றைய நாளுக்கு பிறகு இந்த மண்ணில் பிறக்கின்ற ஒவ்வொருவரும் இந்த நாட்டுக்கும் இந்த மண்ணுக்கும் சொந்தமுடையவர்களாக மாற்றம் பெற்றுள்ளார்கள். தனக்கு உரிய வீடு, நிலம் என சொந்தம் கொண்டாடும் வாய்ப்பும் தாய் நாட்டின் மீதான சிநேகமும் வாழும் நிலையும் காணப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

கொழும்பில் கணனியைத் தொலைத்துவிட்டு வீதியில் பதாகையுடன் நின்ற சீனப் பிரஜை

சாரதிக்கு 30 ஆயிரம் ரூபா சன்மானம்

(கொழும்பு)

கொழும்பில் வைத்து சீனப்பிரஜை ஒருவரால் தவறவிடப்பட்ட மடிக்கணனி இலங்கையிலுள்ள பேஸ்புக் நண்பர்களின் உதவியுடன் அவரிடம் மீளவும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த சீனப்பிரஜை அண்மையில் கொழும்பில் ஓட்டோவில் பயணித்த போது அதில் தனது மடிக்கணனியை தவறவிட்டுள்ளார்.

தனது தொழிலுடன் தொடர்புடைய முக்கியமான ஆவணங்கள் அடங்கிய மடிக் கணனி தவறவிடப்பட்டமையினால் மிகவும் அசௌகரியத்துக்குள்ளான குறித்த சீனப் பிரஜை, சில இளைஞர்களின் உதவியுடன் "எனது கணனி தொலைந்துவிட்டது. அதனை மீட்டுத்தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்" என்று சிங்கள மொழியில் எழுதப்பட்ட பதாகையொன்றைத்தாங்கியவாறு கொழும்பு, கங்காராம பிரதேசத்தில் நின்றுள்ளார்.

இதனைப் பார்த்த சில இளைஞர்கள் அக்காட்சியைப் படம்பிடித்து பேஸ்புக்கில் பதிவிட்டதுடன், மேற்படி சீனப்பிரஜையின் தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டிருந்தனர்.

இந்தப் பதிவு பலரால் பரிமாறப்பட்டு, இறுதியாக மடிக்கணனி தவறவிடப்பட்ட ஓட்டோ சாரதியின் கைகளுக்கு கிட்டியுள்ளது. இதனையடுத்து, அச்சாரதி சீனப் பிரஜையை தொலைபேசியில் தொடர்புகொண்டு அவரது வீட்டுக்குச் சென்று மடிக் கணனியை கையளித்துள்ளார்.

தனது கணனி கிடைத்த சந்தோசத்தில் அவ்வெளி நாட்டவர் சாரதிக்கு 30 ஆயிரம் ரூபாவை சன்மானமாக வழங்கியுள்ளார்.

அத்துடன், தனது மடிக் கணனி திரும்பக் கிடைப்பதற்கு உதவி செய்த இலங்கை நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தும், ஓட்டோ சாரதியுடன் எடுத்துக்கொண்ட படத்தையும் குறித்த சீனர் தனது பேஸ்புக்கில் பதிவேற்றியுள்ளார். (இ-7)

செய்தித்துளிகள்

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை மதிப்பீட்டுப் பணி 15ம் திகதி முதல்

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணி இம்மாதம் 15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. 21 ஆம் திகதியுடன் இந்தப் பணிகள் நிறைவடையும். இந்தப் பணிகளில் 8 ஆயிரம் ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட் டுள்ளனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்தார். (இ-7)

ஆலய பரிபாலன சபைக் கூட்டம்

(சாவகச்சேரி)

நுணாவில் மேற்கு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய பரிபாலனசபை ஆண்டுப் பொதுக்கூட்டம் நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

புதிய பரிபாலனசபைத் தெரிவும் நடைபெறவுள்ளதால் பொதுச்சபை அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு புதிய பரிபாலன சபை அமைய ஒத்துழைப்பு நல்குமாறு செயலாளர் க.விஜயவாசன் அறிவித்துள்ளார். (இ-29)

முன்பள்ளியின் தமிழ்த்தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்/புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேச முன்பள்ளியின் தமிழ்த்தின விழா கணேச முன்பள்ளி முன்றலில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் கணேச சனசமூக நிலையத் தலைவர் சி.செல்லஸ்கந்தராசா தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கிருபாகரன், சிறப்பு விருந்தினராக யாழ். ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய அதிபர் சைவப்புலவர் செ.பரமேஸ்வரன், கௌரவ விருந்தினராக திருமதி. ஞானேஸ்வரி அருந்தவநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

காட்டுத் தீயால் 6 ஏக்கர் நாசம்

(கொழும்பு)

மின்னேரியா வனப் பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீயினால் வனாந்தரப் பகுதியின் சுமார் 6 ஏக்கர் காணிகள் தீக்கிரையாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த தீ விபத்தை மின்னேரியா பொலிஸார், தமன்கடுவ தியணைப்பு படையினர் மற்றும் இராணுவ தியணைப்புப் படையினர் ஆகியோர் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இருப்பினும் வனாந்தரப் பகுதியின் 6 ஏக்கர் காணி தீக்கிரையாகியுள்ளதாகவும் தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸ் ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

ரயில் வேலைநிறுத்தத்தால் இ.போ.சவுக்கு ரூ.10 மில். நட்டம்

(கொழும்பு)

ரயில்வே தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக, ரயில் திணைக்களத்துக்கு மட்டுமன்றி, இலங்கை போக்குவரத்துச் சபைக்கும் 10 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது. என இ.போ.சவின் தலைவர் ரமால் சிறிவர்த்தன தெரிவித்தார்.

வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஐந்து நாட்கள், ரயில் பருவச்சீட்டுகளை வைத்திருந்த ரயில் பயணிகள், இ.போ.சவுக்கு சொந்தமான பேருந்துகளில், இலவசமாக ஏற்றிச்செல்லப்பட்டனர்.

அதுமட்டுமன்றி, நாளொன்றுக்கு 80 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம், மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனால், இ.போ.சவுக்கும் நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

வீடுகளில் மீன் வளர்க்கும் திட்டத்தை அறிமுகம் செய்ய அரசு நடவடிக்கை

(கொழும்பு)

கம்பெரலிய கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் வீடுகளில் மீன் வளர்க்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக, கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை பிரதி அமைச்சர் திலிப் வெதஆராச்சி தெரிவித்துள்ளார்.

அதன்படி, குறித்த அபிவிருத்தித் திட்டத்தின் சாதக, பாதக தன்மை குறித்து ஆய்வு செய்யுமாறு ஆலோசனை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கிராமப்புற மக்களை மீன்வளர்ப்புத் துறையில் ஊக்கப்படுத்தும் வகையில், இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

கோதையின் கதை முட்டைகள்!



கோதை நிறையக் கதைகளைச் சேகரித்து வைத்திருந்தாள். கதைகளைக் கேட்பதிலும் படிப்பதிலும் அளவுக்கு அதிகமாக ஆர்வம் காட்டுவாள்.

ஒருநாள், கோதை ஏதோ மனக் குழப்பத்தில் இருந்தாள். சேகரித்து வைத்திருந்த கதைகளில் ஒன்று காணாமல் போய் விட்டது. அந்தக் கதை தொலைந்து போனதா? திருட்டுப் போனதா? என்று தெரியாமல் தவித்தாள். கதை காணாமல் போன காரணம் புரியாத புதிராகவே இருந்தது. சோகத்திலிருந்து மீள அவளுக்கு நீண்ட நேரமானது. கதையைத் தேடிக் கண்டுபிடித்தே தீரவேண்டும் என்ற முடிவில் வெளியே வந்தாள் கோதை.

சற்றுத் தூரத்தில் ஒரு கோழியைப் பார்த்தாள். கோதையைத் திரும்பிக்கூட பார்க்காத அந்தக் கோழி, கால்களால் நிலத்தைக் கிளறிக்கொண்டிருந்தது. எதையோ கொத்தி இழுக்க முயற்சி செய்து கொண்டிருந்தது. அதைப் பார்த்த கோதை, கோழியும் எதையோ தொலைத்துவிட்டது என்று நினைத்தாள். கோழியின் கதையும் காணாமல் போய் விட்டதா? என்பதைக் கேட்பதற்காக அருகில் சென்றாள்.

"கோழியே, நிலத்தைக் கொத்திக் கொத்திப் புதையலையா தேடுறே?"

"ஆமாம் கோதை, நீ தொலைத்த புதையலைத்தான் தேடுறேன்" என்ற கோழியின் பதில் அவளுக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

"நான் எதையும் தொலைத்ததாக உன்னிடம் சொல்லவில்லையே?"

"என்னிடம் நீ எதையும் மறைக்க முடியாது கோதை. சில மணி நேரமாக நீ ஒரு கதையைத் தொலைத்துவிட்டுத் தேடிக் கொண்டிருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும்" என்றது கோழி.

அதைக்கேட்ட கோதை, வியப்பில் ஆழ்ந்தாள். காணாமல் போன கதையைப் பற்றிக் கோழிக்கு எப்படித் தெரிந்தது? அவளது ஆர்வம் அதிகமானது.

"உனக்கு உதவி செய்ய வேண்டும் என்று தோன்றியது. அதனால் தான் மண்ணைக் கிளறி காணாமல் போன உன் கதையைத் தேடுகிறேன்"

கோழி சொன்னதைத் கேட்டு நம்பிக்கையோடு காத்திருந்தாள் கோதை.

பல மணி நேரமாகியும் கோழி நிலத்தைக் கொத்துவதை நிறுத்தவே இல்லை. கோதைக்குக் கதையும் கிடைக்கவில்லை.

அன்று அவள் நினைத்தபடி எதுவும் நடக்கவில்லை என்றாலும் சில நாட்களுக்குப் பிறகு ஓர் அதிசயம் நிகழ்ந்தது.

கோதை கோழியுடன் விளையாடுவதற்காகக் காத்திருந்தாள். வெகு நேரமாகியும் கோழி கூண்டைவிட்டு வெளியே வரவில்லை. அருகில் சென்று பார்த்தாள். கோழி ஆடாமல், அசையாமல் உட்கார்ந்திருந்தது.

"கோழி, கண்மாய் வரைக்கும் போயிட்டு வரலாம் வா" என்று கூப்பிட்டாள் கோதை.

"இப்போது அது முடியாது. நான், எனது முட்டைகளை அடைகாத்துக் கொண்டிருக்கிறேன்" என்றது கோழி.

"அடடே, உங்கள் வீட்டுக்குப் புதிதாக விருந்தினர்கள் வரப்போகிறார்களா?" என்ற கோதை, அங்கேயே உட்கார்ந்து விட்டாள்.

சில நிமிடங்களில் கோழி முட்டைகளில் இருந்து, ஏராளமான கதைகள் வெளியே வந்தன. அந்த அதிசயத்தைக் கண்கொட்டாமல் பார்த்தாள் கோதை. கதைகளை எடுத்து அன்பளிப்பாகக் கோதைக்குக் கொடுத்தது கோழி.

ஒரு முட்டையிலிருந்து படக் கதைகள் வந்தன. அடுத்த முட்டையிலிருந்து அறிவியல் கதைகள், இன்னொன்றிலிருந்து மர்மக் கதைகள், வேறொன்றிலிருந்து நீதிக் கதைகள், மற்றொன்றிலிருந்து நாடோடிக் கதைகள் என்று பல விதமான கதைகள் கிடைத்தன!

கோதையின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தினமும் அந்த அதிசயக் கதைகளைக் கேட்பதிலும் வாசிப்பதிலும் பொழுதைக் கழித்தாள். கதைகளை நண்பர்களுக்குத்தர விரும்பினாள். மந்திரக் கோழி குறித்தும் கதை முட்டைகள் குறித்தும் அறிந்த அவளது நண்பர்கள் ஆச்சரியம் அடைந்தார்கள்.

தங்களுக்குப் பிடித்த கதைகளைப் பிரித்து எடுத்துக்கொண்டார்கள். கதைகளுடன் சேர்ந்து விளையாடினார்கள். நிறையக் கதைகளைக் கேட்டதாலும் வாசித்ததாலும் உலகம் பற்றிய புரிதல் உண்டானது. அறிவியல் உண்மைகள் விளங்கின. கதைகள் நல்ல நண்பர்களாக மாறின. அன்பு, கருணை, உதவி போன்ற குணங்களைப் பற்றிய தேவையை உணர முடிந்தது.

வகுப்பு ஆசிரியர்கூடப் புதுப்புது கதைகளைக் கேட்டறிந்தார். மாணவர்கள் கதை சொல்வது எப்படி என்பதையும் கற்றுக் கொண்டார்கள். நாள் முழுவதும் கதைகளில் மூழ்கிவிடும் பிள்ளைகளின் மன நிலை புரியாத பெற்றோர் வருத்தம் அடைந்தனர். குழந்தைகளைக் கண்டித்தனர்.

கோதை வீட்டுக் கோழியின் புகழ் பரவியது. குழந்தைகளின் கதைக் கொண்டாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்தது. பிள்ளைகளின் செயல், பெற்றோருக்கு வருத்தத்தைத் தந்தது. தலைமை ஆசிரியரிடம் புகார் அளித்தனர்.

கதை முட்டைகள் இடும் கோழியின் கதையைக் கேட்ட தலைமை ஆசிரியர் ஆச்சரியம் அடைந்தார். பெற்றோரையும் கோதையின் கோழியையும் அழைத்தார். எல்லோரும் வந்தனர்.

"நீ என்ன மந்திரம் கற்ற கோழியா? உன் முட்டைகளில் இருந்து மட்டும் எப்படிக் கதைகள் வருகின்றன?" என்றார் தலைமை ஆசிரியர்.

கோழி நடந்ததை விபரமாகக் கூறியது. கோதை தொலைத்த கதையைத் தேடி நிலத்தைக் கிளறியபோது, தனக்கு மந்திர சக்தி வந்ததாகச் சொன்னது.

"கதை முட்டைகள் எப்படிக் கிடைத்தன என்று ஆராய்வதை விட, ஏன் வந்தன என்று தெரிந்துகொள்வது அவசியம். குழந்தைகள் கதைப் பிரியர்கள் என்ற உண்மையை அனைவரும் அறிவீர்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு தாத்தா, பாட்டி குழந்தைகளுக்குக் கதை சொல்வார்கள். இன்று குழந்தைகளுக்குக் கதை சொல்ல யாரும் இல்லை.

இன்று முதல், விடுமுறையிலும் ஓய்வு நேரத்திலும் குழந்தைகளுக்குக் கதைகள் சொல்ல வேண்டும். கதைகளை வாசிக்கச் சொல்லி உற்சாகப்படுத்த வேண்டும். அப்படிச் செய்வதாக உறுதி அளித்தால், இனி நான் கதை முட்டைகள் இடுவதை நிறுத்திக் கொள்கிறேன்" என்றது கோழி.

அனைவரும் திகைத்து நின்றார்கள். பெற்றோர் அனைவரும் சம்மதத்தைத் தெரிவித்தார்கள். குழந்தைகள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தனர்.

அன்று முதல் கோழி முட்டைகளை மட்டும் இட ஆரம்பித்தது.

பொன்மொழிகள்

- கல்வி ஒரு மூடை நூல்களை வாசிப்பது அன்று. அடக்கம், ஒழுங்கு, அறம், நீதி இவற்றின் முன்மாதிரியாகும் - எட்மண்ட் பர்க்
- ஒழுக்கம் உண்டாக்காத இலக்கியக் கல்வியால் ஒருவித உபயோகமும் கிடையாது - காந்திஜி
- சான்றோன் ஆக்காத கல்வி, சாமர்த்தியமாய்க் கழித்த சோம்பலேயாகும் - போலிங் புரூக்
- நாம் கற்றுக் கொண்டதைப் போற்ற வேண்டும். நமக்குத் தெரிந்தவற்றை முறைப்படுத்திக் கொள்ள வேண்டும் - மூர்
- தனிமனிதர் வாழ்வை இன்பமுடையதாகவும் நன்மையுடையதாகவும் மாற்றி அமைப்பதும் வாழ்வாங்கு வாழ வழி வகுப்பதுமே கல்வி - பெஸ்டலசி
- ஒரு குழந்தை கனவானாகவோ, சீமாட்டியாகவோ இருக்கும்படி செய்வது கல்வியல்ல. நல்ல மனிதனாக இருக்கச் செய்வதே கல்வி -ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்
- கல்வி என்பது தெரியாததைத் தெரியச் செய்வதன்று. ஒழுக்கத்தை ஒழுகச் செய்வதும் இன்பம் அளிப்பதுமாகும் - ரஸ்கின்
- நூறு முறை உளியால் அடித்தும் சிறு கீறல் கூட ஏற்படாமல் இருக்கும் பாறை, நூற்றியொராவது முறை அடிக்கிறபோது உடையும். அது கடைசி அடியால் உடையவில்லை. அதற்கு முந்தைய அடிகளால்தான் உடைந்தது. - ஜேக்கப்ரைஸ்

❖1937 - ஆறு ஜப்பானிய விமானங்கள் சீனாவினால் சுட்டு வீழ்த்தப்பட்டன.

❖1945 - பசுபிக் போர் முடிவுற்றது.

❖1947 - பிரித்தானிய இந்தியாவில் இருந்து ஐக்கிய இராச்சியத்தின் நிர்வாகத்தின் கீழ் பாகிஸ்தான் விடுதலை அடைந்து பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இணைந்தது.

❖2006 - முல்லைத்தீவு செஞ்சோலை சிறார் இல்லம் மீது இலங்கை இராணுவத்தினர் நடத்திய விமானத் தாக்குதலில் 61 பாடசாலை சிறுமிகள் கொல்லப்பட்டு 60 பேர் படுகாயமடைந்தனர்.

பிறப்புகள்

❖1857 - வெ.ப.சுப்பிரமணிய முதலியார், தமிழக கால்நடை மருத்துவர். மொழிபெயர்ப்பாளர், கவிஞர் (இ. 1946)

❖1867 - ஜோன் கால்ஸ்வர்தி, நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேய எழுத்தாளர் (இ. 1933)

❖1905 - என். எம். ஆர். சுப்பராமன், இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், அரசியல்வாதி (இ. 1983)

❖1911 - வேதாத்திரி மகரிஷி, இந்திய ஆன்மீகத் தலைவர் (இ. 2006)

❖1933 - ரிச்சர்ட் ஆர். எர்ன்ஸ்ட், நோபல் பரிசு பெற்ற சுவிட்சர்லாந்து வேதியியலாளர்

❖1942 - அங்கையன் கைலாசநாதன், ஈழத்து எழுத்தாளர் (இ. 1976)

❖1948 - அப்துல் காதிர் முல்லா, வங்கதேச அரசியல்வாதி (இ. 2013)

❖1958 - சாந்தி சச்சிதானந்தம், இலங்கைத் தமிழ் சமூக ஆர்வலர், மனித உரிமைச் செயற்பாட்டாளர் (இ. 2015)

❖1959 - மேஜிக் ஜான்சன், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்ட வீரர்

இறப்புகள்

❖1979 - என். எம். பெரேரா, இலங்கையின் மார்க்சியவாதி, அரசியல்வாதி (பி. 1905)

❖1979 - எட்வர்ட் குபேர், புதுச்சேரியின் முதலாவது முதலமைச்சர் (பி. 1894)

❖1984 - காசாபா தாதாசாகேப் சாதவ், இந்திய மற்போர் வீரர் (பி. 1926)

❖2007 - இராம. சம்பந்தம், தமிழக ஊடகவியலாளர்

❖2011 - சம்மி கபூர், இந்தியத் திரைப்பட நடிகர் (பி. 1931)

❖2012 - விலாஸ்ராவ் தேஷ்முக், மகாராட்டிராவின் 14 ஆவது முதலமைச்சர் (பி. 1945)

சிறப்பு நாள்

❖விடுதலை நாள் (பாகிஸ்தான், 1947)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	மருதனார் மடம்	சாவகச்சேரி	கொடிகாமம்	கிளிநொச்சி	நெல்லியடி
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	80	80	80	90	120	140
உருளைக்கிழங்கு	120	100	100	85	100	100
பச்சைமிளகாய்	200	250	200	180	200	200
தக்காளி	80	200	80	70	100	100
மரவள்ளிக்கிழங்கு	40	70	50	40	50	40
கோவா	160	100	140	80	160	160
கரட்	200	280	360	180	400	400
பூசணி	80	80	70	50	100	100
புடோல்	60	100	80	40	80	100
வாழைக்காய்	100	80	80	70	80	100
சின்ன வெங்காயம்	120	100	140	100	120	140
பெரிய வெங்காயம்	120	120	110	95	120	120
பாகற்காய்	200	250	160	200	200	200
வெண்டிக்காய்	50	80	30	40	80	100
கருணைக் கிழங்கு	80	100	100	80	120	100
பயற்றங்காய்	160	180	130	110	150	150
லீக்ஸ்	140	200	100	100	120	150
பீற்றூட்	80	100	80	90	120	140
கறிமிளகாய்	200	160	200	190	200	250
முருங்கைக்காய்	100	80	60	60	120	30
போஞ்சி	250	250	200	200	240	200
கத்தரித்தம்புள்ளா	60	70	—	50	100	80
கீரை-1பிடி	20	20	40	30	30	20
தேசிக்காய்	30	30	40-50	50	80	20
தேங்காய் ஒன்று	60	60	50	45	30-50	30-60
இராசவள்ளி	160	120	100	120	200	200
வெங்காயப்பூ	100	80	50	100	100	100
முள்ளங்கி	30	100	40	40	80	100
பொன்னாங்காணி	40	25	50	10	30	50
வல்லாரை	20	40	20	20	20	20
ஈரப்பலா	50	80	40	110	60	50

தீய செயல்கள் நம்மைத் துன்புறுத்துவது, அவற்றைச் செய்த காலத்தில் அன்று. வெகுகாலம் சென்று அது ஞாபகத்துக்கு வரும்போதுதான். – சுஷோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

வடக்கின் முதலமைச்சர் கூறியது நிச்சயம் நடந்தாகும்

இந்தப் பிரபஞ்சம் இறைவனின் படைப்பு என்பதை எவரும் எடுத்த எடுப்பில் நிராகரித்து விட முடியாது.

தவிர, உலக நாடு என்று நாம் பார்க்கும் போது நுண்ணிய விடயங்கள் நமக்குத் தெரிவதில்லை. மாறாக ஒவ்வொரு தனிமனிதன் என்ற அடிப்படையில் நோக்கும்போதுதான் உள்ளார்ந்தம் புரியும்.

ஆம், இரண்டாம் உலகப் போரின் போது யப்பானின் நகரங்கள் மீது அணுகுண்டுத் தாக்குதல் இடம்பெற்றது.

இத்தாக்குதலால் ஏகப்பட்ட மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. மனித சமூகம் வெறுக்குமளவில் அந்த மனித வதை நடந்திருந்தது.

இதனை நாம் வெறு வெளியில் நின்று பார்க்கும்போது, இரண்டாம் உலக யுத்தத்தில் யப்பான் மீது அணுகுண்டு வீசப்பட்டது. அதில் ஏகப்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர் என்ற செய்திகள் மட்டுமே கிடைக்கப் பெறும்.

மாறாக, குறித்த அழிவு தொடர்பில் உள்ளிறங்கி குண்டுவீச்சுக்குத் திட்டமிட்டவர்கள், குண்டு வீசியவர் எனத் தனிப்பட்ட தகவல்களை எடுத்தாராய்ந்து அவர்களுக்கு நடந்தது என்ன என்று அறியும்போதுதான், இந்தப் பிரபஞ்சத்தின் இயக்கம் இறைவனுடையது என்ற உண்மையை உணரமுடியும்.

யப்பானிய நகரங்கள் மீது அணுகுண்டு வீசியவர் பின்னாளில் மனநோய்வாய்ப்பட்டு இறந்தார் என்பது உண்மையானது.

இதுபோல எத்தனையோ சம்பவங்கள் நடந்தாகின்றன. இதை நாம் கூறுவதற்காக, அணுகுண்டு வீசியவர் மனநோய்வாய்ப்பட்டார் என்பது யப்பானில் கொல்லப்பட்ட அத்தனை பேருக்குமான பரிகாரமாகுமா என்று கேட்டால் இல்லை என்பதே நம் பதில்.

ஆனால், நாம் கூற வருவதென்னவெனில் அணு குண்டு வீசியவர் மன மகிழ்வோடு வாழ்ந்தார் என்று யாரும் நினைத்துவிடக் கூடாது. அவரின் தனிப்பட்ட வாழ்க்கையை நாம் அறியவில்லை.

எனவே உலக பொது வெளியில் நின்று பார்த்துவிட்டு ஏதேனும் ஒரு முடிவுக்கு வந்து விடக்கூடாது என்பதுதான் நம் கருத்து.

தவிர, இப்போதிருக்கின்ற இலங்கையின் ஆட்சியாளர்கள் இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று மமதை கொண்டுள்ளனர். இதன் காரணமாக தமிழ் மக்களை எப்படியும் நடத்தலாம் என்பது அவர்களின் நினைப்பு. ஆனால் அதுவல்ல உண்மை.

இன்று உன்னுடையதாக இருப்பது நாளை இன்னொருவருடையதாகிறது என்பதே கீதையின் போதனை.

ஆக, எக்காலத்திலும் இலங்கை பௌத்த சிங்களவர்களுடையதாக இருக்கும் என்று நினைத்துவிடக்கூடாது. அது என்றோ ஒரு நாள் மாறலாம். இதுவே இயற்கையின் நியதி.

ஒரு காலத்தில் குடியேற்றவாதிகள் இலங்கையைக் கைப்பற்றி இங்கு மதமாற்றத்தைச் செய்தனர்.

இங்கிருக்கின்ற சைவாலயங்களை அழித்தனர். ஆனால் இன்று அவர்களுடைய நாடுகளில் சைவாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவர்களின் வீதியில் சைவ கடவுளரின் தேர் வலம் வருகிறது.

இப்படியொரு நிகழ்வை அன்று இலங்கையை கைப்பற்றிய அந்நியர்கள் நினைத்து பார்த்திருப்பார்களா என்ன?

ஆக, வடக்கின் முதலமைச்சர் கூறியது போல இலங்கையைப் பாதுகாக்க தமிழ் மக்களின் உதவியைப் பெற வேண்டிவரும் என்பதும் நிச்சயம் நடக்கக்கூடியதே.

கூட்டு ஒப்பந்த பேச்சுவார்த்தையில் ஜனாதிபதி தலையிட வேண்டும்

மலையகத்தில் உண்ணாவிரதப் போராட்டம்

(அக்கரப்பத்தனை)

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான கூட்டு ஒப்பந்த பேச்சுவார்த்தையில், ஜனாதிபதி தலையிட வேண்டும் என வலியுறுத்தி நடத்தப்படும் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று திங்கட்கிழமை மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தது.

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வேவர்லி தோட்ட பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இருவரால் ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டமே நேற்று மூன்றாவது நாளாகவும் நீடித்தது.

குறித்த பிரதேசத்தில் தோட்ட நிர்வாகங்கள் தேயிலை மலைகளை முறையாக பராமரிக்காமலும், தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகளை வழங்காமல் இருப்பதை கண்டித்தும் 15 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இந்த போராட்டம் ஆரம்பமானது.

போராட்டத்தில் ஈடுபடுவர்களுக்கு தோட்டத் தொழிலாளர்கள் பலரும் தங்கள் ஆதரவினைத் தெரிவித்துள்ளதுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உண்ணாவிரத போராட்டம் இடம்பெறும் இடத்திற்கு வராத பட்சத்தில் சகலரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

நெல்லியடியில் விபத்து

கோப்பாய் இளைஞன் பலி

நெல்லியடியில் இடம் பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நெல்லியடி மாலுசந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் 24 வயதான இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவர கோப்பாய் பகுதியை சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்று வாகனங்களை முந்திச்செல்ல முற்பட்ட சந்தர்ப்பத்தில், முன்னால் வந்த மோட்டார் வாகனத்துடன் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் பலத்த காயமடைந்த நபரை மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டதன் பின்னர் குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை நாட்டில் வெவவேறு பகுதிகளில் இடம பெற்ற மோட்டார் சைக் கிள் விபத்துக்களில் மூவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகம் தெரிவித்துள்ளது. (ம-9)

ரயில் கட்டணங்கள் 15% திருத்தப்படவுள்ளன

ரயில் கட்டணங்கள் 15 வீதத்தால் திருத்தப்படவுள்ளன.

அதற்கான வர்த்தமானி அறிவித்தலைத் தயாரித்து, அமைச்சிடம் ஒப்படைத்துள்ளதாக பிரதி வணிக அத்தியட்சகர் என்.ஜே.இதிபொலகே தெரிவித்துள்ளார்.

ரயில்வே தொழிற்சங்கத்தினர் கடந்த 4 நாட்களாக முன்னெடுத்த பணிப் பகிஷ்கரிப்பினால், 64 மில்லியன் ரூபாய் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ம)

சிறைச்சாலைக்குள் விசேட பொலிஸ் பிரிவு

நீதியமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

கலைக்கப்பட்ட சிறைச்சாலை புலனாய்வு மற்றும் பாதுகாப்பு பிரிவிற்கு பதிலாக விசேட பொலிஸ் பிரிவொன்றை சிறைச்சாலைக்குள் ஸ்தாபிக்க நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

திறமையான மற்றும் ஒழுக்கமுடைய, ஊழல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்பு படாத இளம் அதிகாரிகளை கொண்டு இந்த புதிய பொலிஸ் பிரிவு ஸ்தாபிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரலவின் ஆலோசனைகளுக்கு அமைய இந்த பிரிவு ஸ்தாபிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறைச்சாலைகளுக்குள் ஸ்தாபிக்கப்பட்டிருந்த புலனாய்வு பிரிவை கலைப்பதற்கு நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு அண்மையில் நடவடிக்கை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-9)

இராணுவத்தினரிடையே வாய்த்தர்க்கம் மூவர் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

இராணுவத்தினர் இருவருக்கிடையில் ஏற்பட்ட போத்தல் தாக்குதலில் மூன்று இராணுவ வீரர்கள் காயங்களுக்குள்ளாகி, தியத்தலாவை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தியத்தலாவை இராணுவ முகாமிலேயே மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

இரவு நித்திரை வேளையில், இராணுவ சிப்பாயொருவர் வீணை வாசித்துக் கொண்டிருந்த போது, அதனை நிறுத்தும்படி பிறிதொரு இராணுவ சிப்பாய் கூறவே, அது தொடர்பாக ஏற்பட்ட வாய்த்தரக்கம் மோதலாகி, போத்தல தாக்குதலாக மாறியுள்ளது.

பிறிதொரு இராணுவ சிப்பாய்மோதலை தடுக்க முற்பட்ட போது மூவரும் காயங்களுக்குள்ளாகினரென்று ஆரம்ப விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

போத்தல் தாக்குதல்களினால ஏற்பட்ட வெட்டுக் காயங்களுடன் மூன்று இராணுவ சிப்பாய்கள் காயங்களுக்குள்ளாகினர்.

இச்சம்பவம் குறித்து தியத்தலாவை பொலிஸார் இராணுவ பொலிஸாருடன் இணைந்து புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (2-9)

அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

ஸ்ரீ 108 வைணவத் திருத்தலங்கள்

திருவகிந்திபுரம்
திருக்கோவிலூர் வரதராஜப் பெரு மாள் திருக்கோயில்
காஞ்சிபுரம்
தூப்புல்
அழகிய சிங்க பெருமாள் திருக்கோயில்
திருநீரகம்
திருப்பாடகம்
நிலாதிங்கள் துண்டம்
திருஊரகம்
திருவெக்கா
திருகாரகம்
திருக்கார்வானம்
திருக்கள்வனூர்
திருபவளவண்ணம்
பரமேஸ்வர விண்ணகரம்
திருப்புட்குழி
திருநின்றவூர்
திருவள்ளூர்
திருவல்லிக்கேணி

(தொடரும்)

சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

- செல்வம் பெருகியுள்ள காலத்தில் தான் ஒருவனுக்கு பணிவு தேவை. அதே சமயம் வறுமையுற்ற காலத்தில் மனிதனுக்கு துணிவு அவசியம்.
- தன்னந்தனியாக இருப்பவன் பகையைத் தேடிக் கொள்ளக்கூடாது. அவ்வாறு செய்தால் பித்துப்பிடித்தவனைப் போல அலைய நேரிடும்.
- துன்பமற்ற இன்பமும், தீமையற்ற நன்மையும் அடைவது என்பது இயலாத ஒன்று. எந்தச் செயலிலும் இன்ப, துன்பம் இரண்டும் கலந்தே இருக்கிறது.
- நன்மை செய்பவன், ஒவ்வொருவருக்கும் கைகொடுத்து மகிழத் தயாராயிருக்கலாம்.
- பணம் மட்டுமே வாழ்க்கையல்ல. பணத்தை தவிர, நாம் பிறருக்குச் செய்யும் நன்மையும், தெய்வபக்தியும் நம் மனதில் ஆற்றலை பெருகச் செய்பவை தான்.
- மற்றவர்களின் உதவியை எதிர்பார்த்து நடப்பவன் சத்தியத்தைப் பின்பற்ற முடியாது.
- அரிய செயல்கள் பெரிய உழைப்பின்றி ஒருபோதும் முடிந்ததில்லை.

சம்பியனாகியது கலைஒளி ஸ்ரீமுருகனுக்கு இரண்டாமிடம்

இணுவில் கலைஒளி அணி

வதிரி ஸ்ரீமுருகன் அணி

மட்டுவில் மோகன் தாஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் சுமார் 48 கழகங்கள் போட்டியிட்டன. இதில் இறுதிப் போட்டி கடந்த 12 ஆம் திகதி மோகன்தாஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் வதிரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகத்தினருடன் நாணயச் சுழற் சியில் வெற்றி பெற்று துடுப்பாட்டத்தை மேற்கொண்டது இணுவில் கலைஒளி.

மோகன்ராஜ்சின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலமும் ஸ்ரீதர் சனின் நிதான ஆட்டத்தின் மூலமும் நிர்ணயிக்கப்பட்ட 12 பந்து பரி மாற்றங்களில் 127 ஓட்டங்களினை பெற்றுக் கொண்டது கிளிநொச்சி கலைஒளி அணி.

பதிலுக்கு துடுப்பாடிய வதிரி ஸ்ரீமுருகன் 11 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 88 ஓட்டங்களை பெற்றது.

இதன்மூலம் 38 ஓட்டங்களினால் இணுவில் கலைஒளி வெற்றி பெற்றுள்ளது.

தொடரின் சிறந்த பந்து வீச்சாளராகவும் இறுதிப் போட்டியின் சிறந்த வீரராகவும் கலைஒளி வீரர் மோகன்ராஜ் உம் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் தொடராட்ட வீரராகவும் வதிரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக சகலதுறை வீரர் உமை சுதனும் தெரிவு செய்யப் பட்டனர். (க)

பளு தூக்கல் போட்டி யாழ்.பல்கலை சம்பியன்

இலங்கை பளு தூக்கும் சம்மேளனம் நடத்திய இன்ரர் மீடியா பளு தூக்கல் சம்பியன் சிப் போட்டியில் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சம்பியன் பட்டத்தை வென்றது. கொழும்பு டொறிங்ரன் உள்ளக விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 24 புள்ளிகளைப் பெற்று சம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளது. (க)

வடக்கு- கிழக்கு பிறிமியர் லீக் முல்லை பீனிக்ஸ் அணி வெற்றி

வடக்கு, கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்கின், லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில், 9 ஆவது சுற்று லீக் ஆட்டங்கள் யாழ்ப் பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடை பெற்று வருகின்றது. லீக் சுற்றின் 54 ஆவது போட்டியில் முல்லை பீனிக்ஸ் அணியை எதிர்த்து தமிழ் யுனைட்டட் அணி மோதியது.

போட்டி தொடங்கி, 15 ஆவது நிமிடத்தில் யுனைட்டட் அணியின் ஈ.இசாக் முதலாவது கோலை பதிவு செய்தார். அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் 17 ஆவது நிமிடத்தில் பீனிக்ஸ் அணியின் என்.ஜே. நிக்கோலஸ் பதில் கோல் அடித்தார்.

விடாது ஆடிய, யுனைட்டட் அணிக்கு, 22 ஆவது நிமிடத்தில் ஆர்.விசோத் இரண்டாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார். அதன் பின்னர் முல்லை பீனிக்ஸ் அணியினர் தமது ஆட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தினர். 52 ஆவது நிமிடத்தில் பீனிக்ஸ் அணியின், என்.ஜே.நிக்கோலஸ் இரண்டாவது கோலை அடித்தார்.

71 ஆவது நிமிடத்தில் பீனிக்ஸ் அணியின், எஸ்.மோகன்ராஜ் கோல் ஒன்றை அடித்து, பீனிக்ஸ் அணியின் வெற்றியை உறுதி செய்தார். முடிவில் முல்லை பீனிக்ஸ் அணி, 03:02 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (க-26)

ரிங்கோ ரைரன்ஸுடனான போட்டி வவுனியா வோரியர்ஸுக்கு வெற்றி

வடக்கு, கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்கின், லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில், 9 ஆவது சுற்று லீக் ஆட்டங்கள் யாழ்ப் பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது. லீக் சுற்றின் 56 ஆவது போட்டியில் வவுனியா வோரியர்ஸ் அணியை எதிர்த்து ரிங்கோ ரைரன்ஸ் அணி மோதியது.

முதற்பாதியாட்டத்தில் இரண்டு அணிகளும் எவ் வித கோல்களையும் பதிவு செய்யவில்லை. இரண்டாவது பாதியாட்டத்தில் வவுனியா வோரியர்ஸ் அணி, தனித்து விளையாடியது.

அதன் பயனாக 61, 70 மற்றும் 90 ஆவது நிமிடங்களில் கோல்களை அடித்து வோரியர்ஸ் அணி 03:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றியை உறுதி செய்தது. கோல்களை, எம்.எஸ். மெமோம், எஸ்.டீ.ஆதில், ஏ.சி.எம்.அசாம் ஆகியோர் அடித்தனர். (க-26)

அம்பாறை அவஞ்சேர்ஸ் அணி வெற்றி

வடக்கு, கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்கின், லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில், 9 ஆவது சுற்று லீக் ஆட்டங்கள் யாழ்ப் பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

லீக் சுற்றின் 55 ஆவது போட்டியில் அம்பாறை அவஞ்சேர்ஸ் அணியை எதிர்த்து நொதேர்ன் எலைட் அணி மோதியது.

போட்டியின் 6 ஆவது நிமிடத்தில் அவஞ்சேர்ஸ் அணியின், எம்.சி. ஹரோன் முதலாவது கோலை அடித்தார். தொடர்ந்து 48 ஆவது நிமிடத்தில் அவஞ்சேர்ஸ் அணியின் எஸ்.நுபைஸ் அணிக்கான இரண்டாவது கோலை அடித்தார்.

88 ஆவது நிமிடத்தில் நொதேர்ன் எலைட் அணியின் பதில் கோலை அடித்தது. அந்தக் கோலை, ஆர்.சுமன்ராஜ் அடித்தார். மேலதிக நிமிடத்தில் (92 ஆவது நிமிடம்) அவஞ்சேர்ஸ் அணியின் எஸ். நுபைஸ் கோல் ஒன்றை அடித்து, அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

முடிவில், அம்பாறை அவஞ்சேர்ஸ் அணி 03:01 என்ற கோல்கள் கணக்கில் வென்றது. (க-26)

ஜனாதிபதி மக்கள்...

மக்கள் தமக்குள்ள பிரச்சினைகளை இலகுவில் தீர்த்துக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

"நிலமெகிவர" ஜனாதிபதி மக்கள் சேவை எட்டாவது தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த யூலை மாதம் 2 ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. அன்றைய தினம் அரச அதிகாரிகளுக்கும் அத்திட்டம் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

நேற்று குறித்த திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு தொடர்பாகவும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் நேற்று உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் மற்றும் அரச அதிகாரிகளுடனான கலந்துரையாடல் யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.அதன் போதே குறித்த திட்டத்தின் ஏற்பாடுகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த நடமாடும் சேவை எதிர்வரும் 24ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 14ஆம் திகதி வரை யாழ்.மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக் குட்பட்டவர்களுக்கான சேவை எதிர்வரும் 24 ஆம் திகதி சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியிலும், உடுவில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டவர்களுக்கான சேவை எதிர்வரும் 25 ஆம் திகதி உடுவில் பிரதேச செயலகத்திலும், கரவெட்டி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வர்களுக்கான சேவை எதிர்வரும் 26ஆம் திகதி கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்திலும், மருதங்கேணி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டவர்களுக்கான சேவை எதிர் வரும் 27ஆம் திகதி மருதங்கேணி பிரதேச செயலகத்திலும், கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டவர்களுக்கான சேவை எதிர் வரும் செபரெம்பர் மாதம் 14ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவகல்லூரியிலும், தெல்லிப் பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டவர்க ளுக்கான சேவை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும், யாழ்ப்பாண பிரதேச செய லக பிரிவுக்குட்பட்டவர்களுக்கான சேவை எதிர்வரும் செப்ரெம்பர் 16ஆம் திகதி யாழ்ப் பாண மத்தியகல்லூரியிலும், வேலணை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டவர்களுக் கான சேவை எதிர்வரும் செப்ரெம்பர் 17ஆம் திகதி வேலணை பிரதேச செயலகத்திலும், சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வர்களுக்கான சேவை எதிர்வரும் செப்ரெம்பர் 28ஆம் திகதி சாவகச்சேரி றிபேர்க் கல்லூரியிலும், சங்கானை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டவர்களுக்கான சேவை எதிர் வரும் செப்ரெம்பர் 29ஆம் திகதி வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரியிலும், ஊர்காவற் றுறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டவர்க ளுக்கான சேவை எதிர்வரும் செப்ரெம்பர் 30 ஆம் திகதி புனித அன்ரனிஸ் கல்லூரியிலும், காரைநகர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வர்களுக்கான சேவை எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி காரைநகர் இந்துக்கல்லூரியிலும், நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவுக்கு ட்பட்டவர்களுக்கான சேவை எதிர்வரும் ஒக்டோபர் 12ஆம் திகதி நெடுந்தீவு மகா வித்தியாலயத்திலும், நல்லூர் பிரதேச செய லக பிரிவுக்குட்பட்டவர்களுக்கான சேவை எதிர்வரும் ஒக்டோபர் 13ஆம் திகதி யாழ் இந்துக்கல்லூரியிலும், பருத்தித்துறை பிர தேச செயலக பிரிவுக்குட்பட்டவர்களுக்கான சேவை எதிர்வரும் ஒக்டோபர் 14ஆம் திகதி வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் பிறப்பு அத்தாட்சி பத்திரங்கள், காணி பிணக்குகள், ஆட்பதிவு, சமூக சேவை, மோட்டார் வாகன பதிவுகள் உட்பட பல சேவைகளை பெற்றுக் கொள்ள முடியும். அதில் கொழும்பில் இருந்தும் திணைக்கள உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளதுடன் மக்கள் தமக்கான சேவைகளை இலகுவில் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

தமிழர்களின் காணி...

இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ள பொது மக்களின் காணிகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றதா? இல்லையா? என்பது தொடர்பாக கண்காணிக்கவே நான் இங்கு வருகை தந்தேன் என வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு வவுனியா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் அங்கு வவுனியா, மன்னார் மாவட்டங்களின் அரச அதிபர்கள், இரு மாவட்டங்களினதும் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இக் கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

படையினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பதாக ஜரோப்பிய ஒன்றியத்திடம் அரசாங்கம் வாக்குறுதியளித்திருக்கின்றது. இந்நிலையில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட காணிகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றதா இல்லையா என்பதை கண்டறிவதே எனது விஜயத்தின் நோக்கமாகும்.

தம் வசமுள்ள காணிகளில் 90 சதவீதமானவற்றை கையளித்துவிட்டதாக படையினர் கூறுகின்றனர். இந்தக் காணிகள் அரசாங்க அதிபர்களின் பொறுப்பில் கையளிக்கப்பட்டிருக்க வேண்டும். எனவே, இந்தக் காணிகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றதா? என்ன நடந்துள்ளது. போன்ற விடயங்களை அரசாங்கம் ஜரோப்பிய ஒன்றியத்துக்கு தெரிவிக்க வேண்டும்.

அத்துடன் இடம்பெயர்ந்து இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளவர்கள் பலர் நாட்டுக்குத் திரும்பியிருக்கின்றார்கள். இவ்வாறு நாடு திரும்பியுள்ளவர்களுக்காக மன்னாரில் நடைபெற்ற தூதரக மட்டத்திலான ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்குரிய நடமாடும் சேவையையும் சென்று பார்வையிட்டேன்.

அதன்போது இந்தியாவிலிருந்து நாடு திரும்பியுள்ள குடும்பங்களுடைய காணிகளும் படையினர் வசமுள்ளதாகவும் அந்தக் காணிகள் தங்களுக்கு கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களினதும் காணிகளும் படையினரால் மீள் கையளிக்கப்படவில்லை என முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு அக் காணிகளை பொது மக்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுப்போம் என்றும் தெரிவித்தார். (ம)

நுண்கடன் பிரச்சினை...

மேற்கண்டவாறு கூறினார்.

இதன் போது, ஒரு இலட்சத்திற்கும் குறைவான கடன்களை பெற்று அந்தக் கடனை திருப்பி செலுத்த இயலாத மக்களின் கடனை அரசு செலுத்தவுள்ளது.

இந்நிலையில் பிரதேச செயலக எல்லைக்குள் வாழும் மக்கள் தாம் பெற்ற கடன்களை குறித்து வெளியே சொல்வதற்கு அச்சப்படுகிறார்கள்.

கூடுதலான இடங்களில் கடன்களை பெற்றவர்கள் தொடர்பாக இந்த இடத்தில் நாங்கள் எதனையும் பேச முடியாது. அதனை அரசாங்கத்துடன் கலந்துரையாடிய பின்னரே கூற முடியும் என்றார்.

இந்த விடயம் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வடமாகாணம் முழுவதும் இவ்வாறான பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன. மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

எனவே இங்கு பேசப்பட்ட இந்த நுண் கடன் தொடர்பான விடயங்களை பதிவு செய்து நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து திறைசேரி அதிகாரிகளையும் வைத்து பேசித் தீர்மானங்களை எடுக்கலாம் என மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். (ம)

யாழ்.மாநகர எல்லைக்குள் கடற்கரையோரங்களில் சட்டவிரோத கட்டடங்கள் அகற்றப்படும்

யாழ்.மாநகர முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர எல்லைக்குள் கடற்கரையோரங்களில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருக்கும் கட்டடங்கள் நிச்சயமாக அகற்றப்படும் என யாழ்.மாநகர முதல்வர் இ.ஆனோல்ட் தெரிவித்துள்ளார்.

யாழ்.பிரதேச செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின்போதே மாநகர முதல்வர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொட ர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"குருநகர் மட்டுமல்லாமல் யாழ்.மாநகர சபை எல்லைக்குள் உள்ள சகல கிராமங்களிலும் சட்டத்திற்கு மாறாக கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. ஆனால் அவை தொடர்பாக அந்தந்த கிராமங்களில் வாழும் நகரசபை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டுவதில்லை.

காரணம் அவர்களுடைய வாக்கு வங்கி பாதிக்கப்படும் என நினைக்கிறார்கள். இந்நிலையில் அனுமதி பெறாமல் கட்டப்பட்ட 23 கட்டடங்கள் தொடர்பாக வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளேன். மேலும் சட்ட விரோதமாக மக்கள் மட்டும் வீடுகளையும், கடைகளையும் கட்டவில்லை.

யாழ்.மாநகரில் உள்ள பாரிய வர்த்தக நிலைய கட்டடங்கள் பல சட்டத்திற்கு மாறாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக எந்த அனுமதியும் பெறப்படவில்லை. இங்கே யாரும் நடிக்க தேவையில்லை. மேலும் கரையோரங்களில் கட்டப்பட்டுள்ள சட்டவிரோத கட்டடங்கள் நிச்சயமாக அகற்றப்படும்.

அதில் மாற்று கருத்துக்கு இடமில்லை. அதற்கு முன்னர் அந்த கட்டடங்களில் உள்ள மக்களுக்கான மாற்று திட்டம் ஒன்றை நாம் உருவாக்கவேண்டியது கட்டாயமாகும். அந்த மாற்று திட்டம் வந்தவுடன் கட்டடங்கள் அகற்றப்படும்.

இந்த கரையோரத்தில் உள்ள கட்டடங்களுக்கு யாழ்.மாநகரசபை சோலைவரியில் கூட சட்டத்திற்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

முல்லைத்தீவு நாயாறு பகுதியில் தமிழ் மீனவர்களது வாடிக்கு தீ வைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீன்பிடி அமைச்சர் வருகைதந்து மீனவர்களது பிரச்சினைகளை தீர்த்து சென்ற மறுநாளான நேற்று இரவு முல்லைத்தீவு நாயாறு பகுதியில் தமிழ் மீனவர்களது வாடிகளுக்கு இனம் தெரியாத நபர்களால் தீ வைக்கப்பட்டுள்ளது

குறிப்பாக நாயாறு பகுதியில் தனி ஒருவர் 40 படகுகள் வைத்து தொழில் செய்வதால் தமது தொழில் பாதிக்கப்படுவதாக மீனவர்கள மத்திய மீன்பிடி அமைச்சர் காமினி விஜித் விஜயமுனி சொய்சாவிடம் சுட்டிக் காட்டிய பகுதியில் உள்ள தமிழர்களது வாடிகளுக்கே தீ வைக்கப்பட்டுள்ளது .

இதனால் வாடியில் இருந்த மீனவர்களது பல லட்சம் பெறுமதியான உபகரணங்கள் எரிந்து நாசமாகி உள்ளது

சம்பவ இடத்துக்கு வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனும் குறித்த பகுதி பிரதேச சபை உறுப்பினர் மற்றும் பொலிஸாரும் சென்று நிலைமைகளை பார்வையிட்டு வருகின்றனர்.

இதேவேளை இராணுவம் மற்றும் பொது மக்கள் இணைந்து தீயை அணைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ம-281)

முல்லைத்தீவு தேறாங்கண்டல் பகுதியில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி விவசாயி ஒருவர் படுகாயம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு தேறாங்கண்டல் பகுதியில் விவசாயி ஒருவர் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார்

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்திற் குட்பட்ட தேறாங்கண்டல் பகுதியில் நேற்று முன்தினம் இரவு வயலுக்கு காவலுக்குச் சென்ற விவசாயி ஒருவர் காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி காயமடைந்துள்ளார்.

தேறாங்கண்டல் பகுதியைச் சேர்ந்த நாகலிங்கம் நகுலேஸ்வரன் என்ற விவசாயியே இவ்வாறு காயமடைந்து மல்லாவி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று நேற்று மாலை வீடு திரும்பியுள்ளார். (ம-315)

கட்சியில் இருந்து...

வேண்டும் என ஜக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொது செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற நிகழ்வொன்றை அடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்தே வெற்றி பெற்றுள்ளதாகவும், அவர்களுக்கு ஜக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து விலகி செயற்பட முடியும் என வும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

வடக்கு, கிழக்கில்...

படும்.

அதேநேரம், இன்னும் 400 ஏக்கர் காணியை விடுவிப்பதற்கு அடையாளப்படுத்தியுள்ளதாகவும் விரைவில் அது குறித்த முடிவு மேற்கொள்ளப்படும் என்றும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (ம)

யாழ்.குடாநாட்டு...

பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய், கோப்பாய், ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்புக்களின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

வடக்கில் சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகளை தடுப்பதற்கு, பொலிஸாரும் இராணுவத்தினரும் தேடுதல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர். மேலும் யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய், கோப்பாய் ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புகளின் போதே, 29 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து, ஏழு வாள்கள், எட்டு மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்தோடு, வடக்கில் 53 பொலிஸ் நிலையங்கள் உள்ள போதிலும், 4 பொலிஸ் நிலையப் பகுதிகளில் மாத்திரமே இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் அதிகளவில் இடம் பெறுகின்றன.

பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களை அடுத்தே, வன்முறைக் குழுவினரின் மறைவிடங்களில் இவ்வாறு சிறப்பு சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அடையாளம் காணப்பட்ட சந்தேக நபர்களான இளைஞர்களிடம் எந்த குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரலும் கிடையாது. மாறாக சில போட்டியாளர்களை இலக்கு வைப்பதற்காக, சில பிரதேச அரசியல் வாதிகள், வணி கர்களே இவர்களின் பின்னணியில் இருக்கிறார்கள் என கூறினார்.

யாழ்ப்பாணத்தில், அண்மைக்காலமாக ஆயுதக்குழுக்களின் நடமாட்டம் அதிகரித்து வருகின்றமையால், மக்கள் தொடர்ந்தும் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையிலேயே பொலிஸார், வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 29 பேரை தற்போது கைது செய்துள்ளனர். அதேநேரம், கைது செய்யப்பட்டுள்ளவர்கள் அனைவரும் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

அந்நிய செலாவணி வரு...

ஏற்பட்டதென பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் மூன்றாண்டு நிறைவை முன்னிட்டு பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மக்கள் மயப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்பிரகாரம் குருநாகல் மாவட்டத்திற்கான நீர் வழங்கும் திட்டம் பிரதமரினால் மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், அகில விராஜ் காரியவசம், காமினி ஜயவிக்கிரம பெரேரா உட்பட அமைச்சர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடன் சுமையுடன் கூடிய பொருளாதாரத்தை பொறுப்பேற்றதன் காரணமாக மக்கள்மீது அதிகளவான பாரத்தை சுமத்தி வரிகளை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக நாங்கள் மக்களின் விமர்சனங்களுக்கும் உள்ளானோம்.

எனினும் தற்போது பொருளாதாரத்தை சுமுகமான நிலைக்கு கொண்டு வந்துள்ளோம். ஆகையினால் இனி மேல் மக்களிடம் தூற்று தலுக்குள்ளாக வேண்டிய அவசியம் இல்லை.

அத்துடன் நாட்டுக்கு கிடைக்கும் அந்நிய செலாவணியை நாம் பலப்படுத்த வேண்டும்.

நாட்டின் கடன் சுமை காரணமாக நாட்டின் பொருளாதாரம் சவால்மிக்க தாக காணப்பட்டது. அதனை கட்டியெழுப்பு வதற்கே கடுமையான முயற்சிகளை முன்னெடுத்தோம். எனினும் தற்போது சாதகமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்நிய செலாவணியின் ஊடாக கிடைக்கும் வருமானத்தை அதிகரிப்பதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். முன்பை விடவும் அந்நிய செலாவணியை எம்மால் அதிகரிக்க முடிந்தது. இதற்கமைவாக ஏற்றுமதி வருமானத்தையும் நாம் அதிகரிக்க வேண்டியுள்ளது. ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கும் போதுதான் நாட்டை சீரான நிலைமைக்கு கொண்டு வர முடியும் என்றும் தெரிவித்தார். (ம)

மக்களின் எதிர்பார்ப்புக்களை...

ஊழல்களை இல்லாதொழித்து நீதியான ஆட்சியை நிலைநாட்டுவதற்காகவே மக்கள் தேசிய அரசாங்கத்திற்கு தனது விருப்பினை வழங்கியிருந்தனர்.

ஆனால் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதில் அரசாங்கம் இன்று தோல்வியடைந்துள்ளது.

எவன்காட் பிரச்சினையில் இருந்து மத்திய வங்கி பிணைமுறி மோசடி வரையில் மக்களின் எதிர்ப்பார்ப்புக்கு பாதகமாகவே அமைந்திருந்தது.

ஆகவே அரசாங்கம் முகம் கொடுத்துள்ள சவால்களை எதிர்கொள்ள வேண்டுமானால் மக்கள் தேசிய அரசாங்கம் மீது கொண்டுள்ள எதிர்பார்ப்புக்களுக்கு அரசாங்கம் தீர்வினை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றார். (ம)

நில மீட்பு போராட்டத்தில்...

கள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், எமது போராட்டம் 500 ஆவது நாளை அடைந்தபோது நாம் எமது காணிகள் குறித்து தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கும் மேலும் எமது போராட்ட வடிவங்களை மாற்றுவதற்கும் நினைத்திருந்தோம்.

ஆனால் எமது போராட்டத்திற்கு தமிழ் அரசியல் தலைமைகளோ அல்லது அரசாங்கமோ இதுவரை எந்த ஆக்கபூர்வமான தீர்வுகளையும் தரவில்லை.

நாம் எமது சொந்த நிலங்களையே திருப்பித்தருமாறு கேட்கின்றோம். நாம் எமது விடயத்தில் தமிழ் அரசியல் தலைமைகள் மற்றும் சர்வதேசத்தைப் பெரிதும் நம்பியிருந்தோம்.

ஆனால் 533 நாட்களைக் கடந்தும் இதுவரையிலும் எந்த முன்னேற்றமும் எமது விடயத்தில் இடம்பெறவில்லை. சர்வதேசம் கூட எம்மைத் திரும்பிப் பார்க்கவில்லை.

இனிமேலும் யாரையும் நம்பாமல் நாம் எமது நிலங்களை மீட்பதற்குரிய நடவடிக்கைகளைத் தீவிரமாக முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளோம். அது எவ்வாறான நடவடிக்கைகள் என்பது இன்னும் முழுமையாகத் தீர்மானிக்கப்பட வில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

இலங்கை அரசு...

இந்த நிதி பயன்படுத்தப்படும் முறை தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படவுள்ளதாக கொழும்பின் அமெரிக்க தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

வங்காள விரிகுடாவில் பாதுகாப்பு நடவடிக்கை மற்றும் இலங்கையில் மனிதாபிமானம் மற்றும் அனர்த்த நிவாரண திட்டத்திற்காக இந்த நிதியை பயன்படுத்த அமெரிக்கா எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

மோட்டார் சைக்...

விட்டு துவிச்சக்கரவண்டியில் வீடு நோக்கி சென்றுள்ளார். அப்போது அவரின் பின்னால் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த இருவர் அவரை மோதி விட்டுச் சென்றுள்ளனர்.

இதில் படுகாயமடைந்த நபர் சங்கானை வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்ற அவர் சில மணி நேரங்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

பாகிஸ்தான் கப்...

தந்துள்ள குறித்த கப்பல், நாட்டில் தரித்து நிற்கும் காலப் பகுதியில் இலங்கையின் முக்கிய கப்பல் துறைமுகங்களுக்கு செல்லவுள்ளதுடன் கப்பலில் வருகை தந்துள்ளவர்கள், இலங்கை கடற்படையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நட்புறவு கைப்பந்து போட்டியொன்றிலும் பங்கேற்கவுள்ளனர்.

95 மீற்றர் நீளமும் 12.2 மீற்றர் அகலமும் கொண்ட குறித்த டெசிக் பீ.எம். எஸ்.எஸ் காஷ்மீர் கப்பல் 1550 தொன் கொள்ளளவு கொண்டதென்பதுடன் அதிகாரிகள் ஊழியர்கள் உள்ளிட்ட 74 பேர் வருகை தந்துள்ளனர்.

குறித்த கப்பல் எதிர்வரும் 16 ஆம் திகதி நாட்டில் இருந்து புறப்படவுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. (ம)

யாழ்.சிறைச்சாலை கட்டு...

நகர் மத்தியில் குடிமனைப்பகுதியில் சிறைச்சாலை அமைந்தமைக்கு பலதரப்பினராலும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில்,

குறித்த சிறைச்சாலை அமைப்பதற்கு ஏற்கெனவே திறந்த சிறைச்சாலையாக இயங்கிய கோப்பாய் இராசபாதை வீதியில் அமைந்துள்ள (தற்போது இராணுவம் தங்கியுள்ள) காணிக்கு மாற்றப்பட வேண்டும் என்றும் தற்போது அனுமதி இன்றி அமைக்கப்பட்ட யாழ் சிறைச்சாலை காணியையும் கட்டிடத்தையும் பொருத்தமான வகையில் பொதுப்பயன்பாட்டிற்கு (யாழ் போதனாவைத்திய சாலைக்கு) மாற்றப்பட வேண்டும்என கடந்த மே மாதம்இடம் பெற்ற பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தநிலையில்தற்போதும் குறித்த சிறைச்சாலையில் சிறைக்கூடங்கள், விடுதிகள், சுத்திகரிப்பு திட்டம் போன்ற கட்டுமானப்பணிகள் இடம்பெற்று வருவதாக நேற்று இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த கட்டுமான பணிகள் எவருடை அனுமதியும் இன்றி தன்னிச்சையாக நடைபெறுகிறது என்றும் இந்த விடயத்தில் பொறுமை காக்காமல் உடனடியாக நீதிமன்றில்வழக்கு தொடர வேண்டும்என மக்கள் பிரதிநிதிகளால் வலியுறுத்தப்பட்டது.

அந்த வகையில், குறித்த சிறைச்சாலை கட்டுமான பணிகளை நிறுத்த வேண்டும் என்றும், யாழ் மாநகர சபை சிறைச்சாலைக்கு எதிராக வழக்கு தாக்கல் உடனடியாக செய்ய வேண்டும் என்றும், இந்த சிறைச்சாலை நகர் மத்தியில் இல்லாமல் உடனடியாக கோப்பாய்க்கு மாற்றப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றும் நேற்றைய கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-9)

சபாநாயகரை ஏற்றுக்கொள்...

முடியாத நிலைமை ஏற்படும்என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கம்மன்பில இதனை கூறியுள்ளார். மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைய சபாநாயகர் அங்கீகரிக்க வேண்டியது கட்சியை அல்ல அணியை.

கடந்த 2004ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் இருந்து வெளியேறிய போது, அன்று இருந்த சபாநாயகர் அவர்களை எதிர்க்கட்சியின் தனியான அணியாக அங்கீகரித்தார் என குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை தற்போதைய பொலிஸ்மா அதிபர் அரசியலில் ஈடுபடுகிறார் என்பதற்கான சாட்சியங்கள் என்னிடம் உள்ளன.

பேஷ்புக் வகைப்படுத்தல்களுக்கு அமைய பொலிஸ்மா அதிபரின் பேஷ்புக் கணக்கு அரசியல்வாதிகளின் வகைப்படுத்தல்களுக்குள் வருகின்றது. பொலிஸ் சீருடையில் அரசியலில் ஈடுபடுவது தொடர்பாக தற்போதைய பொலிஸ்மா அதிபருக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும்.

அவர் அறியாமல் இதனை செய்கின்றார் என்றால், அதனை செய்யும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார். (ம)

பஸ்ஸை அடித்...

கப்பட்டதுடன் அதனைத் தீக்கிரையாக்கவும் முயற்சிக்கப்பட்டுள்ளது. அச்சுவேலி - யாழ்ப்பாணம் பயணிகள் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் மீதே இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் ஈடுபட்ட வாள்வெட்டுக் குழுவினர், அங்கிருந்து தப்பிச் சென்று விட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இரவு 11 மணியளவில், இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத நபர்கள், பஸ்ஸின் கண்ணாடிகளை அடித்து டைத்துச் சேதப்படுத்தியதுடன், பஸ்ஸை பெற்றோல்ஊற்றி தீயிட்டு எரிப்பதற்கும் முயற்சித்துள்ளனர்.

பஸ்ஸை அடித்து நொருக்கும்சத்தத்தைக்கேட்டுவெளியே வந்த உரிமையாளரையும் அக்குழுவினர்வெட்டுவதற்கும் முயற்சித்துள்ளனர்எனவும்பொலிஸார் தெரிவித்தனர். (ம-9)

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
11 kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 kg க்கான கட்டணம்
UK-550/-
France - 700/-
Germany - 650/-
Swiss - 750/-
Canada - 1100/-
ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள்
திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்
077 755 4528
3-5 Working Days
DHL aramex SKYNET

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
மானிப்பாய் 0768226240
யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ●சாவகச்சேரி
●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை
V2 TRAVELS

வேலைவாய்ப்பு - 2018
எமது அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் யாழ் புதிய கிளைகளிற்கு முகாமைத்துவத்துறையில் பயிற்சிக்கான நேர்முகத்தேர்வு ஆரம்பமாகவுள்ளது. (தகுதி O/L Pass) 90 நாட்கள் பயிற்சியின் பின்பு சார்வதேச ரீதியாக வணிகத்துறையில் இணைந்த எமது நிறுவனத்திலே நிரந்தரமான பதவிகளும் வழங்கப்படும். யாழ் மாவட்டத்தினைத் தவிர்ந்த வெளிமாவட்டத்தினருக்குப் பயிற்சிக்காலத்தில் தங்குமிட வசதி. பயிற்சியின் போது 15,000/= - 25,000/= வரை பெற்றுக்கொள்ள முடியும். பயிற்சியின் பின் மாதமொன்றிற்கு 45,000/= க்கு அதிகமான கொடுப்பனவும் வேறு சலுகைகளும் உண்டு.
தொடர்பு :- 077 157 1699
(5359)

காணி விற்பனைக்கு
பலாலி வீதியில் அமைந்துள்ள விவசாயப்பண்ணைக்கு அருகில் நிலப்பரப்பு 5 குளி 0.50 விஸ் தீரணமுடைய காணி கட்டிடத்துடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகள்:- 076 702 3565
குறிப்பு:- திருமண மண்டபம் மற்றும் வைத்தியசாலைகளுக்கு உகந்த இடம்.
(5357)

Career Opportunities
பயிற்சி நெறியுடன் கூடிய நிரந்தர வேலை வாய்ப்பு....
எமது நிறுவனமானது புதிய கிளைகளிற்குரிய கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்யவுள்ளது.
1. அலுவலகர் — கவர்ச்சியான சம்பளத்துடன் கூடிய பதவி உயர்வு.
2. உ.முகாமையாளர்
3. மேற்பார்வையாளர் — குறிப்பு : இவ்வருடம் O/L, A/L படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. எழுதுநர்
5. விற்பனையாளர்
தொடர்புகளுக்கு : 077 985 8580, 076 795 8499, 021 722 2317
(5358)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.